


பன்மொழிப் புலவர்

மு. சு. சிவம்

வாழ்க்கைக் குறிப்புக்களும் தமிழுக்குச் செய்த ஆக்கப்பணிகளும்

புலவர் இரா. வடிவேலன், க. மு.,

பன்மொழிப் புலவர்

மு. ச. சிவம்

வாழ்க்கைக் குறிப்புக்களும் தமிழுக்குச் செய்த ஆக்கப் பணிகளும்

1959

புலவர் இரா. வடிவேலன், க. மு.,

மீரா நிலையம்,
35, பாப்பாத்தி காடு முதல் தெரு,
ஈரோடு — 4.

முதற்பதிப்பு : டிசம்பர் 1980

மீரா நிலையம்,
35, பாப்பாத்தி காடு முதல் தெரு,
ஈரோடு-4.

Mu. Sa. Sivam Vaalkkaik Kurippukkalum Tamilukkuc Ceita Aakkap Panikalum

விலை ரூ. 6-00

முத்துநாராயணன் அச்சகம், ஈரோடு.

முன்னுரை

அறிஞர்களையும் தலைவர்களையும் உருவாக்கிச் சிறப்புற்று விளங்கும் நகரம் ஈரோடு மாநகரம்.

இங்கு தான் கணித அறிஞர் இராமாநுசமும், புரட்சிப் பெருந்தலைவர் தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும் தோன்றியும் வளர்ந்தும் சிறப்புற்றார்கள்.

இந்நாளில் பல தமிழறிஞர்கள் இந்நகரின் கண் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களில் குறிப்பிடத்தக்க நற்றமிழ் அறிஞர் **மு. ச. சிவம்** அவர்கள். அவர் ஈரோடு வாசவிக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றுபவர். பன் மொழிகளைக் கற்ற புலமையாளர் ; நாநலம் மிக்க நாவலர் : செந்தமிழில் அகராதிக் கலை வளர்க்கும் அருந் தொண்டர் ; திறனாய்வுக் கலையிலும் சீர்பெற்று மிளிர்பவர். குழந்தை போல் பழகும் மெல்லியல் நெஞ்சினர் !

என்னரும் நண்பரான பேராசிரியர் மு. ச. சிவம் அவர்கள் கடந்த இருபதாண்டுக் காலத்தில் நூற்றைம்பதுக்கும் மேற்பட்ட நூல்களைத் தொகுத்தும், வகுத்தும், படைத்தும் தந்துள்ளார்கள். பிறர் நுழைவதற்கு அஞ்சும் அகராதித் துறைவாய் நுழைந்து பல்வேறு வகையான அகராதிகளைத் தொகுத்திருப்பதைக் கண்டால் அவர்தம் உழைப்பின் பெருமை வெள்ளிடை மலையாய் விளங்கும், பல்கலைக்கழகங்கள் எடுத்துச் செய்யும் பெரும் பணிகளைத் தனியொருவரே ஆற்றியிருக்கும் உழைப்பின் திண்மை வியக்க வைக்கும் ! இவருடைய பேராற்றலை வியந்து செக் நாட்டுத் தமிழறிஞர் திரு. கமில் சுவலபில் அவர்களே பாராட்டி யுள்ளார். (பக்கம் 139)

அமைதியும் அடக்கமும் உருவான திரு. மு. ச. சிவம் அவர்கள் குன்றிலிட்ட விளக்கென விளங்க வேண்டும் ; அவர் தம் உழைப்புத் தமிழுலகத்திற்குத் தெரிய வேண்டும் என்ற ஆர்வத்தின் துடிப்பாகவே அவருடைய வாழ்க்கைக்

குறிப்புகளையும், தமிழுக்குச் செய்த ஆக்கப் பணிகளையும் பற்றி அவரிடம் கேட்டறிந்தவற்றை முடிந்த வரையில் சுருக்கி இந்நூலை உருவாக்கியுள்ளேன்.

1981 ஆம் ஆண்டு சனவரித் திங்களில் மதுரையில் நடைபெறும் 5-வது உலகத் தமிழ் மாநாட்டில் தமிழறிஞர்களுக்-கிடையே இவரையும், இவர்தம் படைப்புகளையும் அறிமுகப் படுத்தவும், தமிழகம்அறியவும் இந்நூல் தொகுக்கப்பெற்றது.

உயிருடன் இருப்பவர்களைப் பற்றிய குறிப்புகள் பலப்பல இதிலுண்டு. இவற்றுள் சில இன்பமும் சில துன்பமும் தொடர்புடையாருக்குத் தரலாம். அவை பேராசிரியரின் வாழ்வில் பட்டறிந்தவைகள்!

நற்றமிழ்ப் பேராசிரியரான மு ச. சிவம் அவர்கள் தம் நூல்களின் சிறப்புகளைப் பற்றி அவரே எழுத விரும்பாமையின் இந்நூலை யான் உருவாக்க முற்பட்டேன்.

"புலமிக்கவரின் புலமை தெரிதல் புலமிக்கவர்க்கே புலனும்" அன்றோ?

நண்பரின் திறமையை நானறிந்தேன். அதை நற்றமிழ் உலகத்திற்குத் தெரிவிப்பது எனது கடமையென எண்ணினேன்; இதைத் தொகுத்தளித்தேன். செல்வர்களும் தமிழன்பர்களும் இவர் தொகுத்துள்ள அகராதிகளை வெளியிடத் தக்க உதவிகளைச் செய்வார்களாக!

தமிழக அரசும் இவருக்கு ஆக்கம் தருவதாகுக!

ஈரோடு
20—12—80

இரா. வடிவேலன்

பதிப்புரை

"ஒரு மொழியின் பெருமையை உணர்த்தும் நூல்களில் அகராதியும் ஒன்றாகும்" என்பர், மொழிஞாயிறு உயர்திரு. தேவநேயப் பாவாணர் அவர்கள். யான் தொகுத்துள்ள அகராதிகள் தமிழின் பெருமைகளை உலகுக்கு உணர்த்த வல்லவை. இதுவரை ஏறக்குறைய இருபது நூல்கள் வெளி வந்துள்ளன

ஆராய்ச்சியாளர்களுக்கு மட்டும்பயன்படும்அகராதிநூல் களைத் தொகுப்பதற்கும், சில வெளியிடுவதற்கும் யான்பட்ட தொல்லைகள் கணக்கில் அடங்காதவை.

காரைக்குடி கம்பன் அடிப்பொடி உயர்திரு. சா. கணேசன் அவர்கள், தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் உயர்திரு. டாக்டர் ச. வே. சுப்பிரமணியம் அவர்கள், தென்மொழி ஆசிரியர் பாவலரேறு உயர்திரு. பெருஞ்சித்திரனார் அவர்கள், மொழி ஞாயிறு உயர்திரு. தேவநேயப் பாவாணர் அவர்கள், திருக்குறளார் உயர்திரு. வீ. முனுசாமி அவர்கள் போன்றோரின் ஊக்க உரைகளால் தான் இப்பணியில் உள்ள இயல்பான ஆர்வத்தோடு மேலும் முனைந்து செயல்படுகிறேன்.

சில நூலகங்களில் இருபதாண்டுகளுக்கு முன்பு பார்த்த பல நூல்கள் இப்போது மறைந்து விட்டன! படிப்பாரின்மை யால் சிற்றிலக்கியங்கள், புராணங்கள் முதலியவை விரைவாக மறைந்துகொண்டு வருகின்றன. கடல் கோளால் அழிந்த நூல்களைக் காட்டிலும் காலவெள்ளத்தால் அழிந்த நூல்களே மிகுதி என்பதே என் கருத்து. இஃது தவிர்க்கப்பட முடியாததொன்று. எனினும் இப்போது கிடைக்கின்ற எல்லாத் தமிழ் நூல்களையும் படித்துச் சொற்கள், சொற்றொடர்கள், நயங்கள், நல்ல கருத்துக்கள், உவமைகள், கற்பனைகள் முதலியவற்றைத் தொகுக்க வேண்டும் என்பதே என் வாழ்வின் குறிக்கோள் பணியாகும். இதற்காகத் தமிழகம். பிற மாநிலங்கள் முதலியவற்றிற்குத் 'தலயாத்திரை' மேற்

கொண்டு குறிப்புகளைத் தொகுத்து வருகிறேன். இவற்றின் மூலம் தமிழில் வழங்கும் எல்லாச் சொற்களையும் முடிந்த வரை தொகுத்துவிட வேண்டும் என்ற துடிப்புணர்வுடன் செயல்பட்டு வருகின்றேன்.

ஆக்சுபோர்டு பதிப்பகத்தார் வெளியிட்டுள்ள ஆங்கில அகராதியைத் தொகுக்கப் பல்லாயிரம் அறிஞர்கள் துணை செய்தனர். பல தமிழறிஞர்களும் அரசும் தக்க துணை செய்தால் வரலாற்று முறைப்படியான தமிழ்ப் பேரகராதியைத் தொகுத்து ஆங்கிலத்தினும் வளம் மிக்கது தமிழ்மொழி என்ற உண்மையை நிலைநாட்ட முடியும்.

உயர்திரு ச. வே. சுப்பிரமணியம் அவர்கள் வற்புறுத்தி வரும் வரலாற்றுமுறைத் தமிழகராதியை ஆங்கிலம், பிரெஞ்சு செருமன், இத்தாலியன் முதலிய மேனாட்டு மொழிகளில் காணப்படுவது போன்று தமிழிலும் உருவாக்க வேண்டும். உலகப்பெரு மொழிகளின் வரிசையில் வைத்துத் தமிழ் எண்ணப்பட வேண்டும் என்பதே எனது இப்பிறவி ஆசை.

அகராதி ஆராய்ச்சிக் கழகத்திற்கு வாழ்த்துரைகளும் அதன் வளர்ச்சிக்கான கருத்துரைகளும் வரவேற்கப்படுகின்றன.

இந்நூலைக் குறித்த காலத்திற்கு முன்னதாகவே அழகுற அச்சிட்டுத் தந்த ஈரோடு முத்து நாராயணன் அச்சகத்தின உரிமையாளர் திரு நா. நாச்சிமுத்து அவர்களுக்கும், அச்சிடுவதில் உதவிகள் செய்த அவர் மகனார் திரு. நா. சண்முகசுந்தரம் அவர்களுக்கும் என் நன்றிகள் உரியவாகுக.

மு. ச. சிவம்

பன்மொழிப் புலவர்,
பேராசிரியர்
மு. ச. சிவம்
அவர்களின்

வாழ்க்கைக் குறிப்புக்களும்
தமிழுக்குச் செய்த
ஆக்கப் பணிகளும்

இளமைக் கல்வியும் தமிழார்வமும்

கொங்கு நாட்டின் ஒரு பகுதியான குன்று சூழ் சேலம் மாவட்டம் திருச்செங்கோடு வட்டத்திலுள்ள உஞ்சனைக் கவுண்டம்பாளையம் என்ற சிற்றூரில் 1936 இல் பிறந்த மு ச. சிவம் பிற்காலத்தில் பல்லாயிரம் நூல்களோடு ஒட்டி உறவாடுவதற்கு முன்னோடியாகப் பாவு நூலுடன் ஊடு நூல் சேர்த்து இவர் தம் தந்தையார் திரு வி. வை. முருகேசன் செய்து வந்த நெசவினைச் செய்து கொண்டே உயர்நிலைப் பள்ளிக் கல்வியை முடித்தார். தார் சுற்றுவதிலும் பாவு ஓடுவதிலும் இவர் தம் தாயார் திருமதி பொன்னம்மாள் அவர்கள் மிகவும்தேர்ந்தவர். நெசவிற்கு அது மிகவும் இன்றியமையாதது. சிறு வயதிலேயே இவர் பெற்றோர்க்குத் துணையாக நெசவுத் தொழிலைச் செய்து வந்தார்.

பிறந்த ஊரில் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் ஐந்தாவது வரை படித்த இவர் ஆறுவது வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை உலகப்பம்பாளையம் என்ற ஊரில் இருந்த நடுநிலைப்பள்ளியில் படித்தார். ஆறுவது வகுப்பில் படிக்கும் போதே பதினோராம் வகுப்புத் தமிழ்ப்பாடங்களுக்குரிய பாட நூலைப்படித்துக் கம்பராமாயணம், திருக்குறள், நளவெண்பா முதலிய நூல்களில் பற்றுக் கொண்டார். இவரது தமிழ்ப் பற்று உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர்களால் உரமிட்டு வளர்க்கப் பெற்றது.

நாள்தோறும் எட்டுக்கல் தொலைவிலுள்ள திருச்செங்கோடு உயர்நிலைப் பள்ளிக்கு மிதிவண்டியில் சென்று வந்து இரவு நெடுநேரம் வரை தறிக்குழியில் மிதிப்பலகை ஓட்டுவார். படிப்பதற்குப் போதிய நேரங் கிடைக்காததால் தறி நெய்யும் போது பக்கத்திலேயே புத்தகத்தை வைத்துப் படித்து வந்தார். மனப்பாடம் செய்ய வேண்டிய பாடங்களைத் தாளில் எழுதி வைத்து மிதிவண்டியில் பள்ளிக்குச் செல்லும் போதும், பள்ளியிலிருந்து திரும்பும் போதும் படித்துக் கொண்டே மிதிவண்டி ஓட்டிச் செல்வார்.

1952 ஆம் ஆண்டு பள்ளி இறுதித் தேர்வில் முதல்மதிப் பெண் பெற்றுத் தேர்ந்தார். உயர்நிலைப் பள்ளியில் இவரது தமிழார்வத்தை ஊட்டி வளர்த்தவர் தமிழாசிரியர் உயர்திரு **ஆ. பொன்னுசாமி பிள்ளையவர்கள்** ஆவர் 'புன்னகை அரசான' புலவர் திரு. **க. ப. கண்ணன்** அவர்கள் ஆசிரியராக அமையாது போயினும் மாணவரான மு. ச. சிவம் அவர்களுக்கு உற்றதோழராய் நல்லகருத்துக்களை நவின்று வந்தார்.

வறுமை காரணமாக மேற்படிப்புக்கு அனுப்பமுடியாமல் பெற்றோர் தவித்தனர். உற்றோர் சிலர் பள்ளியில் முதல் மாணவராகத் தேறிய இவரை எப்படியாவது மேற்படிப்புக் கனுப்பிக் கடைத்தேற்றலாம் என்ற விருப்புக் கொண்டு கல்லூரியில் சேருவதற்குப் பொருளுதவி செய்தனர். தாம்பரம் கிறித்தவக் கல்லூரிக்கு முதலில் விண்ணப்பம்

அனுப்பினர். 77 விழுக்காடு மதிப்பெண் பெற்றிருந்த இவருக்கு அக்கல்லூரியில் இடம் கிடைக்கும் என்ற நம்பிக்கை இருந்தது. அதனுல் வேறு கல்லூரிக்கு விண்ணப்பம் அனுப்பாதிருந்தார். பதினைந்து நாட்கள் கழித்துக் கிறித்தவக் கல்லூரியிலிருந்து எதிர்பார்த்தபடி சேர்த்துக் கொள்ளப்பட்டதாகக் கடிதம் வரவில்லை, மாருக விண்ணப்பமே திருப்பியனுப்பப் பெற்றது. காரணம் ஒரே ஒரு சிறுபிழை தான்! திருத்திக் கொள்ளக்கூடிய பிழைதான்! ஆனுல் அச்சிறு பிழைக்காக ஒரு பெரும் வாய்ப்பை இழக்க நேரிட்டது. ஆம், கிறித்தவக் கல்லூரியில் சேர்ந்திருந்தால் ஆங்கில இலக்கியத் துறையிலே சேர்ந்திருப்பார். பள்ளியிறுதி தேர்வில் வெற்றிபெற்ற ஆண்டு 1952 என்பதற்குப் பதிலாக 1951 என்று அவசரத்தில் எழுதி விண்ணப்பம் அனுப்பப் பெற்றதால் விண்ணப்பம் திருப்ப அனுப்பப் பெற்று விட்டது. ஒரு சிறு பிழையைத் திருத்தியனுப்பாத பேராசிரியர் பிற்காலத்தில் இருபதாண்டுகளுக்கு மேலாக மாணவர்களின் கட்டுரை ஏடுகளில் ஆயிரக்கணக்கான பிழைகளைத் திருத்தும் தண்டனையைப் பெற்ருர்!

இப்போது மதுரையில் காந்தி அமைதி நிறுவனக் கிளையின் மேலாளராகத் திகழ்பவரும், சர்வோதயத் தலைவர் உயர்திரு. எசு. ஆர். சுப்பிரமணியம் அவர்களைப் போலவே காந்திய நெறியைப் பரப்புவதற்காகவே திருமணம் செய்து கொள்ளாமலேயே வாழ்நாள் முழுதும் தொண்டு செய்து வருபவருமான திரு. க. ர. சுந்தசாமி அவர்கள், திருச்செங்கோடு உயர்நிலைப் பள்ளியில் மு. ச. சிவம் அவர்களுக்கு ஓராண்டு முன்னதாகப் படித்துத் தேறியிருந்தார். பச்சையப்பன் கல்லூரியில் தமிழ் படித்துக் கொண்டிருந்த அவர் மு. ச. சிவம் அவர்களை இலயோலாக் கல்லூரிக்கு அழைத்துச் சென்ருர்; உடனே அக்கல்லூரியில் இடங் கொடுக்கப் பெற்றது!

இலயோலாக் கல்லூரியில் கணிதப் பிரிவைச் சிறப்புப் பாடமாக எடுத்துக் கொண்டார். ஆனுல் கணக்கு அவரை வணக்கியது. தமிழ் தண்ணளி செய்து ஆட் கொண்டது.

ஓய்வு நேரங்களில் எல்லாம் தமிழ் நூல்களைப் படித்தார். அவற்றுள் எட்டுத்தொகை நூல்களுள் ஒன்முன குறுந் தொகையில் உள்ளத்தைப் பறிகொடுத்தார். இண்டர்மீடியட் தேர்வு முடிந்ததும் தமிழ்த்துறைவாய் நுழைந்திடத் துடித்தார். பொறியியல் கல்லூரியில் சேர வாய்ப்புப் பெற்றிருந்தும் குறுந்தொகையால் திசைமாறிய பறவை யாய்த் தமிழ்த்துறையில் நுழைந்தார்.

இலயோலாக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த போது ஏற்கனவே மாணவர்களிடையே பெரும் புகழ் பெற்றிருந்த பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் **டாக்டர் மு வரதராசனுர்** அவர்களின் வகுப்பிற்குச் சென்று பாடங்கேட்கும் விருப்பங் கொண்டிருந்தார். 1953 ஆம் ஆண்டில் ஒருநாள் இலயோலாக் கல்லூரியிலிருந்து விடுப்பு எடுத்துக் கொண்டு பச்சையப்பன் கல்லூரிக்கு நடந்து சென்று டாக்டர் மு. வ. அவர்களின் முன் இசைவு பெற்று வகுப்பறையுள் அமர்ந்து பாடம் கேட்டார். இப்போது மதுரைப் பல்கலைக் கழகத்தில் திருக்குறள் துறையில் பேராசிரியராக உள்ள **டாக்டர். முருக. இரத்தினம்** அவர்கள் அப்போது நான்காம் ஆண்டுத் தமிழ்ச்சிறப்பு வகுப்பில் படித்துக் கொண்டிருந்தார். திரு க. ர. கந்தசாமி அவர்களின் பரிந்துரையை ஏற்றுத் திரு. முருக. இரத்தினம் அவர்கள் டாக்டர் மு. வ. அவர்களிடம் முன்னிசைவு பெற்றுத்தந்தார். மு. ச. சிவம் அவர்களின் ஒரு நாள் பேராசிரியரான டாக்டர் மு. வ. அவர்கள் அன்று நடத்திய அகநானூற்றுப் பாடம் இன்றும் மு. ச. சிவம் அவர்களின் உள்ளத்தில் பசுமரத்தாணி யெனப்பதிந்துள்ளதாம். கவிஞர். மரிய விசுவாசம் தொகுத்த "முயற்சியின் வழிகாட்டி மு. வ." என்ற நூலில் "என் ஒரு நாள் பேராசிரியர்" என்ற தலைப்பில் மு. ச. சிவம் அவர்கள் சில பாடல்களைப் படைத்துள்ளார்.

மற்றொரு நாள் அதுபோலவே **பேராசிரியர் அன்பழகன்** அவர்கள் பாடம் நடத்திய வகுப்பிற்கும் சென்று பாடங் கேட்டார். திருச்செங்கோடு பாராளுமன்றத் தொகுதியில்

அ. தி. மு க. சார்பில் இதற்கும் முந்திய தேர்தலில் வெற்றி பெற்றவரும், திருச்செங்கோடு உயர்நிலைப் பள்ளியில் பள்ளி மாணவர் தலைவராகத் திகழ்ந்தவரும், மு. ச. சிவம் அவர் களின் வகுப்புத் தோழருமான உயர்திரு. **ஆர். குழந்தைவேல்** அவர்கள் பேராசிரியர் அன்பழகன் அவர்களிடம் இசைவு பெற்றுத் தந்தார். பேராசிரியர் அன்பழகன் அவர்கள் வகுப்பில் அரைமணிநேரம் ஒழுங்காகவும், அழகாகவும் முறையாகவும், இலக்கிய நயத்துடனும் பாடத்தை நடத்தி விட்டுப்பிறகு அரைமணி நேரம் பகுத்தறிவுக் கண் கொண்டு திறனாய்வு செய்யும் பான்மை பெற்றிருந்தமை கண்டு மகிழ்வுற்றார்.

1953 ஆம் ஆண்டு **தமிழ்த்தென்றல் திரு** வி. க. அவர்கள் மறைவதற்குச் சில திங்கள் முன்னதாகச் சென்று மு. ச. சிவம் அவர்கள் தமிழ்த் தென்றலின் நல்லாசியைப் பெற்றார். அப்போது கண்பார்வையை இழந்திருந்த திரு. வி. க. அவர்கள் மு ச, சிவம் அவர்களின் கைகளைப்பற்றி அன்பினால் தடவி ஆர்வம் பொங்க **''மறுபிறப்பில் மீண்டும் தமிழ் நாட்டிலேயே பிறந்து தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் தொண்டாற்ற விரும்பு கிறேன்''** என்று கூறினாராம்.

''இண்டர் மீடியட்'' தேர்வில் வெற்றியுற்றதும் தமிழார்வம் பொங்கித் ததும்பிய மு. ச. சிவம் அவர்களைத் தமிழ் வளர்க்கும் பல்கலைக் கழகமான அண்ணாமலைப் பல்கலைக் கழகம் ''ஒல்லை வா'' என அழைத்தது. அன்று முதல் இன்று வரை 'அன்பர்' என்று எல்லோராலும் அன்புடன் அழைக்கப் பெறுகின்றவரும், அரசினர் கலைக்கல்லூரித் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றுபவரும், அப்போது பி. ஓ. எல். வகுப்பில் ஒரே ஒரு மாணவராக அமர்ந்திருந்து பத்து ஆசிரியர்களின் அறிவுச் செல்வத்தைத் தன்னந் தனியாகப் பெற்று வளர்ந்தவரும், பழகுதற்கினிய பண்பினருமான உயர்திரு. **க. அரங்கசாமி** அவர்கள் முன் பின் பழக்கமில்லாத மு. ச. சிவம் அவர்களையும் **பேராசிரியர் டாக்டர். சிதம்பர நாதன்** அவர்களிடம் அழைத்துச் சென்று அறிமுகப்படுத்

தினர். உடனே டாக்டர் அ. சிதம்பரநாதன் அவர்கள் தமிழில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றிருந்த மு.ச. சிவம் அவர்களைத் தமிழ்த் துறையிலிருந்து அலுவலகக் கட்டிடத்திற்கு அழைத்துச் சென்று விண்ணப்பம் வாங்கிக் கொடுத்து அரை மணி நேரத்துக்குள் தமிழ்ச் சிறப்பு வகுப்பில் (ஆனர்சு வகுப்பில்) சேர்த்து மு. ச. சிவம் அவர்களின் ஆராத தமிழ்க் காதலை வளர்த்துக் கொள்ளும் நல்ல வாய்ப்பினை நல்கினர். மு. ச. சிவம் அவர்கள் மூன்றாண்டுகள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் "ஆசைதீரத்" தமிழைப் பயின்றார்.

மேலும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் மாலைதோறும் வெவ்வேறு துறைகளில் நடைபெற்று வந்த சிறப்புக் கூட்டங்களுக்குச் சென்று வெவ்வேறு துறைகளைப் பற்றிய கேள்விச் செல்வம் பெற்றார். சிறப்புச் சொற்பொழிவுகள் முடிந்ததும் கேள்வி நேரத்தில் முதல் கேள்வி தொடுப்பவர் பெரும்பாலும் மு. ச. சிவம் அவர்களாகத்தான் இருக்கும்.

வடமொழித் துறையில் நடைபெறும் கூட்டங்களுக்கும் தவறாது மு. ச. சிவம் அவர்கள் சென்றார். பெரும்பாலும் வடமொழித் துறையில் சொற்பொழிவுகள் கேட்க வருபவர் அக்காலத்தில் மிகக் குறைவாகவே இருந்தனர். அதனால் மு. ச. சிவம் அவர்களுக்கு வடமொழித் துறையில் எப்போதும் சிறப்பான வரவேற்புக் காத்துக் கொண்டிருக்கும். தமிழ்த் துறையிலிருந்து ஒருவர் வடமொழித் துறைக்கு வருவது வடமொழித துறையிலிருந்த அனைவருக்கும் வியப்பைத் தந்தது. வடமொழித்துறைப் பேராசிரியர் முதல் மாணவர் வரை எல்லாரும் மு ச. சிவம் அவர்களுக்கு உற்ற நண்பராயினர்.

இப்போது திராவிடர் கழகத் தலைவராயிருக்கும் திரு. கி. வீரமணி அவர்களுடன் ஓராண்டு ஆங்கிலப் பொது வகுப்பில் ஒன்றாய்ப் பயிலும் வாய்ப்பு மு. ச. சிவம் அவர்களுக்கு ஏற்பட்டது சமயத் துறையில் ஈடுபாடு கொண்டிருப்பினும் மு. ச. சிவம் அவர்களைக் கொள்கை அடிப்படையில் நோக்காது அன்பின் அடிப்படையில் இன்னும் நண்பராகக்

கருதிவரும் திரு. வீரமணி அவர்களின் நட்பின் திறம் போற்றுதற்குரியது.

மாணவர்களின் வேலைநிறுத்தம் நின்றிருந்த அந்தக் காலப் பகுதியில் (1954—57இல்) அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அடிக்கடி தமிழ் மாநாடுகள், தமிழறிஞர்களின் சொற்பொழிவுகள் நிகழ்ந்த வண்ணமிருந்தன. தமிழறிஞர்களின் சொற்பொழிவுகள் மு. ச. சிவம் அவர்களின் தமிழார்வத்தீயை மேலும் கொழுந்து விட்டு எரியச் செய்தன.

இக் காலத்தில் அரசியல் தலைவர்களுள் ஒருவராக விளங்கும் திரு. கலிவரதன் அவர்களின் கனல் தெறிக்கும் பேச்சுக்கள் அப்போது அடிக்கடி கோகலே மண்டபத்தை அதிரச் செய்யும். திராவிடகழகத் தலைவர் உயர்திரு கி. வீரமணியின்வீராவேசப்பேச்சுகள் வெளியூர்களில் அடிக்கடி நிகழ்ந்து வந்தன. ஒரு சிலருக்கே இயற்பெயருக்கேற்ற பண்புகள் இயல்பாய்ப் பொருந்திக் காணப்படும். அவர்களுள் ஒருவர் திரு கி. வீரமணி அவர்கள். மணியான பகுத்தறிவுக் கருத்துக்களை வீரஞ் செறிந்த முறையில் விளக்கிக் கூற வல்லவர் அவர்.

தில்லை நடராசப் பெருமான் கோவிலுக்கு அடிக்கடி சென்று வழிபாடு செய்து வந்த மு. ச. சிவம் அவர்கள் கோவிலிலிருந்து வரும் வழியில் தில்லையில் நடைபெறும் அரசியற் கூட்டங்களையும் கேட்கத் தவறுவதில்லை. அடிக்கடி தந்தை பெரியார் பேசும் கூட்டங்கள் சிதம்பரத்தில் நடைபெறும். மணிக்கணக்காகப் பெரியார்பேசும் பேச்சுக்களைக் கேட்டு மகிழ்வார்.

ஆராய்ச்சிப் பரிசுகள் – தங்கப் பதக்கங்கள்

தமிழின்பத்தில் இடையறாது தோய்ந்து கொண்டிருந்த மு.ச. சிவம் அவர்கள் தமிழாராய்ச்சியிலும் ஈடுபட்டார் தமிழ் வகுப்புகளில் நாள்தோறும் வினாக்களைக் கேட்டுக் கொண்டேயிருப்பார். பாடம் நடத்தும்போது வினாக்கள் கேட்கப்படுவதை விரும்பாத பண்டாரகர் அ. சிதம்பரநாதன் அவர்

களிடம் மற்ற மாணவர்கள் ஐய வினுக்கள்கேட்பதற்கு அஞ்சுவர். ஆனுல் மு. ச. சிவம் அவர்கள் தமிழ்த் துறைத் தலைவர் திரு. அ. சிதம்பரநாதன் அவர்களிடமும் ஐய வினுக்கள்எழுப்புவதை விட்டு விடாமலிருந்தார். ஒரோவழி அறி வினுக்களும் எழுப்புவதறிந்து ஆசிரியப் பெருந்தகை உயர்திரு இராமசாமிப் பிள்ளையவர்கள் மு. ச. சிவம் அவர்களின் கேள்விகளுக்கெல்லாம் சிரித்து மழுப்பி விடுவார்.

சிதம்பரம் மணிவாசகர் நூலகத்தின் தலைவரான **உயர்திரு ச. மெய்யப்பன்** அவர்களுடன் வகுப்பறைகளில் மூன்ருண்டுகளும் பக்கத்திலமர்ந்து இருந்தார். திறனுய்வு மனப்பான்மை மிக்க திரு ச. மெய்யப்பன் அவர்கள் தம் சிந்தனையில் பளிச்சிடும் கருத்துக்களை வகுப்பறையிலேயே மு. ச. சிவம் அவர்களிடம் கூறுவர் அவை வினு வடிவங்கொண்டு ஆசிரியர்களிடம் சென்று சேரும்.

வாரந்தோறும் வெள்ளிக்கிழமை மாலை நடைபெறும் ஆய்வுக்கழகத்தில் ('ஆனர்சு கிளப்)பில் ஆய்வுக் கட்டுரைகள் மாணவர்களால் படிக்கப்பெறும். பெரும்பாலும் மேல்வகுப்பு மாணவர்களே மிகுதியான கட்டுரைகளைப் படிக்கத் தொடங்குவர். ஆனுல் மு. ச. சிவம் அவர்கள் தமிழ்ச்சிறப்பு வகுப்பில் சேர்ந்த உடனேயே இரண்டாவது கூட்டத்திலேயே ஆய்வுக் கட்டுரையை அணியஞ் செய்துபடித்தார். 1954-ல் இராமலிங்க அடிகளாரின் திருவருட்பாவை பற்றிய ஆய்வுக்கட்டுரையைப் படிக்கத்தொடங்கினபோது இயல்பாகவே இளமையிருந்தே இராமலிங்க அடிகளாரின் பாடல்கள் எல்லாவற்றையும் பல முறைகற்றுத் தோய்ந்திருந்த மு. ச. சிவம் அவர்கள் கட்டுரையின் இடையிடையே திருவருட்பாப் பாடல்களைப் படிக்கும் போது தம்மையும்அறியாமல் கண்ணீர் விட்டார். குறிப்பாக 'வாடியபயிரைக் கண்ட போதெல்லாம்......!' 'அப்பா நான் வேண்டுதல் கேட்டு அருள்புரிதல் வேண்டும்', என்றுதொடங்குகிற பாடல்களைப் படிக்கும்போது மெய்ம்மறந்து உள்ளமுருகிப்பாடினுர். மூத்தவகுப்புகளில் பயின்று வந்த பகுத்தறிவுச் சிங்கங்கள் கட்டுரையின் முடிவில் வினுக்களை எழுப்பி மு ச.

சிவம் அவர்களைத் திணற அடிக்க விரும்பினர். இதனையறிந்த டாக்டர் அ. சிதம்பரநாதன் அவர்கள் பரிவுடன் அன்று கேள்விகள் எவையும் வேண்டியதில்லை என்று கூட்டத்தை முடித்து விட்டார் அன்று முதல் மு. ச சிவம் அவர்கள் மீது தணியாத ஓர் ஆர்வத்தை வைத்திருந்தார் டாக்டர் அ. சிதம்பரநாதன் அவர்கள். அடுத்துப் பல ஆய்வுக்கட்டுரைகள் படித்த மு. ச. சிவம் அவர்கள் மூன்ருவதாண்டின் முடிவில் 'தமிழும் உலக மொழிகளும்' என்ற தலைப்பில் ஆய்வுக் கட்டுரை படித்தார். பெரும்பாலும் ஆய்வுக் கழகத்தில் மற்றவர்கள் கட்டுரை படித்து முடித்தவுடன் முதற் கேள்வி பிறப்பது மு. ச சிவம் அவர்கள் வாயிலிருந்துதான். பரபரப்பு மிகுந்த கேள்வி-பதில் நேரத்தில் தம் மாணவர்கள் அறிவுச் சண்டைகளில் ஈடுபட்டிருப்பதைக் கண்டு அகமகிழ்வெய்தினுர் டாக்டர் அ சிதம்பரநாதன் அவர்கள்.

தமிழாய்வில் தலைப்பட்டிருந்த மு. ச. சிவம் அவர்கள் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் பயின்று கொண்டிருந்த போது பல ஆராய்ச்சிப் பரிசுகளைப் பெற்ருர் 1955, 1956 ஆகிய இரண்டு ஆண்டுகளிலும் தொடர்ந்து டாக்டர் ஆர் கே. சண்முகம் செட்டியார் ஆராய்ச்சிப் பரிசினைப் பெற்ருர். முறையே, 'திருக்குறள் அமைச்சியல்' பற்றியும் 'மணிமேகலை' பற்றியும் ஆய்வுகள்நடத்திப்பரிசுகள் பெற்ருர். இப்போது கோலாலம்பூர்ப் பல்கலைக் கழகத்தில் பணி புரிந்து வரும் **டாக்டர் சோ ந கந்தசாமி** அவர்களும் 1956 ஆம் ஆண்டில் 'மணிமேகலை பற்றிய ஆய்வில் போட்டியிட்டார். இருவருக்கும் பரிசு பகிர்ந்து கொடுக்கப்பெற்றது. ஆனல் 1955ஆம் ஆண்டில் 'குறுந்தொகை விளக்கம்' என்ற நூலைத் திறனுய்வு செய்த கட்டுரைப் போட்டியில் மகாவித்துவான் ஆர். இராகவையங்கார் ஆராய்ச்சிப் பரிசு மு. ச. சிவம் அவர்களுக்கே கிடைத்தது. இந்த ஆராய்ச்சிப் போட்டி இரண்டாண்டுகளுக்கு ஒரு முறைதான் நடைபெற்றதாதலின் மீண்டும் இந்தப் போட்டியில் கலந்து கொள்ள மு. ச. சிவம் அவர்களுக்கு வாய்ப்புக் கிட்டாது போயிற்று.

அப்போது உதவித் துணை வேந்தராயிருந்த திரு எம். டி. ராமநாதன் அவர்கள் திருக்குறளில் மிக்க ஈடுபாடு உடையவர். 1955ஆம் ஆண்டில் திருக்குறள் போட்டி வைத்துத் தம் செலவில் தங்கப் பதக்கம் பரிசு தருவதாக அறிவித்தார். அத் தங்கப் பதக்கம் மு. ச. சிவம் அவர்களுக்கே கிடைத்தது.

1956ஆம் ஆண்டில் 'திருச்சி சிந்தனைக் குழுவினர்' தமிழகம் முழுவதிலும் உள்ள யாவரும் கலந்து கொள்ளக் கூடிய பரிசுப் போட்டி ஒன்றை அறிவித்தனர். அந்தச்சிந்தனைக் குழுவின் தலைவர் உயர்திரு அ. பாலசுப்பிரமணியம் அவர்கள் தந்தை பெரியார் அவர்களின் உள்ளார்ந்த நண்பர்; அரிசி ஆலை ஒன்றின் உரிமையாளர். முதல் பரிசு ரூ 100 என்றும், நூறு பக்க அளவில் ஆய்வுக் கட்டுரை இருக்க வேண்டும் என்றும் முதலில் அறிவிப்புச் செய்திருந்தனர். அறிவிப்புப் பார்த்தவுடனே மு. ச சிவம் அவர்கள் அந்தச் சமயத்தில் ஆங்கிலத்தில் 'Spurgeon' என்ற அம்மையார் எழுதிய புகழ்பெற்ற "Shakespeare's Imagery and What it tells" என்ற நூலை ஆழ்ந்து கற்றிருந்ததால் அந்நூலைப் போலவே திருக்குறளுக்கும் ஓர் ஆய்வு நூல் வெளி வர வேண்டுமென்ற விருப்பினால் 'திருவள்ளுவரின் உருவக் காட்சிகள் (Imageries) என்ற தலைப்பில் நூறு பக்கத்திற்கு மேல் ஆய்வுக் கட்டுரையை வரைந்து விட்டார். திருக்குறள் சிந்தனைக் குழுவினர் தம் அடுத்த அறிவிப்பில் ஆய்வுக் கட்டுரைகள் பத்துப் பக்கங்களுக்குக்குறையாமல் இருக்க வேண்டும் என்று அறிவித்தனர். ஆனால் ஏறக்குறைய ஒன்றரைத் திங்களில் மு. ச. சிவம் அவர்கள் நூறுபக்கத்திற்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரையை அணியப் படுத்தி அனுப்பி வைத்தார். பக்கத்திற்காக மட்டுமின்றிப் புதுவகை ஆராய்ச்சி மேற் கொள்ளப் பட்டிருந்ததால் மு. ச. சிவம் அவர்களுக்கே முதற் பரிசு ரூ 100 கிடைத்தது. அக்காலத்தில் சவரன் ரூ 60 தான். ஒரு சவரன் தங்கப்பதக்கமும் 40 ரூபாயும் கையில் கொடுத்தனர். [பிற்காலத்தில் வறுமைப்பிணி வாட்டிய போதெல்லாம் அடிக்கடி அடகுக் கடைகளுக்குச் சென்று வந்தன, மேற்

குறிப்பிடப்பெற்ற இரண்டு தங்கப்பதக்கங்களும். 100 ரூபாய் பரிசு கொடுத்தவர்கள் ஒன்றரைச் சவரனில் தங்கப் பதக்கம் கொடுத்திருந்தால் இன்னும் கொஞ்சம் கூடுதலாகக் கடன் வாங்க வாய்ப்பு ஏற்பட்டிருக்குமே என்று பிற்காலத்தில் மு. ச. சிவம் அவர்கள் பல முறை நினைத்ததுண்டு. ஒருமுறை சில திங்களாக வீட்டு வாடகை கட்ட முடியாத நிலையில் இருந்த ஒரு நண்பருக்காக இந்தப் பதக்கங்களை அடகு வைத்துப் பணம் கொடுத்தார்.]

பரிசளிப்பு விழா திருச்சியில் நடைபெற்றது. பரிசளிப்பு விழாவுக்குப் பரிசு பெற்ற மூன்று பேரும் அழைக்கப் பெற்றனர். பாராட்டு விழாவில் பேராசிரியர் திரு. ரம்போலா மாஸ்கரேனஸ் அவர்கள் முதற்பரிசு பெற்ற மாணவர் மு.ச. சிவம் அவர்களைப்பெரிதும் பாராட்டினார். இரண்டாவது பரிசு பெற்றவர் 32 பக்கங்களே எழுதியிருந்தார். அவரும் மூன்றாவது பரிசு பெற்றவரும் மாணவர்கள் அல்லர்; வெவ்வேறு பணிகளில் இருந்தவர்கள். பாராட்டுவிழா முடிந்ததும் திருச்சி சிந்தனைக் குழுவினர் முதற் பரிசு பெற்ற மு. ச. சிவம் அவர்களைச் சிறு சொற்பொழிவு ஆற்றுமாறு வேண்டினர். ஏறத்தாழ அரை மணிநேரம் திருக்குறளின் பெருமைகளைப்பற்றிப் பேசிய மு.ச சிவம் அவர்கள் "காமத்துப்பாலையும் எல்லாரும் கற்று மகிழ வேண்டும். கற்பனையின்பமும், நாடகச் சுவையும், இலக்கிய நயமும் மிகுந்த பகுதி காமத்துப்பாலே" என்றுகூறினார். அடுத்த நாளில் வெளியான 'தினத்தந்தி'யில் முதற் பக்கத்தில் கொட்டையெழுத்துக்களில் '**கல்லூரி மாணவர் காமத்துப்பால் படிக்கச் சொல்லுகிறார்**' என்ற தலைப்பிட்டுச் செய்தி வெளியிடப்பட்டிருந்தது!

1956ஆம் ஆண்டில் மயிலை திருவள்ளுவர் மன்றத்தார் நடாத்திய கட்டுரைப் போட்டியிலும் மு.ச. சிவம் அவர்கள் முதற் பரிசைப் பெற்றார். இவ்வாறு அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவராயிருக்கும் போது திருக்குறளில் நான்கு ஆராய்ச்சிப் பரிசுகளைப் பெற்றார்; இரண்டு தங்கப் பதக்கங்களைப் பெற்றார். 1961இல் மதுரையிலிருந்து வெளிவந்த

'தமிழ்நாடு' நாளிதழ் நடத்திய கட்டுரைப் போட்டியில் 'கல்லூரிகளில் பயிற்று மொழி' என்ற தலைப்பில் அழகியதோர் கட்டுரை எழுதி முதற்பரிசினைப் பெற்றார்.

புகழ் வாய்ந்த ஒரு சாலை மாணாக்கர்கள்

இப்போது காந்தி-காமராஜ் காங்கிரசுத் தலைவராயுள்ள உயர்திரு குமரி அனந்தன் அவர்களும், தாம் பயின்ற அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலேயே பல்லாண்டுகள் மொழியியல் உயர்நிலை ஆராய்ச்சித் துறையில் இயக்குநராகப் பணியாற்றி இப்போது மொழியியல் துறை, முதுகலைத் தமிழ்த்துறை, கீழ்த்திசைத் தமிழ்த் துறை, ஆராய்ச்சித் துறை ஆகிய நான்கு துறைகளுக்கும் ஒரே தலைவராய் வீற்றிருக்கும் உலகப் புகழ் பெற்ற தமிழறிஞர் டாக்டர் ச. அகத்தியலிங்கம் அவர்களும், இப்போது அ தி மு கவின் கொள்கை பரப்புச் சொற்பொழிவாளராகத் திகழ்ந்து வரும் வேலூர் வேலம்மையார் அவர்களும் மு. ச. சிவம் அவர்களுடன் ஒன்றாகப் பயின்ற ஒரு சாலை மாணாக்கர்கள். பழகுவதற்கு இனிய பண்பு வாய்ந்த இம்மூன்று பெருந் தலைவர்களுடனும் மாணவப் பருவத்தில் அடிக்கடி அளவளாவி மகிழும் வாய்ப்பினைப் பெற்ற மு. ச. சிவம் அவர்கள் இன்றும் இவர்களால் நன்கு மதிக்கப் பெறும் நண்பராய் விளங்குகிறார். மேலும் புகழ் பெற்ற கவிஞர் திரு சிற்பி. பாலசுப்பிரமணியம் அவர்கள், தமிழ்ப் பேராசிரியர் பெ. வரதராசன் அவர்கள், பெங்களூர்க்கருகே கோலார் தங்கவயலில் தங்கத்தமிழ்ப் பயிரை வளர்த்து வரும் டாக்டர் வ.பெருமாள் அவர்கள், கோலாலம்பூர்ப் பல்கலைக்கழகத்தில் பணி புரியும் டாக்டர் சோ. ந. கந்தசாமி அவர்கள், கல்கத்தாவில் தேசிய நூலகத்தில் பணி புரியும் திருவாட்டி புட்பவேணி அவர்கள் போன்றவர்களும் மு. ச. சிவம் அவர்களுடன் கூட்டு வகுப்பில் உடன் பயின்ற வகுப்புத் தோழர்களாவர்- பல்வேறு கட்சிகளையும் கொள்கைகளையும் சார்ந்தவர்களாயினும் அனைவரும் மு. ச. சிவம் அவர்களுடன் வேற்றுமையின்றி அன்பு பூண்டு நட்புடன் பழகினர். மேலும் ஆசிரியப் பெருமக்களாய் அமைந்திருந்த அ சிதம்பர

நாதன், டாக்டர். கா. மீனாட்சி சுந்தரம், திரு இ. எசு. வரதராச அய்யர், திரு மு அண்ணாமலை அவர்கள் முதலிய எல்லா ஆசிரியர்களின் நன்மதிப்பையும் நல்லன்பையும் பெற்று நன் மாணாக்கராய்த் திகழ்ந்தார்.

ஆங்கிலத்துறையில் அறிவுபெறல்

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் செந்தமிழோடு அரிய ஆங்கில மொழியறிவையும் வளர்த்துக் கொள்ளும் அரிய வாய்ப்பினைப் பெற்றார் மு.ச. சிவம் அவர்கள். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் எத்தனை எத்தனை அறிவுத் துறைகள் உள்ளன! எல்லாத்துறைகளிலும் வல்லவராதல் எவராலும் இயலாது. ஒவ்வொருவருடைய அறிவு வேட்கைக்கும் ஏற்ற வாறு அறிவு வளர்க்கும் செவிலியாக அண்ணாமலைப் பல்கலைக் கழகம் விளங்குகிறது.

இப்போது கோழிக்கோடுப் பல்கலைக் கழகத்தில் ஆங்கிலப் பேராசிரியராக விளங்கும் நண்பர் டாக்டர். எசு. கந்தசாமி அவர்கள் அப்போது மு. ச. சிவம் அவர்களிடம் அரிய, இனிய நண்பராய்ப் பழகிவந்தார். அவர் மூலமாக ஆங்கிலத்துறையில் பேரறிஞராகவும், அரவிந்தரின் யோக நெறியில் நிலைநின்றவருமான உயர்திரு. எம். வி சீத்தாராமன் அவர்களுடைய சீடனாகும் பெறுதற்கரிய பெரும்பேறு மு. ச. சிவம் அவர்களுக்குக் கிடைத்தது. அவருடைய ஞானத் தொடர்பினால் பிறவிப் பயன் பெற்றதாக மு. ச. சிவம் அவர்கள் கருதுகிறார். அவருடைய இலக்கியத் தொடர்பினால் மு. ச. சிவம் அவர்களின் ஆங்கில இலக்கிய அறிவு தமிழ் இலக்கியத்துடன் போட்டி போட்டுக் கொண்டு நாளொரு மேனியும் தழைத்து வளரலாயிற்று. திரு. எம். வி. சீத்தாராமன் அவர்கள் இந்நூற்றாண்டு பெற்றெடுத்த தவச்செல்வர்களுள் ஒருவர். பெரிய யோகி. எத்தனையோ சித்துக்கள் கைவரப் பெற்றிருந்தாலும் அவை எல்லாம் ''விளையாட்டுக்கள்'' என்கிற கருதுபவர். அவர் வகுப்பில் பாடஞ்சொல்லத் தொடங்கும்போது தம் ஆன்மீக

1959

சக்தியால் மாணவர் எல்லோரையும் தம் வயப்படுத்தி விடுவார். தமிழைப்போலவே அவருடைய ஆங்கில வகுப்புகள் மு. ச. சிவம் அவர்களுக்குத் தேனாய்த் தெள்ளமுதாய்த் தித்தித்தன. அவருடைய ஆங்கில வகுப்புக் களில் பெறும் பேரானந்தத்தை இழக்க விரும்பாது அவ்வப் பொழுது அவர் வகுப்புகளில் வந்து அமர்ந்து கொள்வார்.

மு. ச. சிவம் அவர்களின் ஞானாசிரியரான தவச்செல்வர் திரு. **எம். வி. சீத்தாராமன்** அவர்கள் தம் வகுப்பிற்கு எப்போது வேண்டுமானாலும் வந்து அமர்ந்து பாடங்கேட்க லாம் என்றதொரு தனிச் சலுகையினை மு ச. சிவம் அவர் களுக்குத் தந்திருந்தார். அதனால் திரு. எம். வி. சீத்தாராமன் அவர்கள் இண்டர்மீடியட் வகுப்புக்குப் போயிருந்தாலும், பி. ஏ. வகுப்புக்குப் போயிருந்தாலும், அல்லது எம். ஏ. வகுப் புக்குப் போயிருந்தாலும் மு. ச. சிவம் அவர்கள் எந்த வகுப் பிலும் போய் உட்கார்ந்து பாடம் கேட்டார். அக்காலத்தில் தமிழ்மாணவர்களுக்கு நாள்தோறும் பெரும்பாலும் இரண்டு மணி நேரம் ஓய்வுநேரமாக இருக்கும் அப்போதெல்லாம் தமிழ் மாணவர் மு. ச. சிவம் அவர்கள் ஆங்கில மாணவராய் மாறி விடுவார்! கடல்கடந்த ஆங்கிலமொழியின் அமிழ்தவூற் றினை அள்ளி வழங்கும் திரு. எம். வி சீத்தாராமன் அவர்கள் ஆங்கில எம். ஏ பயிலும் மாணவர்களுக்காக விடுமுறை நாட் களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் நடத்தும் சிறப்புவகுப்புக் களிலும் மு ச. சிவம் அவர்கள் கலந்து கொள்ள இசைவு தந்தார். சுருங்கக் கூறின், திரு. எம். வி. சீத்தாராமன் அவர் களின் இரண்டு கண்களைப்போல விளங்கிய இரண்டு சீடர்கள் டாக்டர் எசு. கந்தசாமி அவர்களும், மு. ச. சிவம் அவர் களும் ஆவார்கள். திருமணமே புரிந்து கொள்ளாமல் யோக வாழ்க்கையில் தலைநின்ற திரு. சீத்தாராமன் அவர்களின் செல்லப் பிள்ளைகளாக விளங்கினர். இவ்விருவருக்கும் கிடைத்த நல் வாய்ப்பு மற்ற எவருக்கும் கிடைக்கவில்லை.

திரு. எம். வி. சீத்தாராமன் அவர்கள் தவமும் யோகமும் செய்தநேரம் போக மீதி நேரங்களில் எல்லாம் இலக்கியங்கள்,

ஞானநூல்கள் பயில்வதிலேயே காலங்கழித்தார். நாள்தோறும் நூலகத்திலிருந்து பத்துப்புத்தகங்களுக்கும் குறைவில்லாமல் எடுத்துச் செல்வார். படிப்பும் தவமுமே அவருடைய வாழ்க்கையின் குறிக்கோள்கள். அவருடைய சீடரான மு. ச. சிவம் அவர்களும் இதே குறிக்கோள்களையே கொண்டு இலங்குகிறார். **''படியாத நாளெல்லாம் பிறவாநாளே''** என்பதும், **''படியாமல் ஒருநாளும் படுக்க வேண்டா''** என்பதும் மு. ச. சிவம் அவர்களின் புதுமொழிகள். ''ஒரு நாளில் 24 மணி நேரங்கள்தாமே உள்ளன! படிப்பில் நேரஞ்செல விடுவதற்கு இவை போதாவே! உறக்கம் ஏன்வந்து தொலைகிறது'' என்பனவே மு. ச சிவம் அவர்களின் ஏக்கங்கள்!

திரு. எம். வி. சீத்தாராமன் அவர்கள் வகுப்பறைகளில் பாடம் நடத்தும் போது ஆங்கில அறிவை ஊட்டியதுடன் தம் வீட்டிற்கும் வந்து அறிவைப் பெறுவதற்கு வாய்ப்பளித்தார். அவர் வீட்டிற்குள் அமர்ந்து மணிக் கணக்கில் இலக்கிய இன்பம் பெறுவதற்கு ஒரிரு ஆங்கிலத்துறை ஆசிரியர்களுக்கும், திரு எம். வி. சீத்தாராமன் அவர்களின் 'செல்லப் பிள்ளை'களுக்குமே அனுமதி உண்டு. ஆங்கில இலக்கியத்துடன் தமிழ் இலக்கியத்தையும் ஒப்பிட்டு விருந்தளித்தார் அப்பேராசிரியர் அவர்கள். பல நாட்கள் மாலை 5 மணியிலிருந்து இரவு 1 மணி அல்லது 2 மணி வரை கூடச் சாய்வு நாற்காலியில் அமர்ந்து அவர் இலக்கிய விருந்து அளித்துக் கொண்டேயிருப்பார்! பல நாட்கள் இந்தச் செல்லப்பிள்ளைகள் பசியை மறந்து இரவு உணவையும் இழந்ததுண்டு!

தமிழ்த் துறைக்குச் சென்ற மு. ச. சிவம் அவர்கள் ஆங்கிலத்துறையில் ஒட்டியிருந்து ஒட்டு மாங்கனியாக இன்று இரு மொழிகளிலும் பற்பல அறிவு நூல்களை விருந்தாகப் படைத்து வருகிறார்! திரு எம். வி. சீத்தாராமன் அவர்கள் பாடம் நடத்திய வகுப்புகளுக்குப் போய்ப் பயன் பெற்றது போலவே ஆங்கிலத் துணைத் தலைவர் எம். எசு துரைசாமி அவர்களின் அற்புதமான ஆங்கில வகுப்புகளிலும் தங்கி

யிருந்து பயன் பெற்ருர். பிற்காலத்தில் பற்பல மொழியியல் துறையினர் நடத்திய மொழியியல் கோடை வகுப்புக்களிலும் ஆங்கிலத்தில் பயின்றதால் தமிழறிஞர் மு.ச. சிவம் அவர்கள் ஆங்கிலத்திலும் இணையான நல்லறிவைப் பெற்றுத் திகழ் கிருர். தமிழ்ப் பெருங்கடலுள் மூழ்கித் திளைத்துக் கங்குகரை காணுத ஆங்கிலப் பெருங்கடலிலும் மூழ்கி அரிய முத்துக்களை எடுத்துத் தமிழர்க்குப் பயனுறச் செய்து வருகிருர்.

மு. ச. சிவம் அவர்களை வளர்த்து ஆளாக்கிய பெருமை முழுதும் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தையே சாரும் குறிப்பாகத் திரு. எம்.வி. சீத்தாராமன் அவர்கள் மு.ச. சிவம் அவர்களுக்கு இலக்கியக் கல்வியுடன் ஆன்மீகக் கல்வியையும் மிகுதியாக வழங்கினுர். அவருடைய தொடர்பினுல் மு. ச. சிவம் அவர்கள் திரு. அரவிந்தர், விவேகானந்தர், இராமகிருட்டினர், சிவானந்தர் முதலிய அருளாளர்களின் நூல்களையெல்லாம் படித்துத் தெளிவு பெறும் வாய்ப்பினையும் பெற்ருர்.

இவ்வாறு மு ச. சிவம் அவர்கள் ஆங்கிலத்திலும் துறை போகக் கற்கும் வாய்ப்பினைப் பெற்ருர் என்பது தமிழ்த்துறை யில் உள்ள ஆசிரியர்களுக்கோ, மாணவ நண்பர்களுக்கோ சிறிதும் தெரியாது.

"காதல காதல் அறியாமை உய்க்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு" என்ற

திருக்குறள் நெறி எவ்வளவு உயர்ந்த வாழ்க்கை நெறி ! இவ்வுண்மை தெரியாததால் இவர் வாழ்க்கையில் ஏற்பட்ட ஒரு வியப்பான சிறு நிகழ்ச்சியையும் ஈண்டுக் குறிப்பிடல் தகும்.

ஒரு வியப்பு நிகழ்ச்சி !

1955 ஆம் ஆண்டு சிறப்புத் தமிழ் மாணவர்களுக்கு மனேன்மணீய நாடகத்தைப் பேராசிரியர் அ. சிதம்பரநாதன்

அவர்களே நடத்தினர். ஆண்டு முடிவில் சிலமாணவர்களிடம் மட்டும் அந்நாடகத்தைப் பற்றிய தலைப்புகள் தந்து ஆய்வுக் கட்டுரைகள் எழுதி வந்து வகுப்பில் ஒவ்வொருவராக ஒவ்வொருநாளும் படிக்குமாறு பேராசிரியர் அவர்கள் கட்டளையிட்டிருந்தார். 'குடிலனின் சூழ்ச்சிகள்', 'மனோன் மணியின் பண்பு நலன்கள்', 'சுந்தரரின் பண்புநலன்கள்' முதலிய தலைப்புக்களைப் பிறர்க்குத் தந்த பேராசிரியர் அ. சிதம்பரநாதன் அவர்கள் மு ச. சிவம் அவர்களுக்குத் தலைப்புத் தரும்போது ஆங்கிலத்தில் 'Manonmaniyam as a drama'என்று ஆங்கிலத்தில் தலைப்பைக் கொடுத்து விட்டார்.

மனோன்மணீயம் பாடம் நடைபெறும் போது மு. ச. சிவம் அவர்கள் ஷேக்ஸ்பியரின் நாடகங்கள் பலவற்றை ஆழ்ந்து படித்து வந்தார். அந்நாடகங்களைப் பற்றிய பலப்பல திறனாய்வு நூல்களையும் படித்துவந்தார். மேலும் ஷேக்ஸ்பியர் நாடகத் திறனாய்வு நூலாக ஏ. சி. பிராட்லி என்பவர் எழுதிய உலகப் புகழ் பெற்ற 'ஷேக்ஸ் பியரின்' துன்பியல் நாடகங்கள்' என்ற நூலை ஆழ்ந்து கற்றிருந்தார். மேலும் ஆங்கிலத்திலேயே பேசவும் எழுதவும் பயிற்சி பெற்றிருந்தார். ஆங்கிலத்திலே நன்றாக எழுதுந் திறமை கைவரப் பெற்றமை மாணவ நண்பர்களுக்கோ தமிழ்த் துறை தலைவருக்கோ தெரியாதிருந்ததனால் அச் சிக்கல் ஏற்பட்டது.

டாக்டர் அ. சிதம்பரநாதன் அவர்கள் ஆங்கிலத்தில் அடியெடுத்துக் கொடுத்ததால் கட்டுரை முழுவதையும் ஆங்கிலத்திலேயே எழுதிமுடித்தார். அடுத்தவாரம் வகுப்பில் படிக்கும்போது மாணவ நண்பர்களுக்கு மட்டுமின்றிப் பேராசிரியர் அவர்களுக்கும் ஒரு வியப்பான அதிர்ச்சியை ஊட்ட வேண்டுமென்று உள்ளத்தில் எண்ணிக் கொண்டு இருபது பக்க அளவில் ஆங்கிலத்தில் விரிவானதொரு ஆராய்ச்சிக் கட்டுரையை எழுதி முடித்தார். வகுப்பில் கட்டுரை படிக்க வேண்டிய நாள் வந்தது. எல்லாருக்கும் திடீரென்று வியப்பை ஊட்டி, உயர்திரு எம். வி.

சித்தாராமன் அவர்கள் ஊட்டி வளர்த்த ஆங்கில அறிவைக் கண்டு அனைவரும் மெச்சுமாறு செய்ய வேண்டும் என்று இன்பக்கனவு கண்டு கொண்டிருந்தார். ஆனால்......!

''Manonmaniyam is a Drama'' என்ற தலைப்பை ஆங்கிலத்தில் படித்துவிட்டு மளமளவென்று நான்கைந்து வாக்கியங்கள் மனோன்மணீயத்தைப் பற்றி ஆங்கிலத்திலேயே படித்தார். பேராசிரியர் அவர்களுக்கு அதிர்ச்சியும் மருட்சியும் சினமும் ஏற்பட்டு விட்டன. அவருடைய சிவந்த முகம் சிவபெருமான் நெற்றிக்கண்ணைத் திறந்த போது எப்படிச் சிவந்திருக்குமோ அப்படி மேலும் சிவந்து காட்டிற்று. 'குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி கணமேயுங் காத்தல் அரிது' அன்றோ? டாக்டர் அ. சிதம்பரநாதன் அவர்கள் சினநாதன் ஆனார்; சீறும் எரிமலையானார்! ''You are so presumptuous'' என்ற ஒரே ஒரு வாக்கியத்தில் தம் உள்ளம் கவர்ந்து எழுந்து ஓங்கு பெருஞ்சினத்தைக் குறுகத் தறித்துக் கொட்டிவிட்டு வகுப்பை முடித்துவிட்டுத் தம் அறைக்கு ஏகிவிட்டார்!

தமது ஆங்கிலப் புலமையை அனைவரும் வியந்து பாராட்டுவார் என்று மனப்பால் குடித்துக் கொண்டிருந்த மு ச. சிவம் அவர்களுக்குத் திரு சிதம்பரநாதரின் சினவுரைதான் கிட்டியது. எதிர்பாராத இந்தப்போக்கு மாணவ நண்பர்களிடையே ஒரு இனந்தெரியாத கலக்கத்தை ஏற்படுத்தியது. தலைப்பு ''மனோன்மணீயம் ஒரு நாடகம்'' என்பதல்லவா? நடந்த நிகழ்ச்சியே ஒரு நாடகமாகிவிட்டது! புரியாதநிலையில், இது வரை இப்படி வகுப்பைத் துறந்து ஏகியதைக் காணாத நிலையில் மாணவ நண்பர்கள் மருண்டனர் பேராசிரியர் அவர்களும் மாணவ நண்பர்களும் ''தப்புந் தவறுமாகத் தானே ஆங்கிலத்தில் உளறப்போகிறான்'' என்று நினைத்திருக்கக்கூடும். மு. ச. சிவம் அவர்களது கட்டுரை ஆங்கிலத்தில் அமைந்திருக்கும் என்பதைத் தம்மிடம் முன் கூட்டியே அறிவித்து இசைவு பெறவில்லை என்பதே திரு. சிதம்பரநாதன் அவர்களின் முனிவுக்குக் காரணம்! ஆங்கிலம்

பேசுவதில் இன்பங்காணும் திரு. அ. சிதம்பரநாதன் அவர்கள் ஆங்கிலத்தில் படிக்கப்படுங் கட்டுரையைப் பாராட்டி முதல் நாள் தமிழில் வள்ளலாரைப்பற்றிப் படித்த கட்டுரையைப் பாராட்டியது போல் பாராட்டுவார் என்று உளமார நம்பி யிருந்த மு. ச. சிவம் அவர்களுக்கு ஏற்பட்ட ஏமாற்றம் எத்துணைத்து என்று சொல்ல முடியாது. எத்துணை நாட்கள் இரவு பகலாகச் சிந்தித்து ஆங்கிலத்தில் செப்பமுற எழுதப் பெற்ற கட்டுரை! ''அங்கணத்துள் உக்க அமிழ்து போல்'' படிக்காது கொன்னே கழிந்ததே! என்று சொல்லொணுத் துயரத்தில் வருந்தினுர்.

சினந்தணிந்த நிலையில் திரு. அ சிதம்பரநாதனைத் தனித்துக் கண்டு நிலைமையை விளக்கினுர் மு. ச சிவம் அவர்கள். 'தாங்கள் தலைப்பை ஆங்கிலத்தில் கொடுத்ததால் தான் கட்டுரையையும் ஆங்கிலத்தில் எழுதினேன்'' என்று மு. ச. சிவம் அவர்கள் சமாதானம் கூறினுர்! தமிழ் பயிலும் மாணவர்களுக்கு ஆங்கிலம் வராது என்பது அன்று நிலவி யிருந்த பொது நம்பிக்கை. மேலும் ''மற்ற மாணவர்கள் தமிழில் ஆய்வுக் கட்டுரைகள் படிக்கும் போது இவர் மட்டும் பெரிய ஆங்கிலப் புலமை கைவந்தவரைப் போல ஆங்கிலத் தில் கட்டுரை எழுதித் தம்மிடம் முன்னறிவிப்புக்கூடச் செய்யாமல் படிக்க முற்பட்டது ஒரு திமிரான போக்கு'' என்பது தான் பேராசிரியர் அ. சிதம்பரநாதன் ஆங்கிலத்தில் திட்டிய வசவுரையின் உட்பொருளாகும்.

1957இல் தமிழ்ச் சிறப்பு வகுப்பு (ஆனர்சு)த் தேர்வு முடிவுற்றது. அந்த ஆண்டுதான் பேராசிரியர் சிதம்பர நாதன் அவர்கள் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் பணி புரிந்த கடைசி ஆண்டு. எம். எல். சி. தேர்தலில் நிற்க விரும் புகின்றவர் தம் பதவியை விட்டு விலகிய பிறகே நிற்க வேண் டும் என்ற நிலை இருந்தது. பல்லாண்டுகளாகத் தம்மிடம் பாடம்பயின்ற மாணவர்களே ஆசிரியர்களாகவும் பணியில் உள்ளவர்களாகவும் இருப்பதால் தேர்தலில் வெற்றிபெறுவது உறுதி என அறிந்தே துணிந்து அரிய தமது பேராசிரியப் பதவியை விட்டு விலகினுர்.

பொதுவாகப் பேராசிரியர் அவர்கள் தேர்வுத் தாள்களை மதிப்பிடும் தேர்வுக்குழுவில் இருப்பது வழக்கம். அப்பொழுது தானே மாணவர்களை அகமதிப்பீடு செய்ய முடியும்? ஆனால் 1957இல் தேர்வுக் குழுவில் டாக்டர் அ. சிதம்பரநாதன் அவர்கள் ஏனோ இடம் பெறவில்லை. திரு. தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் தான் தேர்வுக் குழுத் தலைவரானார்.

டாக்டர் சிதம்பரநாதன் அவர்களுக்கும் தெ. பொ. மீ அவர்களுக்கும் ஏனோ உட்பகையிருந்தது! சிதம்பர நாதன் அவர்களிடம் படிக்கின்ற மாணவர்களுக்கு எப்படி ஆழ்ந்த தமிழறிவு இருக்க முடியும் என்று கேட்டது திரு தெ. பொ. மீ அவர்களது பகையுள்ளம். அதன் விளைவு இருபத்திரண்டு பேரில் ஒரே ஒருவருக்குத்தான் 'முதல் வகுப்பு' கிடைத்தது. அந்த நற்பேறுடையார் தாம், உழைப்பால் உயர்ந்த உத்தமர் தாம் இன்று அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையுடன் நான்கு துறைகளுக்கும் நான்முகன் போல் தலைவராய் வீற்றிருந்து படைப்பிலக்கியங்களைப் படைத்துவரும் நல்லறிஞர் **டாக்டர் ச. அகத்தியலிங்கம்** அவர்கள் ஆவர்.

1957இல் இரண்டாம் வகுப்பில் வெற்றி பெற்ற மு. ச. சிவம் அவர்கள் குடும்பப் பொறுப்பில் பங்கு பெறுவதற்காக வேலை தேடலானார். தமிழ்ப் பயிற்றுநர் பணி ஒன்று அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் எழுந்தது. விண்ணப்பித்தார் மு. ச. சிவம் அவர்கள். விண்ணப்பித்ததுடன் அருள் நெறி இயக்கத்தில் பற்றுக் கொண்டிருந்த மு ச. சிவம் அவர்கள் **அருள் நெறித் தந்தை தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களின் பரிந்துரையைப் பெற்றார்.**

செல்வத்திரு- சர் முத்தையாச் செட்டியார் அவர்கள் அப்போது 'ஊட்டி'யில் தம் வளமனையில் வெப்பத்திற்காக ஒதுங்கியிருந்தார். மு ச. சிவம் அவர்கள் 21 வயது நிரம்பப் பெற்றவர். அவ்வளவாக உயரமில்லாதவர் – அப்போது ஒல்லியாகவும் இருந்தார். மேலங்கி (கோட்) போடுவதற்கு வசதியில்லாதவர் ஊட்டியில் தங்கியிருந்த அரசர் பெருந்

தகை முத்தையாச் செட்டியார் அவர்களை எளிய ஆடையில் கண்டு தவத்திரு அடிகளாரின் பரிந்துரையைக் காட்டி நின்றார். அதனைப் பார்த்து விட்டு "பார்க்கலாம்" என்று கூறினார்கள். ஆனால் எப்படியோ அந்தப் பணி இவர் தம் இனியநண்பர், மூன்றாண்டுகள் இடைவிடாமல் உடனுறைந்து பழகிய நண்பர் திரு. ச. மெய்யப்பன் அவர்களுக்குக் கிடைத்தது.

நண்பர்க்கு நல்லதொரு பதவி கிடைத்தது பற்றி மகிழ்ந்தார். அவரைப் பாராட்டி வாழ்த்தி விட்டு அப்போது கொமாரபாளையம் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி முதல்வராய் இருந்த திரு. சரவண ஆறுமுக முதலியார் அவர்களைச் சென்று கண்டார். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் சில ஆராய்ச்சிப் பரிசுகள் பெற்ற செய்தியை அறிந்த போது அம்முதல்வரவர்கள் ஓரிரு ஆராய்ச்சிக் கட்டுரைகளைத் தாமே மதிப்பிடு செய்து முதற்பரிசுக்குரியதாகத் தேர்ந்தெடுத்ததாகக் கூறி "உங்களைப் பற்றி முன்பே அறிவேன்" என்று சொல்லி விட்டு அன்புடன் அன்றைக்கே கல்லூரிக் கல்வித் துணை இயக்குநர் அவர்களுக்கு ஒரு பரிந்துரைக் கடிதம் எழுதி அவரே தம் செலவில் அனுப்பி வைத்தார். அதன் பயனாய்ச் சில நாட்களுக்குள் கோவை அரசினர் கலைக்கல்லூரியில் மு ச. சிவம் அவர்களுக்குத் தமிழ்ப் பயிற்றுநர் வேலை கிடைத்தது. அப்போது ஊதியம் மாதம் ரூ. 125 தான். ஊதியத்தில் ஒரு பகுதி பெற்றோர்க்கு அனுப்பி விட்டு உணவுச் செலவுகளைச் சுருக்கிக் கொண்டு மாதந்தோறும் ரூ 30 முதல் ரூ. 50 வரை நூல்கள் வாங்கிப் படித்துக் கொண்டிருந்தார்.

கோவை அரசினர் கலைக் கல்லூரியில் ஓராண்டு

இப்போது மதுரைப் பல்கலைக் கழகப் பதிவாளாராய்ப் பணியாற்றும் பேராசிரியர் திரு ப. முருகன் அவர்கள் தலைமையில் ஓராண்டு கல்லூரிப் பணி ஆற்றினார் இளங்கலை வகுப்பில் தமிழைச் சிறப்புப் பாடமாக எடுத்துப் படித்த மாணவர்கள் இருபத்தொரு வயதே நிரம்பிய ஆசிரியர்

மு. ச. சிவம் அவர்களை அன்புடன் 'அண்ணு' என்றே அழைத்தனர். ஆங்கிலப் பேரறிஞர் எம். வி சீத்தாராமன் அவர்களிடம் பெற்ற இலக்கியத் திறனாய்வின் அறிவுத் திறங்களைச் சிறப்பு வகுப்பு மாணவர்களுக்குச் சொல்லித் தந்தார். மாணவர்கள் இலக்கிய நயங்களையெல்லாம் கேட்டு இன்புற்று ஆசிரியர்பால் அளவில்லாத ஈடுபாடு கொண்டனர்.

'எது இலக்கியம்'? என்ற தலைப்பில் அந்த வகுப்பு மாணவர்கள் அனைவரும் ஆய்வுக் கட்டுரைகள் எழுதுமாறு ஊக்கங் கொடுத்தார். அத்தனை பேரும் வெவ்வேறு தலைப்புக்களில் இலக்கியம் பற்றிய கட்டுரைகளை எழுதினர். தம் சம்பளப் பணத்திலிருந்து ஏறக்குறைய நூறு ரூபாய் செலவு செய்து எல்லா மாணவர்களுக்கும் பரிசுகள் நல்கினர். பரிசளிப்பு விழா தமிழ்த்துறைத் தலைவர் திரு. ப. முருகன் அவர்கள் தலைமையில் நடந்தது. கல்லூரி முதல்வர் திரு. திருநாரணன் அவர்கள் மாணவர்களுக்குப் பரிசுகளை நல்கி விட்டு வயதில் இளைய ஆசிரியர் மு ச. சிவம் அவர்களைப் பெரிதும் பாராட்டினர். தமிழ்த்துறையில் அன்று பணிபுரிந்த திரு கே. எசு மகாதேவன் அவர்கள், திரு தில்லை கோவிந்தன் அவர்கள், திரு உருத்திரமணி அவர்கள் திரு. க. ஆறுமுகம் அவர்கள் முதலிய எல்லோரையும் தம் குடும்பத்தினரைப் போலவே பரிவுடன் அன்பு காட்டிய திரு. ப. முருகன் அவர்கள் இளைஞரான மு. ச. சிவம் அவர்கள் மீது தனிப் பற்றுக் கொண்டிருந்தார். மாணவர்களிடையே புத்துணர்ச்சி ஊட்டி இளம் உள்ளங்களில் இன்பத் தமிழறிவைப் பாய்ச்சுவது கண்டு பெரிதும் மகிழ்ந்தார். தமிழ்த் துறையில் மூத்த பேராசிரியர்கள் விடுப்பு எடுத்த போதெல்லாம் அவர்களுடைய வகுப்புகளுக்கு இளங்கலை வகுப்பு, களுக்குங் கூடச் சென்று அவர்களுடைய பாடங்களைத் தொடர்ந்து நடத்துமாறு அன்புடன் உற்சாகம் ஊட்டினர் தமிழ்த் துறைத் தலைவர் அவர்கள்.

ஒரு நல்ல ஆசிரியர் ஒருசில நல்ல மாணவர்களை உருவாக்கியிருக்க வேண்டும் கோவை அரசினர் கலைக் கல்லூரியில் இவரிடம் பயின்ற மாணவ மணிகளுள் இன்றும் ஆசிரியர்பால்

அளவற்ற பற்றும் நன்மதிப்புங் கொண்டிருக்கும் டாக்டர் கே. எசு. கமலேசுவரன் அவர்கள் இப்போது பூ.ச. கோ. கலைக்கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக உள்ளார். அவருக்கு தமிழ்ப் பற்றை ஊட்டி வளர்த்து முதுகலையில் தமிழைச் சிறப்புப் பாடமாகப் படித்து முன்னேறுமாறு அறிவுரை கூறி வழி காட்டியவர் மு. ச. சிவம் அவர்கள் ஆசிரியரைப் போல வே ஆராய்ச்சித் திறன் பெற்ற திரு கமலேசுவரன் அவர்கள் ஆசிரியர் பண்டாரகர் பட்டம் பெறுவதற்கு முன்பே அந்த ஆராய்ச்சிப் பட்டம் பெற்று மொழியியலில் சிறப்பு மிக்க ஆராய்ச்சியறிஞராகத் திகழ்ந்து வருகிறார். தம்மில் தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து மன்னுயிர்க் கெல்லாம் இனிது' அன்றோ? ஆசிரியர் மு. ச. சிவம் பெற்ற முத்துக்களுள் இவர் தலைமை சான்றவர். இன்னும் பல நன்மாணுக்கரையும் உருவாக்கியுள்ளார்.

சென்னைக் கீழ்த்திசைச் சுவடி நூலகத்தில்

தமிழில் முதுகலைப் பட்டம் பெற்றவரே சென்னைப் பல் கலைக் கழக நூலகத்திற்குள் ஒளிந்து கொண்டிருக்கும் கீழ்த் திசைச் சுவடி நூலகத்தில் நூலகராக இருக்கும் வாய்ப்பைப் பெறுவர். கோவை கலைக் கல்லூரியில் மாணவர்களிடையே மகிழ்ச்சியில் திளைத்துக் கொண்டிருந்த மு. ச. சிவம் அவர் களுக்குச் சென்னைக் கீழ்த்திசைச்சுவடி நூலகத்தில் நூலகராகப் பணியமர்த்தம் கிடைத்தது 'புத்தகப் புழு'வான இவர் நூலகப் பணியைப் பெரிதும் விரும்பி ஏற்றுக் கொண்டார். ஆவதறியும் அறிவுத்திறன் வாய்ந்த திரு ப. முருகன் அவர்கள் சுவடி நூலகத்தில் பணியாற்றுவதில் சிக்கல் ஏற்படும் என்று முன்கூட்டியே எச்சரித்தார். இலயோலாக் கல்லூரியில் படிக் கும்போது (1952–54இல்) ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் இலயோலாக் கல்லூரியிலிருந்து கன்னிமாரா நூலகத்திற்கு நடந்தே சென்று படித்து வந்த மு. ச. சிவம் அவர்கள் கல்வி யில் கரையில்லாத சென்னை மாநகரையும், கன்னிமாராவை யும் பிரிந்த பிரிவாற்றாமை தீர மீண்டும் சென்னை செல்வதற் குத் துணிந்தார். வருவதை முன்னறிந்து கூறும் ஆற்றல்

மிக்க திரு ப. முருகன் அவர்களது எச்சரிக்கையைப் புறக் கணித்தார். அதனால் பின்னால் அந்நூலகத்தில் பல இன்னல் களுக்கு ஆளாக நேர்ந்தது.

உள்ளத்தில் சலிப்போ, வேதனையோ ஏற்படும் போதெல் லாம் இலண்டன் மாநகரத்துத் தெரு ஒன்றில் நின்று கொண் டிருந்தாலே போதும்; துன்பமெல்லாம் பறந்து போகும்' என்றார் ஆங்கில அறிஞர் சான்சன் அவர்கள். இலண்டன் மாநகரம் அறிவுள்ளங்களுக்கும் கலையுள்ளங்களுக்கும் அள வில்லாத இன்பம் அளிப்பது போலவே தமிழர்களுக்குச் சென்னை மாநகரம் இடையறாத இன்பம் அளித்து வருகிறது. மு. ச. சிவம் அவர்கள் சென்னையைக் 'காதலித்ததற்கு' முதன்மையான காரணம் சென்னையில் பல நூலகங்கள் இருப் பதுதான். உயர்நிலைப் பள்ளிப் படிப்பு முடியும் வரை படிப் பதற்கு நூல்கள் கிடைக்காமல் தவித்த இவருக்குக் கடல் மடை திறந்தது போல் எத்தனையோ நூலகங்கள் சென்னை யில் இவரை 'வருக' என்று அழைத்துக் கொண்டிருந்தன. கன்னிமாரா நூலகம், மாவட்ட நடுவண் நூலகம், அடை யாறு நூலகம், சென்னைப் பல்கலைக் கழக நூலகம், உள்ளூர்க் கிளை நூலகங்கள், பிரிட்டீசுக் கவுன்சில் நூலகம், பிரெஞ்சு மொழிப் பயிற்சி நூலகம், மாக்சுமுல்லர் பவன் (ஜெர்மன் மொழி நூலகம்), முதலிய பத்து நூலகங்களில் ஒரே சமயத் தில் உறுப்பினரானார்; அறிவுப் பசிதீர நூல்களைப் பயின்றார். நாள்தோறும் வெவ்வேறு நூலகங்களுக்குப் போவதே இவருக்கு வேலையாயிருந்தது.

1959இல் திருமணம் செய்துகொண்ட இவர் புதுமண வாழ்வில் ஈடுபடுவதிலும் நூலகங்களில் வாழ்வதையே பேரின்பமாகக் கொண்டார். அதனால் திருமணம் புரிந்து கொண்ட துணைவியார் ஓராண்டு பொறுத்துப் பார்த்துவிட்டு, "எந்நேரமும் புத்தகத்தையே கட்டிக் கொண்டிருக்கும் நீங்கள் என்னை ஏன் கட்டிக்கொண்டீர்கள்?" என்றே கேட்டு விட்டார். மு. ச. சிவம் அவர்களது புத்தகப் பித்து பலமுறை துணைவியாரின் சினத்திற்கும்,

சிறப்பிற்கும் வித்தாக அமைந்தது! எங்கே சென்றாலும் ஏடது கைவிடாத இவர் பலமுறை வீட்டுச் செலவுக்குரிய பணத்திற்குப்புத்தகங்களை வாங்கிவிட்டு உணவுச் செலவுக்குத் திண்டாடி நின்றிருக்கிறாராம். மாலையில் தேநீர் குடிப்பதற்குப் பதில் ஒரு புத்தகம் வாங்கினால் என்றும் பயன் தருமே என்று நினைப்பார். நகரப் பேருந்துகளில் ஏறிச்சென்றால் செலுத்தும் கட்டணத்திற்குரிய புத்தகம் வாங்கிவிட்டு நடந்தே செல்வார்! சென்னையில் இருக்குங் காலங்களில் சம்பளம் வாங்கிய அன்றைக்கு அவர் செல்லுமிடம் பழைய நூல்களை மலிவாக அன்று விற்ற மூரங்காடிதான்! கடற்கரைக்குச் செல்லும் நாட்களில் எல்லாம் திருவல்லிக்கேணிக் கடற்கரைக்கு முன்பு நடைபாதையில் விரித்து வைத்திருக்கும் பழைய நூல்களைப் பார்வையிடாமல் செல்லமாட்டார்! உலகிலேயே அழகான மெரீனாக் கடற்கரையில் அமர்ந்து பெறும் இன்பத்தினும் கடற்கரை ஓரத்தில் விற்கப்படும் நூல்களில் ஒரு சிலவற்றை வாங்கியதால் ஏற்படும் இன்பமே இவருக்கு அளவில்லாததாக இருக்குமாம்!

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் மாலை வகுப்புக்களில் பிரெஞ்சு, செருமன் ஆகிய மொழிகளைக் கற்ற இவர் சென்னையில் பிரெஞ்சு மொழிப் பயிற்சிக் கழகத்தில் மீண்டும் சேர்ந்து படித்துப் பிரெஞ்சு மொழியறிவை வளர்த்துக் கொண்டார்; 'மாக்சுமுல்லர் பவன்' சென்று செருமன் மொழியறிவை வளர்த்துக் கொண்டார். பிற்காலத்தில் ஈரோட்டிலிருந்து வெளிநாடு செல்லவிருந்த சிலருக்குச் செருமன், பிரெஞ்சு மொழிகளில் ஓரளவு பயிற்சி தந்து அனுப்பியுள்ளார்.

கீழ்த்திசைச் சுவடி நூலகத்தில் பணிபுரியும் வாய்ப்புப் பெற்றமை இவருடைய வாழ்க்கையில் ஒரு திருப்பு முனை எனலாம். மாலை நேரங்களில் வீட்டில் தங்காத இவர் பிரெஞ்சு, இந்தி, வடமொழி, தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய மொழிகளைப் பல ஆசிரியர்களிடமும் பயிற்சி நிறுவனங்களிடத்தும் சென்று கற்றுப் பல தேர்வு

களில் வெற்றி பெற்ருர்; பல சான்றிதழ்களையும் பெற்றுள்ளார். உருசியன், அரபி, இத்தாலி, இலத்தீன், கிரீக் முதலிய இன்னும் எத்துணையோ மொழிகளைக் கற்க வேண்டும் என்று தணியாத ஆர்வங் கொண்டிருக்கிருர்.

'புத்தக உலகம் தவிர நடைமுறை உலகம் புரியாதவர் இவர்' என்று இவரிடம் பழகுகின்ற நண்பர்கள் கூறுவதுண்டு. இவருடைய துணைவியாரும் இவ்வாறு பலமுறை கூறியதுண்டாம். இரு வேறு உலகத்தியற்கையன்ருே! இரண்டுலகிலும் வல்லவராதல் எல்லார்க்கும் எளிதில் எய்த முடியாததொன்று!

போக்குவரத்து ஊர்திகள் இல்லாத சாலைகளில் நடந்து செல்லும் போதும் படிக்கும் பான்மை உடைய இவர் பொருள்கள் வாங்குவதற்காக 'வளைவு' வரிசையில் நிற்கும் போதும், வங்கிகளில் பணம் வாங்குவதற்காகக் காத்திருக்கும் போதும், பேருந்துகள், புகை வண்டிகளில் பயணஞ் செல்லும் போதும் படித்துக் கொண்டிருப்பார். நூலருச் சுவையரான இவர் தம் கையில் உள்ள பையில் எப்போதும் ஏதாவதொரு புத்தகத்தை வைத்துக் கொண்டிருப்பார். காலத்தை வீணாக்குவதென்பது இவருக்குச் சிறிதும் பிடிக்காததொன்று. காலத்தை வீணடிக்க நேர்ந்தால் இவருக்கு ஏற்படும் தலை நோவைத் தணிக்கும் மருந்து புத்தகங்களே! நாள்தோறும் இரவு ஏறக்குறையப் பன்னிரண்டு அல்லது பதினொன்றரை வரை படிக்கும் இவரைப் பார்த்து இவருடைய குழந்தைகளும் "என்ன, தேர்வுக்குப் படிக்கும் மாணவர்களைப் போலத் தினமும் விடிய விடியப் படித்துக் கொண்டிருக்கிறீர்களே!'' என்று கேட்பர்.

ஓலைச்சுவடி நூலகத்தில் பணிபுரியும்போது இவருக்கு மனமகிழ்வு ஏற்பட்டதென்று கூற முடியாது. கல்லூரியின் இன்பச் சூழ்நிலை வேறு; அரசினர் அலுவலகங்களைப் போன்ற இந் நூலக அலுவலகப் பணியின் சூழ்நிலை வேறு! கல்லூரியில் பேராசிரியர்களால் பெரிதும் போற்றி மதிக்கப் பெற்ற இவர்

ஓலைச் சுவடி நூலகத் தலைவரால் 'கடைநிலை ஊழியர்' போல நடத்தப்பட்டாராம் ! இந்தப் புதிய சூழ்நிலை உரிமை உணர்வுடைய இவருக்கு ஒத்துக் கொள்ளவில்லை. வேறு பணிக்குச் செல்லும் வாய்ப்பு ஏற்படுமா என்று காலங் கருதிக் கொண்டு இருந்தார்.

தலைமை எழுத்தரின் தூண்டுதலால் நூலகத் தலைவரைப் பற்றிச் சில உண்மைச் செய்திகளை அவர் மூலமாகவே உயரதிகாரியாகிய கல்வி இயக்குநர் அவர்களுக்கு எழுதி அனுப்பியதால் இவர் ஓலைச்சுவடி நூலகப் பணியிலிருந்து விலக்கப்பட்டார். அதற்கு ஒரு திங்கள் முன்பு தான் இவருடைய துணைவியார் அதே ஓலைச்சுவடி நூலகத்தில் சுவடிகளைப் பார்த்து எழுதும் பகுதி நேரப் பணியாளராக அமர்ந்தார்! வேலையிழப்பு ஓலையை வாங்கிக் கொண்டு மு ச. சிவம் அவர்கள் துணைவியாரிடம் கூடச் சொல்லாமல் நேரே புதுச்சேரியில் உள்ள அரவிந்தர் ஆசிரமம் சென்று அவர் கண் கண்ட தெய்வமாக மதித்துப் போற்றிய 'அன்னை'யிடம் புத்தாண்டு நாளில் புதுவாழ்வு தருமாறு வேண்டினர்! அன்னை அருள் பாலித்த திறத்தைப் பிற்காலத்தில் உணர்ந்து நன்றிப் பெருக்கினல் உள்ளம் உருகினர்.

சில நாட்களாக நூலகத்திற்குக் கணவர் வராததை யறிந்த துணைவியாருக்கு மனதில் ஐயம் ஏற்பட்டது. நூலகத்தின் தலைமையெழுத்தர் மூலம் இச்செய்தி சில நாட்கள் கழித்து மெல்ல வெளியாயிற்று. இச்செய்தி கேட்ட துணைவியார் இடியுண்ட நாகம் எனத் துடித்தார்; வீட்டிற்குச் சென்று தன்னந்தனியாகப் புலம்பித் தவித்தார்; கண்ணீர்க் குளத்தில் தத்தளித்துக் கொண்டிருந்தார். எதிர்பாராத இந்த நிகழ்ச்சி அவருடைய உள்ளத்தில் என்றும் நீங்காத வடுவை உண்டாக்கி விட்டது. பிற்காலத்தில் கல்லூரிப் பணியில் அமர்ந்திருந்த போது ஓரிரு நாட்கள் காலதாமதமாக வீடு திரும்பினல் கூடப் "பழைய நிலை ஏற்பட்டு விட்டதனல் தான் இன்னும் வீடு திரும்பவில்லையோ?" என்று அஞ்சியது உண்டாம்!

'வெளியே சொன்னால் வெட்கம்; நினைக்க நினைக்கத் துக்கம்' என்ற நிலை துணைவியாருக்கு. 'எல்லாம் நல்லதுக்குத் தான்' என்ற நினைப்பு கணவனுருக்கு! குடும்பச் செலவுக்குக் கையில் ஒருகாசும் இல்லாத நிலையில் பார்த்தெழுதும் பணியையாவது தொடர்ந்து செய்யலாம் என்று துணைவியாரின் உள்ளம் துணிந்தது. ஏடெழுதும் போதெல்லாம், நூலகத்தில் நுழையும் போதெல்லாம் அவர் தம் கண்களை மீறிக்கொண்டுவந்த கண்ணீர் வெள்ளத்தைத் தடைபோட யாரால் முடியும்? நெஞ்சங் குமுறிக் கொண்டே தம் பணியைத் தொடர்ந்தார் அவர்தம் துணைவியார் அதேஒலைச் சுவடி நூல்கத்தில்! ஆனுல் நூலகத் தலைவரால் அப்பணியும் ஒரு திங்களுக்குள் மறுக்கப்பட்டது! கரைகடந்த கடல் வெள்ளத்தில் துடுப்பை இழந்த படகு போல் துயருற்று வாடினர் இருவரும்! இவரது துணைவியார் சென்னையிலிருந்து சொந்த ஊருக்குத் திரும்பினர். வேலையிழப்புப் பற்றி ஊர்ப்புறத்துப் பாமரமக்கள் இட்டுக்கட்டித் தகாத காரணங்கள் கூறியதெல்லாம் கேட்டு வெந்த புண்ணில் வேல் பாய்ந்தது போன்ற நிலையை அடைந்தார்.

மு ச சிவம் அவர்களோ எப்படியாவது சென்னையிலேயே வேருெரு பணியில் அமரலாம் என்றநம்பிக்கையுடன் அலைந்து கொண்டிருந்தார். இறைவன் அருளால் மூன்று திங்களுக்குள் மு. ச. சிவம் அவர்களுடைய வாழ்க்கையில் மற்ருெரு திருப்புமுனை ஏற்பட்டது! சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் என்னும் பல்கலைக் கழகத்தில் பதிப்பாசிரியராகப் பணி செய்யும் ஈடில்லாத நற்பேறு அவருக்குக் கிடைத்தது. ஆம், துன்பக் கடலைக் கடக்கும் தெப்பமாகவும், அறிவுக் கடலை நீந்துதற்குக் கப்பலாகவும் ஒருங்கே விளங்கியது சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்!

கழகப்பணியில் அமர்ந்தபின்பு மீண்டும் ஏறக்குறைய நான்காண்டுகள் சென்னை வாழ்வு கிடைத்தது. ஊரிலிருந்து திரும்பிய துணைவியார் உண்மை நிலைகளை விளக்கித் தமிழக முதலமைச்சர் பெருந்தலைவர் காமராசர் அவர்களுக்கு ஒரு

விண்ணப்பம் எழுதிச் சாதாரண அஞ்சலில் அனுப்பிவைத்தார்! உடனடியாகச் செயற்பட வேண்டும் என்று கல்வி இயக்குநருக்கு ஆணைபிறப்பித்தார் கருமவீரர் காமராசர் அவர்கள்! மு. ச. சிவம் அவர்கள் முன்பு அனுப்பிய மனுஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது! விசாரணைகள் நடைபெற்றன! தணிக்கையாளர்கள் அனுப்பப்பட்டனர். மனுவில் காணப்பட்டவை உண்மை என்பது உறுதியாயிற்று. 'ஊழல் புரிந்த ஓலைச்சுவடி நூலகத் தலைவர் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்' என்று திரு காமராசர் அவர்கள் ஆணையிட்டார். நேரில் பார்த்துக் கொடுக்காமல், சாதாரண அஞ்சலில் அனுப்பிய ஒரு சிறு விண்ணப்பத்தை மதித்து அசாதாரண விசாரணைகள் நடத்திக் குற்றம் புரிந்தவருக்குத் தண்டனையளிக்க வேண்டுமென்று ஆணையிட்ட 'ஏழை பங்காளர்' காமராசர் மறைந்தபோது பாதிக்கப்பட்ட இருவரும் கண்ணீர்க் காணிக்கைகளை அப்பெருந் தலைவருக்கு அளித்தனர்.

வேலையிலிருந்து ஓய்வு பெறுவதற்கு ஓரிரு திங்களுக்கு முன்பு தமக்கே தண்டனைவரப் போகிறதே என்றுகலங்கினர், நூலகத் தலைவர்! பலகாலமாகக் குருதியழுத்தத்தால் துன்புற்றுக் கொண்டிருந்த அவருக்கு இச்செய்தி விடுதலை வழங்கி விட்டது, இவ்வுலகிலிருந்து! நடுச்சாலையில் மயங்கி விழுந்து உயிர்நீத்தார்.

கழகப் பணியில் அமர்வதற்கு ஒரு திங்களுக்கு முன்னதாக இவர்தம் அன்புக்குரிய அண்ணர், பெரியாரின் 'பக்தர்', பெரியாரின் நெறியே பெருநெறி எனக்கொண்டு வாழ்க்கையில் கடைப்பிடித்து வரும் ஈரோடு இரும்புக்கடை கறுப்பண்ணன் அவர்களும், அவர்தம் இனிய நண்பரும், பெரியாரின் பேரன்புக்குரியவருமான திரு. அங்கப்பர் அவர்களும் மு. ச சிவம் அவர்களைத் தந்தை பெரியாரின் இல்லத்துக்கு அழைத்துச் சென்றனர். தந்தை பெரியாரை மேடைகளில் மட்டும் பார்த்திருந்த மு. ச. சிவம் அவர்கள் அன்று திருச்சியில் அவர்தம் இல்லத்தில் பார்த்தபோது இவர்

வயதில் இளையவராயினும் பெரியார் மிகுந்த மரியாதை யுடன் வரவேற்று இன்மொழிகள் கூறியதுகண்டு வியப்பும் உவப்பும் எய்தினரோம். 'கட்டாயம் ஆவன செய்கிறேன்' என்று அன்புடன் கூறிய தந்தை பெரியாரை எஞ்ஞான்றும் உள்ளத்தில் மறவாமல் போற்றி வருகிறார்.

ஒலைச்சுவடி நூலகத்திலிருந்து விலக்கப்படும் நாளுக்கு முந்திய நாளன்றுதான் சைதாப்பேட்டை அரசினர் குடியிருப் புப்பகுதியில் குடியிருப்பதற்காக ஒரு வீடு மு. ச. சிவம் அவர் களுக்குக் கொடுக்கப்பட்டது இச்செய்தி இதுவரை அவர் தம் துணைவியாருக்குக் கூடத் தெரிவிக்கப்படவில்லையாம். கைக் கெட்டியது வாய்க்கெட்டவில்லை! இவ்வேலையிழப்புப் பற்றி மு ச. சிவம் அவர்கள் அவ்வளவாகக் கவலைப்பட்ட தில்லை. வேலையிழப்புக்கு ஒரு காரணமாகக் குறிப்பிடப் பட்டது என்னவெனில் மு. ச. சிவம் அவர்கள் 'இரண்டாண் டுப் பணிப்பயிற்சிக் காலத்தில் தேறவேண்டிய கணக்குத் தேர்வில் தேறவில்லை' என்பதாகும். ஆனால் வேலையிழப்புக்குப் பின் பதினைந்து நாட்களுக்குள் கணக்குத்தேர்வில் மு. ச சிவம் வெற்றி பெற்றதாக 15-1-1961 நாளிட்ட அரசுச் செய்தி யிதழில் (Gazette) அறிவிப்பு வந்தது. (It was too late!) "Tbings are shaped by mysterious Hands" என்ற உண்மை யை மறுப்பவர்கூட அதற்கு ஆளாகாமல் இருக்க முடியாதே!

"நூலக வேலையிழப்பினால் இவர் குடும்பம் பெரிதும் அல்லலுக்கு ஆளாகின்றதே" என்று இவருக்காகப் பரிந்துரை கூறினர், இவருடைய நண்பர் ஒருவர். அப்போது கல்வி இயக்குநர் அவர்கள் "உயர்நிலைப்பள்ளி ஒன்றில் வேலைக்கு அமர விருப்பமிருந்தால் உடனே ஏற்பாடு செய்கிறேன்" என்று உறுதி கூறினர். ஆனால் கல்லூரியில் பணியாற்றிய பிறகு உயர்நிலைப்பள்ளிக்குச் செல்வதை மு. ச. சிவம் அவர் களின் உள்ளம் விரும்பவில்லையாதலின் அந்த வாய்ப்பை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை.

ஒரு நாள் மு. ச. சிவம் அவர்கள் அமைந்த கரையிலி ருந்து வந்த ஒரு பேருந்தில் இருக்கையில் அமர்ந்து பயணம்

செய்துவந்தார். வழியில், அவரது வேலையிழப்புக்கு முழுக் காரணமாயிருந்த துணைக்கல்வி இயக்குநர் ஏறினார். அமருவதற்குஇருக்கை இல்லாமல் நின்றுகொண்டு வந்தார். பின்பு மு. ச. சிவம் அவர்கள் அமர்ந்திருக்கும் இருக்கையருகே வந்து நின்றார். உடனே மு. ச. சிவம் எழுந்து தம் இருக்கையை அவருக்கு ஈந்தார். அவரை அடையாளம் கண்டுகொண்ட துணைக்கல்வி இயக்குநரின் முகம் உடனேமாறியது. ஏனெனில் மாறியது நெஞ்சம்! வேலையிலிருந்து ஓய்வு பெற்றிருந்த அவர் தம்மைப்போலத் தானே மு. ச. சிவம் அவர்களும் வேலையின்றித் தவித்திருக்கக் கூடும் என்ற பரிவுணர்ச்சி அவர் உள்ளத்தில் தோன்றியது. அவருடைய கண் கலங்கியது! வேலையை இழக்கச் செய்ததையறிந்தும் இடங்கொடுத்து உபசரிக்கும் நற்பண்பு வாய்ந்த இவரை வேண்டுமென்றே அகற்றிவிட்டோமே!என்று அவருடைய கண்கள் வெட்கத்துடன் பேசின போலத் தோன்றிற்றும். "உமக்கு வேறு வேலை கிடைக்க முயற்சி செய்வேன். அந்த வேலை போனதற்காக வருந்த வேண்டாம்" என்று ஆறுதல் கூறினார். சூழ்நிலையால் மாந்தர்கள் எத்துணை மாற்றம் எய்தி விடுகிறார்கள்!

இதே துணைக்கல்வி இயக்குநர்தாம் முன்னர் ஒருமுறை மு. ச.சிவம் அவர்களைத் திடீரென்று தம்மை வந்து பார்க்குமாறு கட்டளையிட்டாராம். மு. ச. சிவம் ஒலைச்சுவடி நிலையத்திலிருந்து ஓடோடிச் சென்று அவரைப் பார்த்தார். அப்போது அரை மணி நேரம் எதிரில் நிற்க வைத்துக் கொண்டு கடுமையான சொற்களால் துணைக் கல்வி இயக்குநர் மு. ச. சிவம் அவர்களை வைது தீர்த்தாராம்! "நூலகத் தலைவரைப் பற்றி ஏதேனும் எழுதி நேரடியாக இங்கே அனுப்பி வைத்தால் தொலைச்சுடுவேன்! சாக்கிரதை!" என்று மிரட்டினராம். எதிர் பாராத இந்தத் தாக்குதலால், அரவினால் கடியுண்ட யானை போல் கலங்கிக் கையற்று மயக்கமடைந்து கீழே சாய்ந்து விட்டார் பிறகு முகத்திற்குத் தண்ணீர் தெளிக்கப் பெற்று மயக்கம் தெளிந்தார். மு. ச. சிவம் அவர்கள் திடீரென்று மயக்கமுற்றது தம் வாழ்நாளிலேயே இந்த ஒரு முறைதான் என்று கூறுகிறார்! அரை மணி

நேரத்திற்கு மேல் நிற்கவைத்து மயக்கம் அடையச் செய்த ஒருவர் தமக்கு முன்னல் அரைக் கணமும்நின்று கொண்டிருப் பதைக் காணப் பொறுக்காமல் தமது இருக்கையை உடனே அவருக்கு ஈந்த மு. ச.சிவம் அவர்கள்,

'இன்ன செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்''

என்ற குறளுக்கு ஓர் எடுத்துக் காட்டாய் விளங்கினர்!

கல்வி இயக்குநரின் பாராட்டு

அண்மையில் ஈரோட்டில் பெரியார் நூற்றாண்டு விழாத் தொடக்கநாளில் விழாவைத் தொடங்கிவைத்துப் பேசிய மாண்புமிகு நடுவண் அமைச்சர் திரு. செகசீவன்ராம் அவர்களின் ஆங்கிலப் பேச்சை மு. ச. சிவம் அவர்கள் அழகு தமிழில் வடித்தளித்த பான்மையினையறிந்து, மறு நாள் விழாவில் ஆற்காடு டாக்டர். ஏ. கிருட்டிணசாமி அவர்கள் விரைவாகவும் செறிவாகவும் எழிலார்ந்த முறையிலும் பேசும் பேச்சையும் மொழிபெயர்ப்பதற்காக விழாமேடையில் மு. ச. சிவம் அவர்கள் அமர்த்தப் பெற்றிருந்தார். அவர் அருகில் தான்முன்னள் கல்விஇயக்குநர் திரு. நெ. து. சுந்தர்வடிவேலு அவர்கள் அமர்ந்திருந்தார்! முன்னள் கல்வி இயக்குநருக்குச் சமமான சரியாசனம் ஒன்றைப் பேராசிரியர் மு. ச. சிவம் அவர்களுக்குத் தந்தாள் தமிழ்த்தாய்! ''திரு செகசீவன்ராம் அவர்களது பேச்சை நேற்று அழகாக மொழியாக்கம் செய்தீர்கள்'' என்று அவருடைய வாய் பாராட்டியது. ''இன்று டாக்டர்கிருட்டிணசாமி அவர்களுடைய பேச்சையும் மொழி பெயர்க்கப் போகின்றீர்களா? மகிழ்ச்சி'' என்று கூறினர் ! வசிட்டரின் வாயால் வாழ்த்துப் பெற்றார் மு. ச. சிவம் அவர்கள்.

கழகத்திற் செய்த பணிகள்

எண்ணிலாத நூல்களைத் தொகுத்தும், இயற்றியும் தமிழுக்கு அரும் பெரும் தொண்டாற்றி வரும் மு. ச. சிவம் அவர்களுக்கு உரமூட்டித் தக்க பயிற்சி வழங்கியது சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம். நூல்களைப் பதிப்பிடும் பயிற்சி அச்சுப்பிழை திருத்தும் பயிற்சி, கட்டுரைகள், நூல்கள் எழுதும் பயிற்சி அகராதிகள் தொகுக்கும் பயிற்சி, மொழி பெயர்க்கும் பயிற்சி முதலிய பல பயிற்சிகளைத் தந்து இவரை ஆளாக்கியது, உருவாக்கியது, வடிவமைத்தது. கழகத்தில் காலையிலிருந்து மாலை வரை அச்சுப்பிழை திருத்திய போதும் வீட்டுக்குச் சென்று வீட்டு வேலையாகக் கொடுக்கப் பெற்ற ஓரிரு அச்சுப் படிவங்களைத் திருத்தும் போதும் மு. ச. சிவம் ஒரு நாளும் சலிப்பெய்தியதில்லை. அச்சிடப் பெறும் ஒவ்வொரு நூலையும் 'எழுத்தெண்ணிப் படிக்கும்' நல்வாய்ப்பினைப் பெற்றார்!

உடல் சோர்வுற்றாலும் உள்ளம் சோர்வுறாது தமது எண்பத்தைந்தாம் அகவையிலும் நாள்தோறும் அச்சுப் படிவம் திருத்தி வரும் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக ஆட்சியாளர், பெருமதிப்பிற்குரிய, பேரன்பிற்குரிய வ சுப்பையா பிள்ளையவர்கள் அச்சுப் படிவம் திருத்தும் கலையை இவருக்குக் கற்றுத் தந்தார். ஆண்மகவுப் பேறில்லாத திரு வ. சு. அவர்கள் மு. ச. சிவம் அவர்களைத் தம் மகன் போலவே கருதி அன்பும் ஆதரவும் காட்டி வந்ததை மு ச. சிவம் அவர்கள் எழுமை எழுபிறப்பிலும் எண்ணிப் பார்க்கக் கடமைப் பட்டிருப்பதாகக் கூறுகிறார்! ஒரோ வழிப் பிறரிடம் குற்றங் கண்ட போதுகனன்று உரைக்கும்பான்மையராயினும் நான்காண்டுப் பணிக் காலத்தில் திரு வ. சு. அவர்கள் ஒரு நாளும் ஒரு முறை கூட மு. ச. சிவம் அவர்களைச் சிறிதேனும் சினந்துரைத்ததே இல்லையாம்! இஃது ஓர் பெரு வியப்பே என்று மு. ச. சிவம் கூறுகின்றார்.

அறிவுக்கும், தமிழன்புக்கும்ந ன்மதிப்பளிக்கும் திரு· வ. சு. அவர்கள் மூ. ச. சிவம் அவர்களுக்குப் பற்பல பயிற்சிகள் கொடுத்தார் பணியில் சேர்ந்தவுடனே இது வரை வாங்கி வந்த ஊதியத்தை விட மிகக் குறைவான ஊதியந் தானே தர வேண்டியிருக்கிறது என்று வருந்தி "மொழி பெயர்ப்புக்களைச் செய்து தாருங்கள்" அவற்றிற்குத் தனியாகப் பணம் கிடைக்கும்" என்று அன்புடன் கூறினர்கள். அவ்வாறே நான்கு புதினங்கள் மொழி பெயர்த்துக் கொடுக்கப் பெற்றன. புகழ் பெற்ற மற்ற எழுத்தாளர்களுக்குக் கொடுக்கும் ஊதிய அளவு முதன் முதலாக நூல் எழுதிய மூ. ச சிவம் அவர்களுக்குக் கொடுக்கப் பெற்றது தமிழகத்து அறிஞர்களின் ஆற்றல்களைக் கண்டறிந்து அந்த ஆற்றல்களை வெளிக் கொணர்ந்து அதனுல் தமிழும் தமிழகமும் நன்மை பெறும்படி செய்வதில் தலை சிறந்தவர் உயர் திரு வ. சு. அவர்கள்! பெரு மழைப் புலவரின் ஆற்றலறிந்து எத்துணை எத்துணை நூல்களுக்கு அவரை உரை எழுதுமாறு தூண்டி அவர்தம் புலமையைத் தமிழுலகம் பெறுமாறு செய்தார்! திரு சு. அ இராமசாமிப் புலவர், திரு சண்முக சுப்பிரமணியம், திரு. இரா. இளங்குமரன் போன்ற அறிஞர் பெருமக்களின் அறிவுத் திறனுல் தமிழ்த் தாய் அழகு பெறுமாறு செய்தார். தம்மிடம் வரும் தமிழன்பர்கள் சிலரிடம் 'இக்கழகம் தோன்றியிராவிடில்......?' என்று சிந்தித்துப் பார்க்கச் சொல்லுவார்கள் கடல் கோள்களினுல் அழிந்த நூல்களைக் காட்டிலும் படிப்பறிவின்மையாலும், போற்றுவாரின்மையாலும் அழிந்துள்ள நூல்களே மிகுதி எனலாம். அவ்வாறு போற்றுவாரின்றிப்படிப்பாரின்றி நூல்கள் அழிந்து விடக் கூடாதே என்ற நல்லுணர்வால் எல்லாப் பழந்தமிழ் நூல்களையும் வெளியிட்டுத் தமிழர்க்கு உணர்வூட்டிய, உயிரூட்டிய பெருந்தகையாளர் வ. சு அவர்களின் இக்கேள்வி மு. ச. சிவம் அவர்களிடம் கேட்கப் பெற்ருல், "கழகம் இன்றேல் பல பேரறிஞர்களின் ஆற்றல்கள் அங்கணத்துள் உக்க அமிழ்து போல மண்ணோடு மண்ணுய்த்தான் போயிருக்கும். கழகம் இன்றேல் மு. ச. சிவம் இல்லை" என்றுதான் ஆணித்தரமாகப் பதில் உரைப்பார்.

1961 இல் சங்க இலக்கியங்களுக்கெல்லாம் உரை எழுதி முடித்து உரை நிறைவு விழாச் செய்த போது சங்க இலக்கியத்தின் பெருமையைச் சுருக்கி ஒரு சிறு நூலில் யாத்துத் தருகவென மு. ச. சிவம் அவர்களைப் பணித்தார். திரு. வ சு. அவர்கள், அதனால் "A Short Account of Sangam Literature" என்ற சிறு நூல் மலர்ந்தது. மு. ச. சிவம் அவர்கள் முதன் முதலில் எழுதி அச்சிட்டு வெளிவிடப் பெற்றது ஓர் ஆங்கில நூலே! அதனை எழுதுமாறு தூண்டியவர் தாமரைத்திரு. வ. சு. அவர்களே!

யார் யாருக்கு என்னென்ன ஆற்றல் உள்ளடங்கியுள்ளன என்பதனை ஆய்ந்து அறிந்து அவற்றை வெளிக்கொணர்ந்து உலகம் பயனுறச் செய்ய வேண்டும் என்பதே சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக ஆட்சியாளர் வ சு. அவர்களின் தணியாத தொண்டு. அவருடைய தனிமுயற்சியாலேயே கழகம் ஆயிரத் தெண்ணூறுக்கு மேற்பட்ட நூல்களை வெளியிட முடிந்தது.

கழக நூல்கள் யாவும் தரம் வாய்ந்தவையாகவும், நல்ல நடையில் எழுதப் பெற்றவையாகவும் இருத்தல் வேண்டும் என்பதே திரு. வ சு. அவர்களின் குறிக்கோள். அதனால் மு. ச. சிவம் முதலில் எழுதிய 'மருத்துவர் மகள்' என்ற மொழி பெயர்ப்பு நல்ல நடையில் அமைந்திருக்கிறதா என்று பார்வையிடுமாறு கழகப்புலவர் உயர்திரு. சங்குப்புலவர் அவர்களைக் கேட்டுக் கொண்டார் ஆழ்ந்த தமிழ்ப் புலமையும், பழகுதற்கினிய பண்பும் மிக்க சங்குப்புலவர் அவர்கள் மு ச. சிவம் மொழியாக்கஞ் செய்த முதல் நூலைப் படித்துப் பார்த்து நல்ல நடையில் அமைந்துள்ளதாக நவின்றார். திரு வ சு. அவர்களும் மெய்ப்புத் திருத்தும் போது அந்நூல் முழுமையும் படித்துப் பார்த்து மு ச சிவம் அவர்களின் தமிழ் நடையை முழு மனதுடன் ஏற்றுக் கொண்டார், அதன் பின்பு மேலும் மூன்று புதினங்கள் மு. ச. சிவம் அவர்களால் மொழியாக்கம் செய்யப் பெற்றுக் கழகத்தால் வெளியிடப் பெற்றன.

முற்காலத்தில் தமிழ்ச் சங்கப் பலகையில் இடம் பெறும் நூல்கள் புலவர்களால் போற்றப் படத் தக்கவை இருந்தன. அது போலவே இக்காலத்தில் கழகத்தவரால் வெளியிடப் பெறும் நூல்கள் தமிழறிஞர்களால் ஏற்றுக் கொள்ளத் தக்கவையாக விளங்குகின்றன.

மு. ச. சிவம் கழகப் பணியில் அமர்ந்த பிறகு பற்பல ஆங்கில நூல்களும் கழகத்திலிருந்து வெளியிடப் பெற்றன. குறிப்பாக ஜேம்ஸ் ஆலன் என்பார் எழுதிய நூல்கள் பல வெளியிடப் பெற்றன. மதுரைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் உயர்திரு டாக்டர் வ. சுப. மாணிக்கம் அவர்களின் ஆய்வு நூலான 'Tamil concept of love' என்ற நூலும் வெளியிடப் பெற்றது.

பத்துப் பாட்டினை இலங்கைத் தமிழறிஞர் திரு. செல்லையா அவர்கள் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருந்தார் தமிழ் மூலம் ஒரு பக்கத்திலும் ஆங்கில மூலம் எதிர் பக்கத்திலும் அமையுமாறு பதிப்பிக்குமாறு மு. ச. சிவம் கேட்டுக் கொள்ளப் பெற்றார். ஆங்கில மொழி பெயர்ப்பை மூலத்துடன் ஒப்பிட்டுப் பார்த்த மு. ச. சிவம் சிற்சில இடங்களில் மொழி பெயர்ப்புப் பகுதி இல்லாது போனமையை அறிந்தார். விடுபட்ட பகுதிகளை நிறைவு செய்தார் ஒவ்வொரு பக்கத்திலும் தமிழுக்குச் சரியாக மொழி பெயர்ப்புப் பகுதி அமைவதற்காக தமிழிலும் ஆங்கிலத்திலும் அடிக் குறிப்புகள் சேர்த்துப் பக்கங்களைச் சரி செய்தார். முன்னாள் நடுவண் அமைச்சர் டாக்டர் ப. சுப்பராயன் அவர்களுடைய முன்னுரையுடன் பத்துப் பாட்டின் புதிய பதிப்பு வெளி வந்தது.

உயர்திரு வ. சு. அவர்கள் மு. ச. அவர்களிடம் இளமையிலிந்தே ஊறிக் கிடந்த இன்னொரு ஆற்றலை அகராதிகளைத் தொகுக்கும் ஆற்றலையும் வளர்த்து விட்டார். இன்று மு. ச. சிவம் எண்ணற்ற அகராதிகளைத் தொகுத்து அகராதித் துறையில் ஒப்பற்ற அறிஞராகத் திகழுமாறு செய்த பெருமை

தமிழுக்கு அணியெனத் திகழும் வியத்தகு அகராதிகளை ஆக்குவதற்கு வித்திட்ட பெருமை செந்தமிழ்க் காவலர் உயர் திரு வ சு. அவர்களையே சாரும். ஏற்கனவே தொகுக்கப் பெற்றிருந்த **பல்பொருள் ஆங்கிலத் தமிழ் அகரவரிசை** என்ற நூலை விரிவாக்குமாறு மு.ச. சிவம் கேட்டுக் கொள்ளப் பெற்றார் **திரு. பாலகிருட்டிணன்** அவர்கள் தொகுத்து வைத்திருந்த தமிழ்–ஆங்கில அகரவரிசையை இரு மடங்கு விரிவாக்கிச் செப்பனிடும் பணியும் இவருக்கு அளிக்கப் பெற்றது. அன்று தொகுத்த கழகத் தமிழ்-ஆங்கில அகர வரிசைஅண்மையில்தான் வெளியிடப்பெற்றது ஆனால் இந்நூல் உருவாவதில் மு. ச. சிவம் அவர்களின் பங்கினைப் பற்றி ஏனோ முன்னுரையில் குறிப்பிட மறந்து விட்டார்கள்!

தமது ஏழு அல்லது எட்டாவது வயதிலேயே கல்கி, ஆனந்தவிகடன் போன்ற இதழ்களையும், கதை நூல்களையும் படிக்கும் போதே கடினமான சொற்களையெல்லாம் ஏட்டில் குறித்து வைக்கத் தொடங்கிய மு. ச. சிவம் பிற்காலத்தில் எந்த நூலைப் படித்தாலும் குறிப்புகள் எடுக்கும் பழக்கத்தை மேற்கொண்டார். இவ்வாறு குறிப்புகள் எழுதிய ஏடுகள் முந்நூறுக்கு மேல் இவரிடம் உள்ளன.

திரு வ சு. அவர்கள் கொடுத்த பயிற்சியினாலே நாலாண்டுக் கழகப் பணி முடித்த பிறகு அகராதித் துறைக்கே தம்மை முழுதும் ஆட்படுத்திக் கொண்டார். இருபதாண்டுகளுக்கு மேலாகஇத்துறையில் இடைவிடாது உழைத்து நூற்றைம்பதுக்கு மேற்பட்ட அகர வரிசைகளைத் தனியொருவராக உருவாக்கி ஒரு சாதனையை ஏற்படுத்தியுள்ளார்; தமிழின் தனிச் சிறப்புக்களையும் சொல்லின் செல்வங்களையும் பாரோர் அறியுமாறு செய்துள்ளார்.

மறைத்திரு மறைமலையடிகளாரின் திருமகனார், சிவ நெறிச் செல்வர் **மறை. திருநாவுக்கரசு** அவர்களின் அரிய நட்பு கழகப் பணிக் காலத்தில் இவருக்கு வாய்த்தது. அடிகளாரின் நாட்குறிப்பு ஏடுகளை மறை திருநாவுக்கரசு

மு. ச. சிவத்திடம் கொடுத்து வைத்திருந்தார். திரு வ சு. அவர்கள் அந்த நாட்குறிப்புகளையெல்லாம் வாங்கிப் படியெடுக்கச் செய்தார். அடிகளாரின் நாட் குறிப்புகளிலிருந்து இன்றியமையாத பகுதிகளைக் குறித்துத் தருமாறு மு. ச. சிவம் கேட்டுக் கொள்ளப் பெற்றார். அடிகளாரின் நாட் குறிப்புகளிலிருந்து அவர் தம் மாண்புகளையும் வியத்தகு புலமைத் திறங்களையும் அரிய பண்புகளையும் பற்றி ஒரு நூல் உருவாக்கி வருகின்றார்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஆய்வு

மு. ச. சிவம் அவர்களின் எழுத்துத் திறனையும், ஆய்வுத் திறனையும் அறிந்த மறைந்த அறிஞர் திரு தெ. பொ மீனாட்சி சுந்தரனார் அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் மொழியியல் துறைப் பேராசிரியராக இருந்தபோது மொழியியல் துறையில் ஆய்வு செய்யும் நல்வாய்ப்பை இவருக்கு நல்கினார். ஆனால் ஆராய்ச்சி மாணவராய்ச் சேர்ந்த பிறகு சிதம்பரநாதன் அவர்களின் பழைய மாணவர்தாமே என்ற எண்ணத்தினால் இவரைப் புறக்கணிப்புச் செய்தார். பேராசிரியர்களுக்கிடையே தோன்றும் சிறு காழ்ப்புணர்ச்சி கூட மாணவர்களை எவ்வளவு பாதித்துவிடுகிறது!

மு. ச. சிவம் அவர்களின் ஆராய்ச்சிக்குரிய இரண்டாண்டுக் காலம் முடிவதற்கு முன்பே திரு தெ பொ. மீ. அவர்கள் மதுரைப் பல்கலைக் கழகத் துணை வேந்தராகும் நல்வாய்ப்பைப் பெற்றார். துணை வேந்தர் பதவியை ஏற்றுக் கொள்ளுமுன்பு தம்மிடம் ஆய்வு செய்து வந்த மாணவர்களையெல்லாம் ஆய்வுகளை முடித்துக் கொள்ளுமாறு கட்டளையிட்டார். அதனால் ஆய்வுப் பணி முடியுமுன்பே மு. ச சிவம் அருள்மிகு பழனியாண்டவர் கலைக்கல்லூரியில் தமிழ்ப் பயிற்றுநராகப் பணி ஏற்கச் செல்ல நேரிட்டது.

மொழியியல் துறையில் தம் மாணவர் திரு சு. கமலேசுவரன் அவர்களுடன் மு ச. சிவம் அவர்களும்

ஆய்வு நடத்தினர். செஞ்சொற் கொண்டல் திரு **சொ சிங்காரவேலன்** அவர்களும் ஆய்வுக் காலத்தில் மு ச. சிவத்தின் இனிய தோழரானர்.

பல ஆண்டுகளுக்குப் பிறகு எம் லிட். பட்டத்திற்கான தம்ஆய்விற்கு வகுப்புத்தோழர் திரு ச. அகத்தியலிங்கம்அவர்கள் வழிகாட்டி யாக அமைய, மாணவர் திரு கமலேசுவரன் அவர்களின் வகுப்புத் தோழர் **டாக்டர் இ அண்ணுமலை** அவர்கள் (மைசூரில் உள்ள நடுவண் அரசினரின் இந்திய மொழிகள் நிறுவனத்தின் துணை இயக்குநர்) ஆய்வுக் கட்டுடுரையைப் படித்து மதிப்பீடு செய்தார்!

பழனியாண்டவர் கலைக் கல்லூரிப் பணி

இவர்தம் வழிபடு தெய்வமான தமிழ்முருகன் திருவருளால் பழனியில் உள்ள அருள்மிகு பழனியாண்டவர் கலைக் கல்லூரியில் வேலை கிடைத்தது. அக் கல்லூரியில் தமிழ்ப் பயிற்றுநராகப் பணி புரிந்த திரு **வி. ஞானசுந்தரம்** அவர்கள் டாக்டர் பட்ட ஆய்வுக்காக அண்ணுமலைப் பல்கலைக் கழகம் சென்ருர். 1965 டிசம்பர் மாதத்தில் அந்த இடம் காலியாயிருப்பதறிந்து மு. ச. சிவம் அவ்வேலைக்கு விண்ணப்பம் செய்தார். ஆனுல் அக்கல்லூரி முதல்வர் ஆண்டு முடிவதற்கு இன்னும் சில மாதங்களே இருந்தமையின் வேறு யாரும் அமர்த்தப்பட வேண்டியதில்லை என்று கூறி விட்டார். எனினும் பல ஆராய்ச்சிப் பரிசுகளையும் தங்கப் பதக்கங்களையும் பெற்றிருப்பதனை அறிந்த அக்கல்லூரி நிர்வாகத் தலைவர் உயர்திரு வி. வி. சி. ஆர். முருகேச முதலியார் அவர்கள் இவரைப் பணியில் உடனே அமர்த்த வேண்டுமென்று கூறிப் பணியமர்த்தம் செய்தார்.

அடிக்கடி பழனித் திருமலைக்குச் சென்று வழிபட்ட மு. ச. சிவம் அவர்கள் மலைக்குச் செல்வதினும் மிகுதியான தடவை மலையின் அடிவாரத்திலுள்ள நூலகத்திற்குச் சென்ருர். முருகனைப் பற்றிய ஐந்நூறு நூல்களைப் படித்து

முருகனுக்குரிய பன்னீராயிரம் திருப்பெயர்களையும் அடைமொழிகளையும் தொகுத்தார். ஒரு நாள் அந்த நூலுக்கு என்ன பெயர் வைக்கலாம் என்று சிந்தித்துக் கொண்டே மலை மீது ஏறியபோது 'அருட்செல்வம்' என்ற தொடர் அவர் உள்ளத்தில் பளிச்சிட்டது. அதனால் முருகன் அருட்செல்வம் என்ற தலைப்பை இந்த நூலுக்கு அளித்தார் மேலும் பல்லாயிரம் நூல்களைப்படித்து நிகண்டுவின் முதற்பகுதியான தெய்வப் பெயர்ப்புகுதியை விரிவாக்கி 'அருட்செல்வம்'என்ற பொதுத் தலைப்பில் பத்து நூல்களைத் தொகுத்துள்ளார்.

'முருகன் அருட்செல்வ'த்தை அருள்மிகு பழனியாண்டவர் தேவத்தானம் வெளியிடுவதே பொருத்தமானது என்று கருதினர். திருப்பதி தேவத்தானத்தார் பற்பல நூல்களை வெளியிடுவதைப் போலவே இந்த அரிய நூலையும் பழனித்தேவத்தானத்தார் வெளியிட வேண்டும் என்றுவேண்டினர் உயர்திரு வி. வி. சி. ஆர் முருகேச முதலியார் அவர்களின் பரிந்துரையை ஏற்று அப்போதைய அறநிலையத் துறை ஆணையர் திரு சாரங்கபாணி அவர்கள் இந்நூல் வெளியிடுவதற்காக ஐயாயிரம் ரூபாயைத் தேவத்தான நிதியிலிருந்து ஒதுக்கினர். முருக பக்தராயிருந்தும் பழனித் தேவத்தான நிர்வாக அதிகாரி திரு கே. கே. மேனன் என்பவர் அந்த நூலை வெளியிட ஏனோ விரும்பவில்லை. அதனால் அவர் அருள்மிகு பழனியாண்டவர் பண்பாட்டுக் கல்லூரியில் பணிபுரிந்த தமிழ்ப் பேராசிரியரை அழைத்து "இந்த நூல் விரைவில் விற்பனையாகக் கூடியதன்று. இதனால் தேவத்தானத்துக்கு அதிக ஊதியம் ஏற்படாது" என்று குறிப்புரை எழுதுமாறு தூண்டினராம். அப்பேராசிரியர் மு. சசிவம் அவர்களின் சிறந்த நண்பராயிருந்தும், மேலதிகாரியின் வேண்டுகோளை மறுக்க முடியாமல் அவர் சொல்லியவாறே பரிந்துரை செய்தார். அதன் விளைவாக அந்நூல் அச்சிடப்படாமல் நின்று விட்டது. 'சாமி வரங் கொடுத்தாலும் பூசாரி வரங் கொடுக்கவில்லை' என்பது உண்மையாயிற்று! தமிழ்ப் பணி செய்வதற்கு இடையூறாக இருக்குமாறு தமிழ்ப்

பேராசிரியர்களையே பயன் படுத்தியது வருந்துதற் குரியது.

ஆனால் காஞ்சி காமகோடி பீடத் தலைவர் **தவத்திரு சங்கராசாரியார்** சுவாமிகள் அவர்கள் திரு மு. ச. சிவம் அவர்கள் தொகுத்துள்ள 'அருட்செல்வம்' நூல்களைப் பற்றிக் கேள்வியுற்றுத் தம்மை வந்து பார்க்குமாறு அருளாணை பிறப்பித்தார். போளூரில் முகாமிட்டிருந்த போது காம கோடி பீடத் தலைவர் பெரியவர்களும், புதுப் பெரியவர்களும் மு ச சிவம் தொகுத்து வைத்திருந்த 'அருட்செல்வம்' நூல்களைப் பார்வையிட்டார்கள். தெய்வத் திருப்பெயர்கள் மக்கள் நாவில் நடமாடுவது நல்லது என்று கருதி உடனே விநாயகர் அருட்செல்வம், கலைமகள் அருட் செல்வம், திரு மகள் அருட் செல்வம் ஆகிய மூன்று நூல்களையும் ஆயிரம் படிகள் அச்சிடுவதற்கு இருபது ரீம் தாள்களை அன்பளிப்பாக வழங்கினார்கள்.

நிகண்டுகளில் விநாயகரைக் குறிக்க ஏறத்தாழ இருபது சொற்களே உள்ளன. ஆனால் மு. ச. சிவம் தொகுத்த விநாயகர் அருட்செல்வத்தில் விநாயகரைக் குறிக்கும் ஐயா யிரம் பெயர்களும் அடைமொழிகளும் உள்ளன. நிகண்டு களில் சிவபிரானுக்குரிய பெயர்கள் முப்பதுக்கு மேல் இல்லை. ஆனால் இவர் சிவ பிரானின் பெயர்கள், தொடர்கள் முப்ப தாயிரத்துக்கு மேல் தொகுத்துள்ளார். உலகில் எந்த மொழியிலும் எந்தக் கடவுளுக்கும் இத்துணைப் பெயர்களும் அடைமொழிகளும் இருப்பதாகத் தெரியவில்லை. நிகண்டு களில் எந்தப் பெயர் எந்த நூலில் கையாளப் பெற்றது என்ற குறிப்பே இல்லை. ஆனால் பேராசிரியர் மு. ச சிவம் தொகுத்துள்ள ஆயிரக்கணக்கான பெயர்கள் ஒவ்வொன்றும் எந்தெந்த நூலில் எந்தெந்தப் பாட்டில் இடம் பெற்றுள்ளன என்ற குறிப்புத்தவறாமல் கொடுக்கப்பட்டுள்ளது. ஆராய்ச்சி செய்வாருக்கு இந்தக் குறிப்புகள் பேருதவியாக இருக்கும்.

ஈரோடு வாசவிக் கல்லூரியில் இடையறாத பணி

1967 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை ஈரோடு வாசவிக் கல்லூரியில் அமைதியாகத் தவம் செய்வதுபோல் தமிழ்ப்

பணியை இடைவிடாது செய்து வந்துள்ளார். விளையாட்டு, வேடிக்கை, விழாக்கள், வீண் அரட்டை முதலியன எவற்றிலும் ஈடுபடாமல் இரவு பகல் எப்போதும் புத்தகமும்கையுமாக அல்லது துண்டுச் சீட்டுகளும் கையுமாகப் பல்லாயிரம் நூல்களைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் படிப்பதற்கு ஸ்ரீவாசவி கல்லூரி அரியதொரு வாய்ப்பைத் தந்தது. தமிழ்த்துறைத் தலைவர் திரு ஓ. கே. நல்லமுத்து அவர்களும், கல்லூரி முதல்வர் **டாக்டர் எசு கிருட்டிணசாமி** அவர்களும் இவர்தம் இலக்கியப் பணிக்கு எல்லாவகையான ஊக்கமும் கொடுத்து வருகின்றனர்.

1972 இல் வாசவிக் கல்லூரிக்கு வருகை புரிந்து எழுந்தருளிய காஞ்சி காமகோடி பீடம் புதுப்பெரியவர்கள் மீது மு. ச. சிவம் அவர்கள் **பஞ்சரத்தினப் பாடல்கள்** பாடினார். பல ஆண்டுகளுக்கு முன்பு போளூரில் மு. ச. சிவம் அவர்களைச் சந்தித்ததை நினைவு கூர்ந்த, நினைவாற்றல் மிக்க புதுப் பெரியவர்கள் மு ச சிவம் அவர்களின் ஆற்றலையும், பணியையும் வியந்து கல்லூரி முதல்வர், நிர்வாகத்தினர், பேராசிரியர்கள் முன்னிலையில் உயர்வாகப் பாராட்டுக் கூறி அருளினார்கள்.

வாசவிக் கல்லூரி என்னும் சோலையிலே மு. ச சிவம் அவர்களின் உள்ளப் பொய்கையிலே பூத்த நறுமலர்கள் இந்நூலின் பிற்பகுதியில் மணம் பரப்புகின்றன. கல்லூரிநூலகத்தில் எப்போது வேண்டுமானாலும், எத்தனை நூல்களாயினும் எடுத்துப் படிப்பதற்கு ஆர்வத்துடன் இசைவு தந்து ஊக்கமூட்டிய நூலகர் திரு மூக்கரெட்டி அவர்கள் மணமலர்கள் பூத்துக் குலுங்குவதற்கு உற்ற காரணமாக அமைந்தார். பிறமொழிகளைக் கற்றதனால்தான் இத்துணைவகையானபுதிய அரமுதலிகளைத் தொகுக்க முடிந்தது என்கிறார் பேராசிரியர் மு. ச. சிவம் அவர்கள்.

அமெரிக்கக் கவிஞரின் பாராட்டு

1972இல் ஐதராபாத்தில் அமெரிக்க ஆய்வுக் கழகத்தில் அமெரிக்கக் கவிஞர்கள் பற்றிய கருத்தரங்கு நடைபெற்றது.

ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் ஒரு பேராசிரியர் தேர்ந் தெடுக்கப் பெற்றூர். இருபது நாட்கள் நடைபெற்ற அக் கருத்தரங்கில் கலந்து கொண்ட பதினேழு பேரில் மற்றப் பதினறு பேரும் ஆங்கிலப் பேராசிரியர்கள்! தமிழ்ப் பேரா சிரியர் ஒருவர்க்கு இந்த வாய்ப்புக் கிடைத்தமை பலருக்கும் வியப்புக்குரியதாயிருந்தது. மு. ச. சிவம் இக் கருத்தரங்கில் வால்ட் விட்மனின் கவிதைச் சிறப்புப் பற்றி ஒரு மணி நேரம் ஆங்கிலத்தில் சொற்பொழிவாற்றினர். பின்பு இரண்டு மணி நேரம் நடைபெற்ற வால்ட் விட்மன் பற்றிய கலந்து ரையாடலில் பல புதிய கருத்துக்களை எடுத்துரைத்தார். கருத்தரங்கத் தலைவர், அமெரிக்கக் கவிஞர் திரு எட்வர்டு லூடர்சு அவர்களின் நன்மதிப்பையும் பாராட்டுதலையும் பெற்றூர். அக்கவிஞர் ஓர் ஆங்கிலக் கவிதையில் மு. ச. சிவம் அவர்களைப் புகழ்ந்து பாடியுள்ளார்.

பிற நாட்டறிஞர்களின் பாராட்டுக்கள்

செக்கோசுலேவிய நாட்டுத் தமிழறிஞர் திரு கமில் சுவலபில் அவர்கள் இவருடைய அகராதித் தொகுப்புகளை யெல்லாங் கண்டு வியந்தார் குறிப்பாகப் பெண்ணின் பெயர்கள், பெண்ணேவியம் போன்ற அகராதிகள் அவருக்கு வியப்பை ஊட்டின.

கந்த புராணத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கத் தொடங்கியுள்ள அவர் சில ஆண்டுகட்கு முன்பு முதல் நூறு பாடல்களின் மொழி பெயர்ப்பை மு. ச சிவம் அவர்களின் பார்வைக்கு அனுப்பிவைத்தார். மூலத்தோடு மொழி பெயர்ப்பை ஒப்பிட்டு நோக்கி மொழி பெயர்ப்பின் சிறப்புக் களையும் சிறு சிறு விடுதல்களையும் சுட்டிக் காட்டினர். அவற்றைக் கண்ட திரு கமில் சுவலபில் பெரு வியப்பினை அடைந்தாராம்.

தமிழில் 'நன்னெறி முருகன்' என்று கையெழுத்துப் போட்டு வந்த வங்கப் பேரறிஞர் திரு சுநீதிகுமார் சட்டர்சி

அவர்கள் 'ஒலிக் குறிப்பகராதி'யைக் கண்டு தம் பாராட்டுக் களைத் தெரிவித்தார். ஆங்கிலத்தில் பொருள் கொடுத்தால் பலருக்கும் பயன்படும் என்று தெரிவித்தார். உருசியன்-தமிழ் அகராதியின் ஆசிரியரான திரு மகரெங்கோவ் அவர்கள் மு. ச. சிவம் அவர்கள் தொகுத்துள்ள ஒரு பொருட் பன் மொழியகராதியை (செந்தமிழ்ச் செல்வம்) உருசிய நாட்டில் வெளியிட விருப்பம் தெரிவித்தார். மற்றும் தனிநாயக அடிகள், அமெரிக்க அறிஞர் ஷிப்மன் போன்றவர்களும் மு, ச. சிவம் அவர்களைப் பாராட்டியுள்ளனர்.

இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் கருத்தரங்கு களில் ஒன்றில் இவர்தம் ஒலிக் குறிப்பகராதியைப் பற்றிப் புகழ்ந்து பேசிக் கொண்டிருந்தார் மதுரை அமெரிக்கன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் திரு கு. பரமசிவன் அவர்கள். ஆனால்எதிரில் அமர்ந்திருந்தவர் தாம் ஒலிக் குறிப்பகராதியின் ஆசிரியர் மு. ச சிவம் என்பது அவருக்குத் தெரியாது பிறகு தெரிந்து கொண்ட திரு கு. பரமசிவன் அவர்கள் இவரைப் பெரிதும் பாராட்டினர்.

ஆங்கிலநூல்களை அஞ்சலில் வரவழைத்துப் படித்தல்

கடந்த இருபதாண்டுகளாகச் சென்னையிலுள்ள பிரிட்டிசுக் கவுன்சில்என்னும் ஆங்கில நூலகத்தின் உறுப்பினரான இவர் பற்பல நூல்களை அஞ்சல் வழியாக வரவழைத்துப் படித்த பிறகு அஞ்சலில் திருப்பியனுப்பிவிடுவார். அந்த நூலகம் வாசவிக் கல்லூரிக்கு ஒரே சமயத்தில் அனுப்பி வைக்கும் நூறு நூல்களையும் சில திங்களில் இவர் படித்து முடிப்பார். மேலும் ஐதராபாத்தில் உள்ள அமெரிக்க ஆய்வுக் கழகத்திலிருந்தும் நூல்களை வரவழைத்துப் படித்து விட்டுத் திருப்பியனுப்பிக் கொண்டிருக்கிறார்.

வாசவிக் கல்லூரிப் பொருளாதாரப் பேராசிரியர் திரு பி. கிருட்டிணமூர்த்தி அவர்கள் இவரைப் பார்க்கும் போதெல்லாம் 'சலியாத உழைப்பு', 'தளராத முயற்சி'

என்றெல்லாம் அவருக்கே உரிய அழகிய நடையில் தமிழிலும் ஆங்கிலத்திலும் புகழாரம் சூட்டுவார்.

'பன்மொழிப் புலவர் பட்டம்'.

1974இல் ஈரோட்டில் உள்ள கோவை மாவட்டத்தமிழ்க் கவிஞர் மன்றம் இவருக்குப் 'பன்மொழிப் புலவர்' என்ற சிறப்புப் பட்டத்தைத் தந்து பொன்னுடை போர்த்திச் சிறப்புச் செய்தது

சென்னையில் 1975இல் நடைபெற்ற மாநிலத் தமிழ்க் கவிஞர் மாநாட்டில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

கொடுப்பது போல் கொடுத்துத் திருப்பி வாங்கிய அரசு

சங்ககாலக் கவிஞர்கள் முதல் இக்காலக் கவிஞர்கள் வரை எல்லோரும் பெண்களை வருணித்துப் பாடியுள்ளனர். பெண்களை வருணிக்கும் இருபதாயிரத்துக்கு மேற்பட்ட தொடர்களை அகரவரிசையில் தொகுத்துப் 'பெண்மைச் செல்வம்' என்ற பெயரில் வெளியிடுவதற்குத் தமிழ் வளர்ச்சிக் கழகத்திலிருந்து பொருளுதவியை நாடினர். தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் உசாத் துணைவர்கள் (members of the advisory committee) இந்நூலைப் பார்த்த பிறகே அகராதிகள், கலைக்களஞ்சியங்கள் போன்ற சொல் தொகுப்பேடுகளுக்கும் பொருளுதவி புரியலாம் என்ற விதியைப் புகுத்தினர். அதற்கு முன்பு அகராதி நூல்களுக்குப் பொருளுதவி செய்வதாக விதிமுறைகளில் கூறப்படவில்லை. தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் தலைவராக அன்று விளங்கிய திரு வி. கார்த்திகேயன் ஐ. ஏ. எசு. (இப்போது தமிழக அரசின் தலைமைச் செயலர்) அவர்கள் இத்தகைய நூல்களின் வெளியீட்டிற்கும் பொருளுதவி தரப்படல் வேண்டும் என்று பரிந்துரை செய்தார். ஆனல் உசாத்துணைவர்கள் பெண்களின் வருணனைத் தொடர்கள்

தலை, முகம், வாய், கூந்தல்,கை, கால் உறுப்புகளின் கீழ் முறைப்படுத்தப்படல் வேண்டும் என்று கூறினர் அவ்வாறே இருபதாயிரம் தொடர்களையும் உறுப்புக்களின் வாரியாகத் தொகுத்து இரண்டாயிரம் பக்கங்களில் மீண்டும் எழுதி அனுப்பினார். உயர்ந்த அளவு ஐயாயிரம் ரூபாய் கொடுப்ப தற்குப் பரிந்துரை செய்தனர். ஆனால் 1975இல் இரண்டா யிரத்து ஐந்நூறு உரூபாப் பொருளுதவி தான் அனுமதிக்கப் பட்டது. பத்தாயிரம்உரூபா இல்லாமல் அந்தநூலை அக்காலத் தில் வெளியிட முடியாது. எனினும் அந்நூலின் ஒரு பகுதியை யாவது வெளியிடலாம் என்று கொடுத்தபணத்தை ஏற்றுக் கொள்வதாக இசைவு தெரிவித்தார் மு. ச. சிவம். ஆனால் 'கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாமலும் போகும்' (There is many a slip between the cup and the lip) என்னும் பழமொழிக்கு உயிர் ஊட்டுவது போலக் கொடுத்த இரண் டாயிரத்து ஐந்நூறு ரூபாயையும் தமிழக அரசு பதினைந்து நாட்களுக்குள் திரும்பப் பெற்றுக் கொண்டது! காரணம் எதுவும் தெரிவிக்கப்படவில்லை! பதினைந்து ஆண்டுகளாகப் பாடுபட்டுத் தொகுத்த நூல் இன்னும் வெளியிடப் படாமல் உள்ளது. கொடுத்தவரே பறித்துக் கொண்டது பலருக்கும் வியப்பைத் தந்தது.

உலகியலில் சில நண்பர்கள் உதவி செய்வதாகக் கூறி விட்டுப் பிறகு மறுத்து விடுவது போலவே, பழனித் தேவத் தானமும், தமிழக அரசும் கொடுத்த பொருளுதவியை மறுத்து விட்டனர்! யாரைத் தான் நம்புவது!

கர்நாடகத் தொடர்பு

1977 இல் ஈரோடு திரு. வேலா இராசமாணிக்கம் அவர் களுடன் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. இரவு நேரங் களில் வேலா அச்சகத்தில் தங்கிச் சில தமிழ், ஆங்கில நூல் களைச் செப்பனிட்டுக் கொடுத்தார். வீர சைவ நெறியில் பிறந்தவராகிய அவர் மூலமாகக் கர்நாடகத்தில் உள்ள பல வீர சைவ மடங்களுடன் இவருக்குத் தொடர்பு ஏற்பட்டது.

1978 இல் ஊப்ளி மடத்துத் தலைவர் அவர்களின் தலைமையில்நூறு மடாதிபதிகள் நூறு கல் தொலைவு பத்துநாட்களில் நடந்து செல்லும் 'பாதயாத்திரை' யை மேற்கொண்டிருந்தனர். அழைப்பின் பேரில் மு ச. சிவம் அவர்களும் அந்தப் பாதயாத்திரையில் கலந்துகொண்டார். வழியில்வரலாற்றுப் புகழ் பெற்ற வாதாபி நகரத்தில் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் கூடியிருந்த மாபெருங் கூட்டத்தில் பேசும் வாய்ப்பைப் பெற்றார். வீரசைவத்திற்கும் சைவத்திற்கும் உள்ள உறவுகளை எடுத்துக் கூறினார். தம்பிரான் தோழரான சுந்தரருக்காகச் சிவபெருமான் திருவாரூர்த் தெருக்களில் பரவையிடம் இருமுறை தூது சென்ற போது 'பாதயாத்திரை' மேற் கொண்டார் என்று கூறிக் கர்நாடக மக்களின் உள்ளங்களைக் கவர்ந்தார். மடாதிபதிகள் பலரும் மு. ச. சிவம் அவர்களைப் பெரிதும்போற்றினர். வாதாபிக்குப் பிறகு பாதயாத்திரையாகச் சென்ற இடங்களில் எல்லாம் இவரைச் சுட்டிக் காட்டிக் கர்நாடக மக்கள் 'இவர் தமிழ் நாட்டிலிருந்து வந்தவர்' என்று அடையாளங் காட்டிப் பேசிக் கொண்டனராம்.

மற்றொருமுறை கர்நாடகத்திலுள்ள 'கதக்' மடத்திற்கு இவர் சென்றிருந்த போது 'கதக்' மடத்துத் தலைவர் அவர்கள் அன்று மாலை நடைபெற்ற அன்பர்கள் கூட்டத்தில் இவரையும் பேசுமாறு திடீரென்று அன்புக் கட்டளை இட்டார். இவர் சில மணித்துளிகள் கன்னடத்திலேயே பேசினார். மடத்துத் தலைவரின் பாராட்டுதலையும், அன்பர்களின் போற்றுதலையும் பெற்றார். தமிழ் தெரிந்த சில அன்பர்கள் இவரைச் சூழ்ந்து கொண்டு அன்பு மொழிகளை வாரி வழங்கினராம் மு. ச. சிவம் அவர்களின் மழலைக் கன்னடப் பேச்சினால் மகிழ்ச்சிமீக் கூர்ந்த மடத்துத் தலைவர் இவருக்கு ஏராளமான கன்னட நூல்களைப் பரிசாக அளித்தார்!

சில மடத்துத் தலைவர்கள் இவருக்குப் பணமாகவே பரிசுகள் நல்கினர். பெங்களூரில் பசவ சமிதியில் உதவிக்குடியரசுத்

தலைவர் மாண்பமை ஜாட்டி அவர்களுடன் உரையாடும் வாய்ப்பைப் பெற்றார்.

கன்னடத்திலிருந்து சில நூல்களை மொழி பெயர்த்துத் தருமாறு கர்நாடக அன்பர்கள் சிலர் வேண்டிக்கொண்டனர். 'பசவேசர் வசனங்கள்' 'அக்கமா தேவி வரலாறு' ஆகிய வற்றை இவர் தமிழில் மொழி பெயர்த்துள்ளார்.

வேலா அவர்களுடன் தொடர்பு

திருவள்ளுவர் நூலகம், பசவேசர் நூலகம் ஆகிய இரு நூலகங்கள் வேலா நிறுவனத்தின் சார்பில் அமைவதற்கு எல்லா முயற்சிகளையும் செய்தார்.

'வீரசைவ வரலாறும் நெறியும்' என்ற நூலில் திரு வேலா இராசமாணிக்கம் முற்பகுதியை எழுத இவர் வீர சைவ நெறி பற்றிப் பிற்பகுதியை எழுதினர்.

இவரை இருமுறை கர்நாடகத்திற்கு அனுப்பித்தமிழகத் திற்கும் கர்நாடகத்திற்கும் உள்ள வீரசைவத் தொடர்பை வலுவடையச்செய்தார் திரு வேலா அவர்கள்.

'குறளியம்' வெளியிடுவதற்கு முன் இரண்டு திங்களாகப் பலவகை முன்னேற்பாடுகளைத் திரு வேலா அவர்களுடன் சேர்ந்து செய்தார். வேலா அச்சகத்தில் பல நாட்கள் இரவு முழுவதும் தங்கிச் சிறந்த முறையில் முதல் இதழ் வெளி வருவதற்குத் துணையாக இருந்தார்.

பிற கழகங்களுடன் தொடர்பு

ஈரோட்டில் முருகன் தமிழ்க் கழகத்தின் சிறப்புச் செய லராகப் பணிபுரிந்து வருகிறார். இந்திய மொழியியற் கழகம், திராவிட மொழியியற் கழகம் ஆகியவற்றின் வாழ்நாள் உறுப்பினர். இந்தியக் கல்வெட்டுக் கழகம், தென்னிந்திய வரலாற்றுக் கழகம், இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர்

கழகம், ஈரோடு திருக்குறள் பேரவை, கோவை மாவட்டத் தமிழ்க்கவிஞர் மன்றம், ஐதராபாத்தில் உள்ள அமெரிக்க ஆய்வுக்கழகம், மைசூரில் உள்ள இடப்பெயர்க்கழகம் முதலிய வற்றில் உறுப்பினராக உள்ளார். பற்பல பட்டி மன்றங் களிலும் பாட்டரங்குகளிலும் பங்கு பற்றியுள்ளார்.

பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களுடன் தொடர்பு

தனித்தமிழ் ஆர்வலரான சித்தோட்டுப் பாவலர் திரு குமர நடவரச சிவப்பன் அவர்கள் வடசொற்கள் பிறர் வாயி லிருந்து கேட்கப்படும்போதெல்லாம் மறுகுவார். வடசொற் கள் கலந்து பேசுபவர் எத்தகையவராயினும் அவர்களைக் கண்டிப்புக் கலந்த கனிவுடன் வடசொற்களைத் தவிர்க் குமாறு வேண்டுவார். தம்மையறியாமல் வடசொற்கள் பேசுபவரிடம் தூய தமிழ்ச் சொற்கள் இவையென எடுத்துக் கூறுவார். இவர் இக்காலத் தனித்தமிழியக்கத் தலைவர் களான மொழிஞாயிறு திரு தேவநேயப் பாவாணர் அவர்களி டத்தும், பாவலரேறு திரு. பெருஞ்சித்திரனார் அவர்களிடத் தும் அளவிலாத ஈடுபாடு உடையவர்.

இரண்டாண்டுகளுக்கு முன்பு இவர் பன்மொழிப் புலவர் மு. ச. சிவம் அவர்களைப் பாவலரேறு அவர்களிடம் அறிமுகப் படுத்தினார். மு. ச. சிவம் அவர்களின் தகுதிகளைக் கேட்ட றிந்த பாவலரேறு அவர்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லை யில்லை மொழிஞாயிறு திரு பாவாணர் மேற்கொண்டுள்ள செந்தமிழ்ச் சொற்பிறப்பு அகர முதலியை விரைவில் பதிப்பித்து வெளியிடுவதற்கு உறுதுணையாக இருக்கத் தக்க வர் இவரே என்று கருதினார். உடனே திரு பாவாணர் அவர் களிடம் மு ச. சிவம் அவர்களை அழைத்துச் சென்று அறி முகப்படுத்தினார். திரு பாவாணர் அவர்களும் மு ச. சிவம் அவர்களை உவந்து ஏற்றுக் கொள்வதாகக் கூறி உடனே அரசுக்குப் பரிந்துரை எழுதியனுப்பினார் செந்தமிழ்ச் சொற்பிறப்பு அகரமுதலித் திட்டத்தில் இவரை விரைவில்

பணியமர்த்தஞ் செய்யுமாறு வன்மையாகப் பரிந்துரை செய்தார். ஆனல் இரண்டாண்டுகளாகியும் ஏனே தகுதி மிக்க இவர் இன்னும் பணியமர்த்தஞ் செய்யப்படவில்லே!

பாவலரேறு பெருஞ்சித்திரனர் அவர்கள் 'உண்மையை' வழிபடுஞ்சிறப்பும், குமுகாயத்தீமை கண்டால் வன்மையாகச் சாடும் திறனும், நேர்மையைப் போற்றும் பண்பும், அஞ்சாமையும், தமிழின் மீதும் திருக்குறளின் மீதும் தணியாக் காதலும், தமிழுக்குத் தீங்கு நினைப்பவர் மீது கட்டுக் கடங்காச் சினங் கொள்ளும் நீர்மையும் உடையவர். இவருடைய பண்புகள் யாவும் மு ச. சிவம் அவர்களின் உள்ளத்தைக் கவர்ந்தன. ''சான்ருேர் சான்ருேர் பாலராப.' இருவரும் உழுவலன்பினராயினர்.

செய்யத் தொடங்கிய எதனையும் செவ்வையாகச் செப்பமாகச் செம்மையாகத் திருத்தமாகச் செய்ய வேண்டும் என்பது பாவலரேறு அவர்களின் குறிக்கோள் அதனல்தான் தம் பாடல்களின் தொகுதியான 'கனிச்சாறு' மூன்று தொகுதிகளிலும் தம்கண்ணுக்குத் தப்பிய அச்சுப்பிழைகளேக் கண்டறியுமாறு மு ச. சிவம் அவர்களேக் கேட்டுக் கொண்டார். சிவம் அவர்களும் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தில் பெற்ற மெய்ப்புத் திருத்தக் கலேப் பயிற்சியால் கனிச்சாறு அச்சிட்ட பகுதிகளில் காணப் பெறும் பிழைகளே நுண்ணிதின் நோக்கிக் கண்டுணர்ந்தார் பாவலரேறு அவர்கள் பலமுறை வியப்பின் மேல் நின்ருர். சிவம் அவர்களின் ஆழ்ந்த நூற்பயிற்சியைக் கண்டு மகிழ்ந்தார்.

பாவாணர் அவர்களுடன் தொடர்பு

சிவம் அவர்கள் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தில் பணிபுரியும் போதே பாவாணர் அவர்களிடம் தொடர்பு கொண்டார். சென்னே மறைமலேயடிகள் நூலகத்தில் ஏறக்குறைய ஒரு திங்கள் இருவரும் உடனுறைந்து மகிழ்ந்தனர். பாவாணர் அவர்கள் பேசும் செந்தமிழ்ச் சொற்கள் சிவம்

அவர்களுக்குத்' தேன் வந்து பாயுது காதினிலே' என்றிருக்கும். பாவாணர் வெளியிட்டுள்ள நூல்களை யெல்லாம் படித்து இன்பமுற்றார். அடுக்குமொழி அகராதி, ஒருபொருட் பன் மொழி அகராதி, எதிர்ப்பத அகராதி, ஒலிக்குறிப்பகராதி, மரபுத்தொடரகராதி முதலிய பற்பல அகர வரிசைகள் உருவாவதற்கு ஊக்குணர்ச்சி தந்தவை பாவாணர் அவர்கள் வெளியிட்ட இலக்கண நூல்களும், சொல்லாராய்ச்சிக் கட்டுரைகளுமே என்று கூறுகிறார் சிவம் அவர்கள். 'தமிழின் நிலைகண்டுணர்ந்த பேரறிஞர்' என்று பாவாணரைப் போற்றி வருகிறார். பாவாணரின்அறிவுச் செல்வத்தை நேரடியாகப் பெறுகின்ற பேறு கிடைப்பின் பிறவிப் பயன் பெற்றதாக மகிழ்ச்சி கொள்வார். எழுபத்தெட்டு அகவை முதிர்ந்தும் இரவு பகல் எப்போதும் ஏடும் எழுத்தும் சிந்தனையுமாகக் காட்சியளிக்கின்ற தமிழ்ப் பேரறிஞர் இவரையன்றி வேறு எவர் உள்ளனர் என்று சிவம் கேட்கின்றார். பேரறிஞர்களின் அறிவுச் செல்வங்களைத் தக்காங்கு பயன்படுத்திக் கொண்டு அவற்றால் எல்லாரும் பயன்படுமாறு செய்வது அரசின் தலையாய கடமைகளுள் ஒன்றாகும்.

ஆங்கிலப் படைப்புகளும் ஆராய்ச்சியும்

பேராசிரியர் ம். ச. சிவம் அவர்கள் ஆங்கிலத்தில் பேச வும் எழுதவும் பயிற்சி பெற்றுள்ளார் என்பது முன்னரே சுட்டப்பெற்றுள்ளது இவரது 'எம். லிட்.'பட்டத்துக்கான ஆய்வுக் கட்டுரை "Studies in stylistics" (நடையியல் ஆய்வு) என்பது. 1962 இல் சிலப்பதிகார நாட்டிய நாடகம் நடை பெற்ற போதுஒரு நண்பரின் வேண்டுகோளுக்கிணங்கச் சிலப் பதிகாரக் கதையையும், நாடகத்தின் காட்சிகளையும் சுருக்க மாக ஆங்கிலத்தில் எழுதினார். 'Opera of Silappadikaram' என்ற தலைப்பில் அச்சிறுநூல் வெளியிடப் பெற்றது.

அடையாறு உலகத் தமிழ் நிறுவனம் நடத்திய இலக் கணக் கருத்தரங்கில் (1978) 'Tamil Semantics' என்னும்

ஆய்வுக்கட்டுரையை எழுதிப் படித்தார். 1979இல் ஆமதாபாத்தில் நடைபெற்ற இந்தியக் கல்வெட்டுக் கழகக் கருத்தரங்கில் கொங்குநாட்டுக் கல்வெட்டுக்கள் பற்றி ஆங்கிலத்தில் ஒரு ஆய்வுக் கட்டுரை எழுதிப் படித்தார். 1980 இல் ஈரோடு வாசவிக் கல்லூரியில் நடைபெற்ற கொங்கு நாடு பற்றிய கருத்தரங்கில் கொங்குக் கிளைமொழி பற்றி ஆங்கிலத்தில் ஆய்வுக் கட்டுரை எழுதிப் படித்தார்.

இப்போது இவர் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் மொழித் துறைத் தலைவர் **டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்** எம் ஏ, எம். லிட்., பி. எச் டி அவர்களை வழிகாட்டியாகக் கொண்டு **'சென்ற நூற்றாண்டில் தமிழ்ச்சொற்களின் வளர்ச்சி'** என்ற தலைப்பில் டாக்டர் பட்டத்துக்கு ஆய்வு செய்து வருகின்றார். மைசூரில் உள்ள இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனத்தின் துணை இயக்குநரான **டாக்டர் இ. அண்ணாமலை** அவர்களும் இந்த ஆய்வுக்குத் துணை புரிந்து வருகிறார்.

தமிழ் அகராதி ஆராய்ச்சிக் கழகம்

உலகிலேயே முதன் முதலில் அகராதி தோன்றி வெளிப்பட்டது தமிழில்தான்என்று அறிஞர் பெருமக்கள் ஆய்ந்து கூறியுள்ளனர். ஆனால் அகராதி வடிவம் இன்னும் தமிழர்களின் பழக்கத்திற்கு வரவில்லை. தமிழில் எல்லா இலக்கிய நூல்களுக்கும் உரைகள்இருப்பதால் உரைகளுடன் நூல்களைப் படிப்பாரே உள்ளனர். அகராதிகளின் துணையை நாடி நூல்களைப் படிப்பதற்கு எவரும் விரும்புவதில்லை. அகராதி என்றாலே கடினச்சொற்களுக்குப் பொருள் கூறுவதுதான் என்றே பலரும் நினைக்கின்றனர் இது தவறு. இலக்கியவடிவங்களான கவிதை, சிறுகதை, நாடகம், புதினம், கட்டுரை முதலியன போலவே அகராதியும் இலக்கிய வடிவமே. இதுவரை அகராதியை இலக்கியங்களைப் புரிந்து கொள்ளுவதற்குரிய கருவியாகவேகருதி வந்துள்ளனர். ஆனால் அகராதி வடிவம் மேனாடுகளில் இலக்கிய வடிவமாக மலர்ந்துள்ளது. தெரிந்து கொள்ள வேண்டிய கருத்துக்களை

மிக விரைவாகவும் தெளிவாகவும் தெரிந்து கொள்ள உதவுபவை அகராதிகளும், அகராதிகளின் ஒரு பிரிவான கலைக் களஞ்சியங்களுமே. அகர வரிசையில் அமைந்திருக்கும் நூல் எதுவும் அகராதியே. படிப்பவரின் நேரத்தை மிச்சப்படுத்தும் பார்வை நூலான அகராதிகள் மேனாடுகளில் மக்களால் பெரிதும் விரும்பப்படுகிற நூல் வடிவமாகத் திகழ்கிறது. அகராதி வடிவத்தை உலகிற்களித்த தமிழினம் இத்துறையிலும் முன்னேற்றம் காண வேண்டும்; முன்னோடியாகத் திகழ வேண்டும் என்ற சீரிய குறிக்கோளுடன் '**தமிழ் அகராதி ஆராய்ச்சிக் கழகம்**' என்ற ஓர் அமைப்பை ஈரோட்டில் அமைத்துள்ளார்; அதன் வழியாக உலகின் அறிவுச் செல்வங்களையும், தமிழின் அறிவுச் செல்வங்களையும் அகராதி வடிவில் வெளியிட முனைந்துள்ளார். மேனாடுகளில் எல்லா அறிவு, அறிவியல் கலைத்துறை நூல்களும் அகராதி வடிவத்தில் வெளியிடப் பட்டு வருகின்றன. இலக்கியங்களை உணருவதற்குக் கருவியாகவும் இருப்பதுடன் தானே இலக்கியமாகவும் திகழும் சிறப்பினையும் பெற்றிருப்பது அகராதியே.

இதுபோன்ற அகராதி ஆராய்ச்சிக் கழகம் ஒன்று கேரளநாட்டில் திருவனந்தபுரத்தில் அரசின் துணையுடன் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. எல்லாத் துறைகளிலும் தமிழ் வளரவேண்டும் என்று ஆர்வங் கொண்டிருக்கும் இந்த அரசும் இந்தத் 'தமிழ் அகராதி ஆராய்ச்சிக் கழகத்'துக்கு ஊக்கமும் ஆதரவும் கொடுத்துதவும் என்று நம்புகிறேன். தமிழின் சொற்செல்வங்களையும், பொருட் செல்வங்களையும் சேர்த்துவைக்கும் வைப்பகங்களான அகராதி நூல்கள் வெளியிடுவதற்கு உதவி புரிய அறிஞர் பெருமக்களும் செல்வர்களும் முன்வர வேண்டும்.

அமெரிக்கா, உருசியா, இங்கிலாந்து, பாரிசு போன்ற மேலைநாட்டு நூலகங்கள் அகராதி வடிவில் வெளிவரும் அத்துணை நூல்களையும் பார்வை நூலகத்தில் (Reference Library) வாங்கி வைத்துப் போற்றுகின்றன. பேராசிரியர்

மு. ச. சிவம் அவர்கள் இதுவரை வெளியிட்டுள்ள நூல்கள் அனைத்தும் பல மேனாட்டுநூலகங்களில் இடம் பெற்றுள்ளன. ஆனால் தமிழ்நாட்டு நூலகங்களில் இவை இன்னும் இடம் பெறவில்லை.

முற்காலத்தில் நிகண்டுகளைப் படித்து மனப்பாடம் செய்துவிட்டே தமிழைக் கற்கத் தொடங்கினர். இக்காலத்தில் நிகண்டுகளைப் படிப்பவர் இலர். அதனால்தான் நிகண்டுகளின் விரிவாக்கங்களான இவர்தம் அகராதிகளைப் படிக்குமாறு இளைஞர்களுக்கு வழிகாட்டுவது தமிழறிஞர்களின் கடன் என்று கருதுகிறேன், சொல்வளம் இருந்தால்தான் கருத்து வளம் ஏற்படும் சொல்வளம் உடையவரே அறிவு வளம் உடையவராவர். இந்நூலின் இரண்டாம் பகுதியில் குறிப்பிடப் பெறும் அகராதிகளைப் படிக்கும் பழக்கத்தை மாணவர்களிடையே வளர்த்து விட்டால் மாணவர்கள் பெரிதும் பயன் பெறுவர். உயர்நிலை, மேனிலைப் பள்ளிகளும் கல்லூரிகளும் தங்கள் நூலகங்களில் இத்தகைய ஆராய்ச்சிக் கருவூலங்களான அகராதிகளை வாங்கி மாணவர்களின் தமிழறிவை வளர்க்க உதவ வேண்டும் என்பது என் பெரு விருப்பம்.

பன்மொழிப் புலவர் பேராசிரியர் மு. ச. சிவம் அவர்களது உழைப்பால் ஆக்கப் பெற்ற அகர வரிசைகள் கலைக் களஞ்சியங்கள், ஆராய்ச்சிக் கட்டுரைகள், மொழி பெயர்ப்புகள், பாடல்கள் ஆகியன நம் செந்தமிழுக்குச் சிறந்த செல்வங்களாக அமைந்துள்ளன.

அவர் செய்து வரும் தமிழ்த் தொண்டுகளைத் தமிழகம் அறிவதாகுக! தமிழரசு போற்றுவதாகுக!

பேராசிரியர்

மு. ச. சிவம்

அவர்களின்

தமிழ் வளர்ச்சிக்கான

ஆக்கப் பணிகள்

பன்மொழிப் புலவர், பேராசிரியர் மு. ச. சிவம் அவர்கள் இதுவரை தொகுத்துள்ள நூற்றைம்பது நூல்கள் வெவ்வேறு தலைப்புக்களில் ஈண்டு விவரிக்கப்படுகின்றன. இந்நூல்களைப் பற்றி மேலும் விளக்கம் வேண்டுவோர் பேராசிரியர் அவர்களிடம் தொடர்பு கொள்ளலாம்.

அகராதி வடிவில் உள்ள நூல்களை வெளியிடுவதை முதன்மையான நோக்கமாகக் கொண்டிருப்பது 'தமிழ் அகராதி ஆராய்ச்சிக் கழகம்.' தனிப்பட்ட ஒருவர் தொகுத்துள்ள இந்த அகராதிகளை இன்னும் விரிவாக்கம் செய்ய முடியும் என்று கருதுபவர்களும், இந்த அகராதிகளுக்குக் கருத்துக்களாலும் பொருளாலும் உதவி செய்ய விழைகின்றவர்களும் 'தமிழ் ஆராய்ச்சிக் கழகத்'துடன் தொடர்பு கொள்ளலாம்.

I. தமிழின் பெருமையை உலகுக்கு உணர்த்தும் நூல்கள்.

1. அடுக்குமொழி அகராதி (Dictionary of Alliterative and Rhythmic Phrases)

அடுக்கு மொழியில் பேசி அனைவரையும் மயக்கிய அறிஞர் அண்ணு அவர்களின் சொற்பொழிவுகளைக் கேட்டதன் பயனுய் எழுந்த இந்த நூலில் ஐயாயிரம் அடுக்கு மொழிகள் அகர வரிசையில் தரப்பட்டுள்ளன.

கருத்தை நன்குணர்த்திக் கவினேடு ஒலிப்பதுவே செந்தமிழ் மொழியின் சந்தத்தின் நயமாகும். இந்தச் சிறப்போடு இலங்குவது இந்நூல். 1964இல் வெளியிடப் பெற்ற இந்நூலுக்கு அப்போது தமிழக அரசின் சட்டச் சொல்லகராதித் தலைமையாளராக விளங்கிய உயர்திரு. மா. சுப்பிரமணியம் பி. ஏ., பி. எல்., அவர்கள் அணிந்துரை வழங்கியுள்ளனர்.

அடுக்கு மொழிகள் அளவாகவும், இயல்பாகவும் பயன் படுத்தப் பெறின் தமிழ்நடை அழகுபெறும். மாணவர் களும் எழுத்தாளர்களும் இவ்வகராதியைப் படித்துவந்தால் அழகியநடையில் எழுதும் எழுத்தாற்றல் வளரும்.

எதுகை மோனை அமைத்துப் பாடுவது புலவர்க்கு வழக்க மாயிருப்பது போலவே எதுகை மோனை அமைத்துப் பேசுவதும் தமிழ்மக்களின் வழக்கமாக உள்ளது என்பதனை இந்நூல் உலகுக்கு உணர்த்துகின்றது.

விரைவில் இந்நூல் இரண்டாம் பதிப்பாக மலர உள்ளது.

2. ஒலிக் குறிப்பகராதி (Dictionary of Onomatopoetic Expressions)

எந்த மொழியிலும் ஒலிக் குறிப்புச் சொற்கள் மிகக் குறைவாகவே உள்ளன என்று அமெரிக்கப் பேராசிரியர்

திரு. எமெனோ அவர்கள் ஒரு கட்டுரையில் குறிப்பிட்டிருந்தார் ஆனால் தமிழில் உள்ள ஒலிக்குறிப்பு சொற்கள் இரண்டாயிரத்தைந்நூற்றுக்கு மேற்பட்டவை இந்நூலில் தொகுக்கப் பெற்றுள்ளன. சென்னைப் பல்கலைக் கழக அகராதியில் (லெக்சிகனில்) நானூறு சொற்கள் தாம் குறிக்கப்பட்டுள்ளன. அந்தச் சொற்களை வைத்துக்கொண்டு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஒருவர் ஆராய்ச்சிக் கட்டுரை எழுதினார் அக் கட்டுரை எழுதியதற்குப் பிறகே இந்நூல் வெளி வந்தது.

இதனைப் பற்றி இந்நூலுக்கு அணிந்துரை வழங்கிய மறைந்த அறிஞர் பல்கலைச் செல்வர் திரு. தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

"இதனைப் பற்றிய ஆராய்ச்சியை அண்ணாமலைப் பல்கலைக் கழக மொழியியற்றுறை மாணவர் ஒருவர் (திரு. ஞான சுந்தரம்) செய்த போது ஒலிக்குறிப்பு அகராதியின் பயனை நான் உணரமுடிந்தது. நண்பர் வெளியிடும் அகராதி போன்ற தொன்று அப்போது இருந்திருந்தால் எவ்வளவோ பயனைத் தந்திருக்கும். எனவே இந்த அகராதி மேலும் இந்த வகையில் ஆராய்ச்சி செய்பவர்களுக்குப் பெரிதும் துணையாக இருக்கும். மொழியியல்பின் ஒரு பகுதியை எளிதில் தெரிந்து கொள்வதற்குப் பொது மக்களுக்கும் இந்த அகராதி பெரிய உதவியாகும்"

மதுரை அமெரிக்கன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் திரு கு. பரமசிவன் அவர்கள் இந்நூலைச் சிறப்பித்து ஒரு கருத்தரங்கில் பாராட்டியுள்ளார்.

இந்நூலைக் கண்ணுற்ற இந்தியத் தேசியப் பேராசிரியர் திரு. சுநீதிகுமார் சட்டர்சி அவர்கள் இதனைப் பாராட்டியதோடு ஆங்கிலத்திலும் மொழி பெயர்த்து வெளியிடுமாறு அறிவுரை கூறினார் வங்கத்துப் பேரறிஞரின் அறிவுரைக்கு ஏற்ப இந்நூலை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிட்டுதவத் தமிழக அரசு முன்வரல் வேண்டும்.

இவ்வளவு ஒலிக்குறிப்புக்கள் வேறெம் மொழியிலும் காணப் பெறவில்லை என்பதே தமிழின் பெருமையை உலகுக் குணர்த்தும் நூல்களுள் இதுவும் ஒன்று என்று குறிப்பிடப் போதுமான காரணமாகும்.

இந்நூல் இப்பொழுது விற்பனையில் உள்ளது.

செந்தமிழ்ச் செல்வம் (Dictionary of Synonyms)
(ஒரு பொருட் பன்மொழி அகராதி)

தமிழ் நிகண்டுகளில் ஏறக்குறைய நாலாயிரம் ஒரு பொருட் பன்மொழிகளே கூறப்பட்டுள்ளன. இவ்வாசிரியர் ஏறக்குறைய இருபதாயிரம் சொற்களுக்கு ஒருபொருட் பன்மொழிகளைத் தொகுத்துள்ளார்.

ஒரு மொழியின் சொல்வளத்தைக் காட்டுவன ஒரு பொருட்பன்மொழிகளே உலகிலேயே ஒருபொருட் பன்மொழிகளின் வளம் மிக்க மொழிகள் பிரெஞ்சும் ஆங்கிலமுமே. இவற்றில் பிரெஞ்சு மொழியினும் ஓரளவு ஆங்கிலமே வளம் மிக்கதாக உள்ளது. ஆங்கிலத்தினும் தமிழே ஒருபொருட் பன்மொழி வளம் மிக்கது என்று இவ்வகராதி தெள்ளிதின் காட்டவல்லது. ஆங்கிலத்தில் இது வரை வெளிவந்துள்ள ஒரு பொருட் பன்மொழி அகராதி களில் ஏறக்குறையப் பத்தாயிரம் சொற்களுக்கே ஒரு பொருட் பன்மொழிகள் கொடுக்கப் பெற்றுள்ளன.

பல ஆண்டுகளுக்கு முன்பே இவ்வகராதியை உருசிய நாட்டில் வெளியிடுவதற்கு உருசிய நாட்டுத் தமிழறிஞர் திரு மகரெங்கோவ் அவர்கள் விருப்பம் தெரிவித்தார். இவ் வகராதி தமிழ் நாட்டிலும் வெளியிடப் பெற்றால்தான் தமிழ் மாணவர்களுக்குப் பெரிதும் நன்மை ஏற்படும். தமிழின் பெருமையை உலகுக்கு உணர்த்தும் நூல்களை வெளியிடத் தமிழக அரசு ஆர்வத்துடன் முன்வரும்என்று நம்புகிறேன்.

4 ஐம்பொறி அகராதி (Dictionary of phrases with the words for the Five Senses in Tamil)

மெய் வாய் கண் மூக்குச் செவி என்னும் ஐம்பொறிகளுக்குரிய சொற்களைக் கொண்டு பத்தாயிரம் தொடர்கள் தொகுக்கப் பெற்றுள்ளன. சிதம்பரம் அழகு அச்சகத்தில் பல ஆண்டுகளுக்கு முன்பு அச்சிடக் கொடுக்கப்பட்ட நூலே அச்சுப் பொறிக்குள் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கிறது. அச்சகத்தின் உரிமையாளர் இவர்தம் வகுப்புத் தோழராயிருந்தும் கடைசிச் சில பக்கங்களை அச்சிட்டு முடித்துக் கட்டடஞ் செய்து கொடுக்க மனமில்லாமல் இருக்கிறார். இதுவரை விதி மாந்தர்களுக்கு மட்டும்தான் என்று நம்பியிருந்தோம். ஆனால் நூல்களுக்கும் 'விதி' உண்டு என்பது தெரிகிறது. கடைசிச் சில பக்கங்களை விட்டு விட்டாவது வெளியிடலாம் என்று பல முறை கேட்டும், முன்னதாகவே தாள்கள் வாங்கிக் கொடுத்தும், அச்சுக்கூலி கொடுத்தும், பல நண்பர்கள் நயந்து பரிந்துரை கூறியும் முடித்துத் தரமாட்டாதவரிடம் என்னதான் செய்வது?

ஐம்பொறிகளுக்குரிய சொற்களை வைத்தே இத்துணை ஆயிரம் சொற்றொடர்களை உருவாக்குகின்ற திறம் தமிழுக்கு உள்ளது என்பதனை உலகுக்குத் தெரிவிக்க உதவுவது இந்நூல்.

6. கருத்துக் களஞ்சியம் (Dictionary of Association of Ideas)

அகராதியுலகில் இஃதோர் புதுமையான நூல். ஒரு பொருட் பன்மொழியகராதி போன்றது இது. கற்பனை நலம் வாய்ந்த மனத்திலுள் தொடர்புடைய கருத்துக்கள் பல நினைக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாகப் '[illegible]' என்ற கருத்துடன் [illegible] போன்ற தொடர்கள் தொடர்புடையனவாக உள்ளன.

மற்றுமோர் எடுத்துக்காட்டு : இல்பொருளுவமை : மலடி பெற்ற மகன், முயற்கொம்பு (அல்லது குதிரைக் கொம்பு), ஆகாயப் பூ (அல்லது ஆகாயத் தாமரை) கானல் நீர் முதலியன. இல்பொருளுவமைகளை வைத்து எழுதப் பெற்ற (பொருளற்ற) வாக்கியங்கள்.

'மலடி பெற்ற மகன் முயற்கொம்பில் ஏறி ஆகாயப் பூப் பறித்தான்'.

'முயற்கோடு சீவி முழுவிசும்பு மேய்ந்தான்'.

7. மன அகராதி (Dictionary of phrases with the words for 'Mind' in Tamil)

'மனம்' என்ற ஒரு பொருளுக்குரிய சொற்களைக் கொண்டே ஏறத்தாழ எட்டாயிரம் சொற்றொடர்களை உருவாக்கியுள்ளது தமிழ்'மனம்' என்பது உலகுக்கு இறும்பூது தருவதொரு செய்தியாகும். உலகிலேயே சொல்வளம் மிக்க மொழி தமிழ் என்பதற்கு இதனினும் வேறு சான்று என்ன வேண்டுப்?

சிறுகதைகள், புதினங்கள் முதலியவற்றிலிருந்தே பெரும்பான்மையான தொடர்கள் தொகுக்கப் பெற்றுள்ளன.

8' பலபொருள் ஒருசொல் அகராதி (Dictionary of Homonyms)

ஒருபொருட் பன்மொழியகராதியைப் போலவே பல பொருள் ஒரு சொல்லகராதியும் தமிழின் சொல்வளத்தைக் கண்ணாடியெனக் காட்டும் பெற்றி வாய்ந்தது. நிகண்டுகளில் காணப்படும் சொற்களைக் காட்டிலும் மூன்று மடங்கு விரிவாகத் தொகுக்கப் பெற்ற இந்நூல் சொற்பொருள் ஆராய்ச்சியாளர்க்கும், கவிஞர்களுக்கும் தமிழை ஆழ்ந்து கற்க விரும்புவர்க்கும் அறிவுவிருந்து நல்க வல்லது.

பலபொருள் ஒரு சொல் யாவும் உண்மையில் பல சொற்களே என்று கூறும் சேனாவரையரின் கருத்தை இக்கால மொழியியலார் ஒப்புக் கொள்கின்றனர். ''வெவ்வேறு சொற்களாயினும் எழுத்தொப்புமையானே பலபொருள் ஒரு சொல் ஆ, ஆண்டு போல்வன வெவ்வேறு பொருள் உணர்த்துதலின் ஒருசொல் எனப்படா; வெவ்வேறு சொற்களேயாம்'' (தொல் சொல் 58)

9 காரணப் பெயர் அகராதி (Dictionary of words with known origins)

''மொழிப் பொருட் காரணம் விழிப்பத் தோன்றா'' என்றார் தொல்காப்பியர். ஒரு மொழியில் காணப்படும் பல சொற்கள் தோன்றுவதற்குக் காரணம் தெரிவதில்லை. காரணம் அறியப்படாத சொற்களை இடுகுறிப் பெயர் என்றும், காரணம் அறிந்த சொற்களைக் காரணப் பெயர் என்றும் குறிப்பிடுவது வழக்கம்.

காரணம் தெரியக்கூடிய பல்லாயிரஞ் சொற்கள் இந்த அகராதியில் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன. உரையாசிரியர்களும் பிறரும் கூறிய காரணங்கள் குறிப்புகளுடன் தரப் பட்டுள்ளன.

சொல்லின் தோற்றங்களைப் பற்றி ஆராய்பவருக்கு இந்த நூல் இன்ப விருந்தளிக்கும்.

10. பெண்மைச் செல்வம் (Encyclopaedic Dictionary of Descriptive Phrases and Names of 'Woman')

பல்லாயிரம் கவிதை நூல்களிலிருந்து பெண்களை வருணிக்கும் இருபதினாயிரத்துக்கும் மேற்பட்ட தொடர்கள் அகர வரிசையில் தொகுக்கப் பெற்றுள்ளன. தமிழிலேயே அழகுமிக்க பல தொடர்கள் இவ்வகராதியில் காணப்படுகின்றன. இந்நூலைப் படிப்போர்க்குக் கற்பனையூற்றுப் பெருகும்; தமிழின்பம் மிகுதியாகும்.

11. **பெண்ணோவியம்** (Dictionary of classified descriptive phrases and names of 'Woman'

தமிழ் வளர்ச்சிக் குழுவினரின் அறிவுரைக்கு ஏற்பப் பெண்களின் வருணனைத் தொடர்கள் ஒவ்வோர் அவயவத் தலைப்பின் கீழும் அமைக்கப் பெற்றுள்ளன. அழகுருவமான பெண்ணின் ஒவ்வோர் அங்கத்திலும் கொழிக்கும் அழகைக் கவிஞர்கள் அனுபவித்த பான்மையை இவ்வகராதி தொகுத்துக் காட்டுகிறது' 'A thing of beauty is joy for ever' என்றார் ஆங்கிலப் பெருங்கவிஞர் கீட்சு அவர்கள் 'அழகினை ஒருங்கே கண்டால் யாவரே ஆற்ற வல்லார்!'' என்றார் கம்பர். கம்பரும் கீட்சும்வருணித்த 'அழகு'ப் பெட்டகமே இந்நூல். இந்நூலைப் படித்து இன்புறாதவர் தமிழின்பம் அறியாதவரே.

12 **எதுகை இன்பம்** (Dictionary of beautiful rhymes)

இலங்கியங்களில் காணப்படும் இன்பம் பயக்கும் இணை எதுகை, ஒரூஉ எதுகைத் தொடர்கள் முதலியன தொகுக்கப் பெற்றுள்ளன. இவருடைய அடுக்குமொழி அகராதியில் மோனையின்பம் பெற்றவர்கள் இந்நூலில் எதுகையின்பம் பெறலாம். இந்நூலாசிரியர் இனிய அடுக்கு மொழிகளையும் எதுகைத் தொடர்களையும் தொகுக்கும் போதெல்லாம் ஒவ்வொரு முறையும் உள்ளம் களிதுளும்பி நின்றாராம். His heart leapt for joy! தாம் இன்புறுவதை உலகின்புறக் கருதி இத்தகைய நூல்களைத் தொகுத்துள்ளார். விரைவில் இந்நூல் வெளியிடப் பெறும்.

13 **அழகுத் தொடர் அகராதி** Dictionary of Beautiful Expressions)

அழகான இயற்கைக் காட்சிகளை வண்ணப் படமெடுக்கும் பெட்டிபோன்றது அழகிய எண்ணங்களைச் சொல்லுருவில் படம் எடுக்கும் கவிஞர்களின் உள்ளம். 'உள்ளத்தில் உள்ளது

கவிதை' என்றார் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையவர்கள். 'உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளியுண்டாகும்' என்றார் பாரதியார் அவர்கள். அழகிய உள்ளங்களிலிருந்து உருப்பெற்ற அழகுத் தொடர்கள் நயத் தொடர்கள் படிப்பவர்க்கு அளவிலா இன்பம் தரவல்லன. ஆயிரக்கணக்கான அழகுத் தொடர்கள் தொகுக்கப் பெற்றுள்ள இந்நூல் தமிழின்பம் பெற விழைவார்க்குத் தெவிட்டாத தெள்ளமுது.

14. தமிழின் அழகுகள் (Beauties of Tamil)

தமிழின் அழகுகளையெல்லாம் ஒருவாறு தொகுத்துக் கூறும் இந்நூல் தமிழின் சிறப்புக்களையும் பெருமைகளையும் உலகிற்கு உணர்த்த வல்லது. தமிழராய்ப் பிறந்தவர் அனைவரும் படித்து இன்புற்றுப் பெருமைப்படத் தக்க நூல் இஃது அண்மையில் வெளியிடப் பெற்றுள்ளது.

15. நயமொழி அகராதி
(Dictionary of Literary Beauties)

'மங்கை தரும் இன்பம் எங்கள் மாத்தமிழுக்கு ஈடோ?' என்று பாடினார் பாவேந்தர் பாரதிதாசனார். இலக்கியம் தரும் இன்பம் ஈடில்லாதது, தெவிட்டாதது, நவில் தொறும் நயம் பயப்பது. காதல் இன்பத்தைப் போலவே 'உள்ளக் களித்தல்' உண்டாக்குவது இலக்கிய இன்பமே. இலக்கிய இன்பத்தின் ஒரு பிரிவே இலக்கிய நயங்கள்.

உள்ளு தொறும் உள்ளு தொறும்இன்பம் தரும் இலக்கிய நயங்கள் பலவற்றை இந்நூல் அகர வரிசையில் அமைத்துத் தருகிறது. 'நயம் பட உரை' என்ற ஔவையாரின் அறிவுரையைப் பின்பற்ற விரும்புவரும் நினைத்தாலே இனிக்கும் சொல்நயம், பொருள்நயம் முதலியவற்றைப் படித்து இன்புற விழைபவரும், தம் எழுத்தோவியங்களில் இத்தகைய நயங்களைப் படைக்க விரும்புபவரும் இந்நூலை உற்ற துணைவனாகக் கருதுவர்.

16. அகப் பொருள் அகராதி (Dictionary of Love)

தொல் காப்பியம், சங்க இலக்கியங்கள், இறையனுர் அகப்பொருள், நம்பியகப் பொருள், கோவை நூல்கள், உலா நூல்கள் முதலிய பல அகப்பொருள் நூல்களுள் காணப்படும் அகப்பொருட் செய்திகள் முறைப்படுத்தி வகைப்படுத்தித் தக்க தலைப்புக்கள் ஈந்து அகரவரிசைப் படுத்தி அளிக்கப் பெறுகின்றன. பிற உலக இலக்கியங்கள் எவற்றிலும் விரிவாகக் காணப்படாததும், தமிழுக்கே தனிச் சிறப்புத் தருவதுமான அகப் பொருள் செய்திகளைத் தொகுத்துக் கூறும் இந்நூல் தமிழின் சிறப்பை உலகுக்கு உணர்த்தும் நூல்களுள் ஒன்ருகக் கருதப்படும்.

II தமிழ் மொழியின் வளர்ச்சியைக் காட்டும் அகராதிகள்.

1. இலக்கியச் சொல்லகராதி (Dictionary of words used in literary works)

மதுரைத் தமிழ்ப்பேரகராதியும் அதனைப் பின்பற்றிஎழுந்த கழகத் தமிழ் அகராதியும் பிற தமிழ்-தமிழ் அகராதிகளும் ஒவ்வொரு சொல்லுக்கும் வெவ்வேறு பொருள்கள் கொடுக்குங்கால் அப்பொருள்கள் எந்நூல்களில் பயிலப் பெற்றுள் ளன என்ற குறிப்பைத் தரவில்லை. இச்சொல் இப்பொருளில் இந்நூலில் கையாளப் பெற்றுள்ளது என்று அறிந்து கொள் வது ஆராய்ச்சியாளர்க்கு மிக இன்றியமையாதது. இக் குறிப்பு இல்லாவிடில் எந்தச் சொல்லும் எந்தப் பொருளையும் தரும்போலும் என்று மருள்வதற்கு இடம் உண்டாகி விடும் மேலும் இச்சொல்லுக்கு இப்பொருள்களும் உள்ளனவோ என்ற ஐயம் ஏற்படும்போது தெளிவு பிறக்க வழியில்லாமல் போய்விடுகிறது. இதனுல் தெளிவு பெறுவதற்காகவே ஒவ்வொரு சொல்லும் எந்தெந்தப் பொருளில் எந்தெந்த நூலில் எந்தெந்தப் பாடலில் கையாளப் பெற்றுள்ளன என்ற விளக்கமான குறிப்புக்களுடன் இவ்வரும் பெரும் அகராதி தொகுக்கப் பெற்றுள்ளது.

சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதியில் (லெக்சிகனில்) காணப்பெறுதபல்லாயிரம் இலக்கியச் சொற்களும் பொருள் களும் இந்நூலில் காணப்படுகின்றன. தமிழ் 'லெக்சிகனில்' [நூறாயிரம் சொற்களுக்குப் பொருள் கொடுத்த இந்தப் பேர கராதிTamil lexicon என்ற தனது தலைப்புக்குத் தக்க தமிழ்ச் சொல் கொடுக்காமல் விட்டது எவ்வளவு கேவலமானது!] ஏறக்குறைய நானூறு நூல்களே மேற்கோளாகக் கொடுக் கப்பட்டுள்ளன. அந்நூல்களின் பெயர்ப் பட்டியல் லெக்சிக னுக்கு முன்னுரைப் பகுதியில் கொடுக்கப் பட்டுள்ளது. பல பேர் சேர்ந்து ஏறத்தாழ நாற்பதாண்டுகளாகத் தொகுத்த லெக்சிகனில் நானூறு நூல்கள் தாம் மேற்கோளாகக் கொடுக்கப் பட்டுள்ளன. பேராசிரியர் மு. ச. சிவம் அவர் கள் தனியொருவராகவே ஐயாயிரத்துக்கு மேற்பட்ட நூல்களிலிருந்து மேற் கோள்கள் கொடுத்துள்ளார்! இஃதொன்றே இவர் இடைவிடாத பெரு முயற்சியும் பல்கலைக் கழகத்தில் ஒரு குழு செய்யும் வேலையைத் தனி ஒருவராகவே செய்து முடிக்கும் ஆற்றலும் வாய்ந்தவர் என்பதை மெய்ப்பிக்கப் போதுமான சான்றாகும்.

பல ஆண்டுகளுக்கு முன்பே பல்கலைச் செல்வர் திரு தெ. பொ மீ. அவர்கள், ஆங்கிலத்திற்கு வரலாற்று அடிப் படையில் அமைந்துள்ள ஆக்சுபோர்டு பதிப்பகம் வெளியிட் டுள்ள அகராதி பதின்மூன்று தொகுதிகள் அமைந்தது போலத் தமிழுக்கும் வரலாற்றின் அடிப்படையில் சொற் களும் பொருள்களும் தொகுக்கப் பெறல் வேண்டும் என்று தமிழக அரசினை வேண்டிக் கொண்டு அதற்காகப் பல இலக்க உருபாக்கள் அரசு ஒதுக்க வேண்டுமென்று கூறினர்!

வரலாற்று அடிப்படையில் அமையும் அகராதி பல இலக்கிய வரலாற்றுச் சிக்கல்களைத்தீர்ப்பதாகவும் வரலாற்று உண்மைகளை நிறுவுவதாகவும் இருக்கும். தமிழருக்குத்தான் இன்னும் தங்கள் இனவரலாறு எழுதப் பெறுமல் உள்ளது! தமிழருக்குத்தான் தங்கள் இலக்கியவரலாறு இன்னும் செப்ப மாக எழுதப்பெறுமல் உள்ளது; அதுபோலவே தமிழருக்குத்

தான் இன்னும் வரலாற்று அடிப்படையில் அமைந்த அகராதி அமையாமல் உள்ளது. வாழ்க்கை வரலாறும், இலக்கிய வரலாறும் சரி வர எழுதப் பெற்றால்தான் வரலாற்று அகராதியும் சரி வர அமையும். எனினும் முடிந்த வரை வரலாற்று அகராதியினைத் தொகுக்கத் தமிழக அரசு இன்னும் முதல் முயற்சி கூடச் செய்யவில்லை. விடுதலை பெற்ற இந்திய நாட்டில் இந்தி மொழியை வளர்ப்பதற்கு இந்தி மொழியினர் செய்யும் முயற்சிகளில் நூற்றில் ஒரு பங்காவது தம் தமிழ் மொழியை வளர்ச்சியுறச் செய்வதற்குத் தமிழர்கள் முயல்கின்றார்களா என்று ஆராய்ந்தால் 'இல்லை' என்றே எவரும் விடை இறுப்பர்.

அடையாறு உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவன இயக்குநரும் இவருடைய அகராதிகள் யாவும் வெளியிடப் பெறல் வேண்டும் என்ற பேரவா மிக்குடையவருமான டாக்டர் ச. வே. சுப்ரமணியம் அவர்கள் தமிழுக்கு ஒரு வரலாற்றுச் சொல்லகராதி அமைய வேண்டும் என்று பல ஆண்டுகளாகக் குரல் எழுப்பி வருகின்றார் இது பற்றிப்பல கட்டுரைகள் எழுதியுள்ளார். தமிழினம் இன்னும் எழுச்சியுறும் போது தான் வரலாற்றுச் சொல்லகராதியும் தமிழில் உருவாகும் போலும்! எதிர்காலத்தில் உருவாகப் போகின்ற வரலாற்றுச் சொல்லகராதிக்கு அடிப்படையாக, மூலமாக விளங்கத் தக்கது இவ்வாசிரியரின் இலக்கியச் சொல்லகராதியாகும். இவ்வகராதியின் துணையினால் வரலாற்றுச் சொல்லகராதியை உருவாக்க அரசு முதல் முயற்சியை மேற்கொள்ளலாம்.

2. இலக்கியச் சொற்றொடர் அகராதி (Dictionary of Phrases from Literary Works)

சொல்லுக்கும் சொற்றொடருக்கும் தெளிவான ஓர் எல்லைக்கோடு இடுவது பல இடங்களில் முடியாத தொன்று, வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத்தொகை, வேற்றுமைத்தொகை முதலிய தொகைச் சொற்களை ஒரு

சொல்நீர்மையவாகக் கருதி அகராதிகளில் இடம் பெறச் செய்துள்ளனர். தனிச் சொற்களின் பொருள்களை அறிந்து கொள்வது போலவே இலக்கியங்களில் காணப்படும் கூட்டுச் சொற்கள், சொற்றொடர்கள் முதலியவற்றின் பொருள் களையும் அறிந்து கொள்வது தமிழறிவின் வளர்ச்சிக்கு உறுதுணையாகும்.

3. **உவமை அகராதி** (Dictionary of Similes)

இலக்கியங்களிலிருந்தும் பேச்சுவழக்கிலிருந்தும் உவமை கள் தொகுக்கப் பெற்றுள்ளன. இலக்கிய உவமைகள் எடுக்கப் பெற்ற நூல்களின் பெயர்கள் தவறாமல் கொடுக்கப் பெற்றுள்ளன. முடிந்த வரை உவமைகளின் தழுவு பொருள் களும் (objects) உடன்கொடுக்கப் பெற்றிருப்பது இந்த அகராதியின் தனிச்சிறப்பாகும்.

4 **உருவக அகராதி** (Dictionary of Metaphors)

தொல்காப்பியர் உருவகங்களைப் பற்றிக் கூறவில்லை. உவமையின்வளர்ச்சியே உருவகம். உருவகத்தை Compressed Simile என்று கூறுவர். உவமைத் தொகையின் மறு உருவமே உருவகம்.

கவிஞர்களின் எண்ணங்களின் ஒளி வீச்சுக்களே உருவகங் கள். காவியப் புலவர்களான கம்பர், திருத்தக்க தேவர், கொங்கு வேளிர், தோலாமொழித் தேவர், கச்சியப்ப முனி வர் முதலானோர் உருவகங்களைப் பெருமளவில் கையாண்டு உள்ளனர்.

பாட்டுக்களைப் போலவே உரைநடைகளிலும் உருவகங் கள் கையாளப்பட்டால் தமிழ் நடை கவர்ச்சிமிக்கதாக அமையும்.

5. **தொடர் அகராதி** (Dictionary of Phrases)

இலக்கியச் சொற்றொடர் அகராதியைப் போன்றது இது. பொதுவாகத் தமிழில் பயிலப் பெறும் சாதாரணத் தொடர்

கள் ஏறத்தாழ ஐந்து இலட்சங்களுக்கு மேல் தொகுக்கப் பெற்றுள்ளன. தமிழின் சொல்வளத்தை அறிந்து கொள்வதற்குப் பெரிதும் பயன்படும் அகராதிகளுள் இதுவும் ஒன்று உலகப் பெருமொழிகளுக்கு நிகராகச் சொல்வளம் படைத்த மொழி தமிழ் என்பதற்கு இந்த அகராதி ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகும்.

6. அடைமொழி அகராதி (Dictionary of Epithets)

கிரேக்க மொழியில் ஹோமர் இயற்றிய இலியதுு, உலீச்சு போன்ற காப்பியங்களிலும், ஆங்கிலத்தில் மில்டன் இயற்றிய இழந்த சுவர்க்கம், மீண்ட சுவர்க்கம் ஆகிய நூல்களிலும், சேக்சுபியரின் நாடகங்களிலும் வடமொழிக் காப்பியங்களிலும் அடைமொழிகள் மிகுதியாகக் காணப் பெறுவது போலவே சங்க இலக்கியங்களிலும், சைவ, வைணவத் திருமுறைகளிலும், காப்பியங்களிலும், சிற்றிலக்கியங்களிலும் அளவில்லாத அடைமொழிகள் காணப்படுகின்றன. ஒரு பொருளினைத் தெளிவாக உணர்ந்து கொள்வதற்கு அடைமொழிகள் துணை புரிகின்றன. ஒவ்வொரு சொல்லுக்கும் பற்பல அடை மொழிகள் தமிழில் உள்ளன. இவையெல்லாம் அவ்வச் சொற்களின் கீழ்க் கொடுக்கப் பெற்றுள்ளன. தமிழின் சிறப்புக்களுள் இந்த அகராதியும் ஒன்று.

7. மரபுத் தொடரகராதி (Dictionary of Idioms)

மரபுத் தொடர்கள் ஒரு மொழியின் தனிச் சொத்துக்கள். இவற்றைப் பிற மொழியில் சொல்லுக்குச் சொல் மொழி பெயர்ப்பது கடினம். புலவர் நாவில் பொருந்திய மரபுத் தொடர்கள் அழகு மிக்கனவாயின் பொது மக்களாலும் பயன்படுத்தப் பெறும் மரபுத்தொடர்களைத் தக்க இடங்களில் பயன் படுத்தத் தெரிந்தவரே மொழியில் நிறை புலமை பெற்றவராகக் கருதப் பெறுவர். ஆகலின் மொழிப் புலமை எய்த வேண்டுவோர் மரபுத் தொடர்களைக் கற்றுப் பயன்படுத்தும் பாங்கு தெரிந்தவராயிருக்க வேண்டும். நல்ல

தமிழ்ப் புலமை எய்த விழைவார்க்கு இந்நூல் உறுதுணையாய் உதவும். மாணவர்களுக்கு மிக மிக இன்றியமையாத நூல்.

8. **எதுகை அகராதி** (Dictionary of Rhymes).

அகம், இகம், உகம், ககம், சகம், சுகம், செகம், நகம், பகம், மகம், யுகம் முதலிய முற்றெதுகைச் சொற்கள் அவற்றின் பொருள்களுடன் தொகுக்கப் பெற்றுள்ளன. இதுவரை பல எதுகை அகராதிகள் தமிழில் வெளி வந்திருக்கின்றன. ஆனால் இது போன்ற முற்றெதுகை அகராதி எதுவுந் தோன்றவில்லை. கவிஞர்களுக்கும், மாணவர்களுக்கும், பேச்சாளர்களுக்கும் இந்நூல் பேருதவியாய் இருக்கும்.

9. **எதிர்ப்பத அகராதி** (Dictionary of Antonyms)

ஆங்கிலத்தில் ஒரு பொருட் பன் மொழி அகராதியும், எதிர்ப்பத அகராதியும் ஒன்றாகக் கலந்து வெளியிடப் பெறுவது வழக்கம். தமிழில் இவை தனித் தனியாகவே வெளியிடப் பெறுகின்றன.

இந்நூலில் ஏறக்குறைய ஏழாயிரஞ் சொற்கள் அவற்றுக்கு எதிரான சொற்களுடன் கொடுக்கப் பெற்றுள்ளன.

எந்த மொழியிலும் சொற்களின் வளத்தைப் பெறத் தொடங்குவார் எதிர்ச் சொற்களைப் பயில்வது வழக்கம். பல எதிர்ச் சொற்கள் எதுகையில் அமைந்திருக்கும். மனதில் பதிவதற்கு ஏற்றதாயிருக்கும். உயர்நிலை, மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் இந்நூலைப் படித்துச் சொல் வளத்தைப்பெருக்கிக் கொள்ளலாம்.

இந்நூல் பன்மொழிப் புலவர் திரு கா. அப்பாத்துரை அவர்களின் அறிவார்ந்த அணிந்துரையைக் கொண்டது.

இந்நூலின் இரண்டாம் பதிப்பு சிதம்பரம் மணிவாசகர் நூலகத்தால் வெளியிடப் பெற்றுள்ளது.

10. சிலேடைக் களஞ்சியம் (Dictionary of Puns)

சிலேடைகளை ஒரு மொழியின் நகைச்சுவைத் துணுக்குகள் எனலாம். ஒரு மொழியின் நயங்களையும் சிலேடைகள் எடுத்துக் காட்டுகின்றன. மொழிப்புலமை எய்தியோரே சிலேடைகளை அமைக்க முடியும். சங்ககாலப் புலவர்கள் முதல் இக்காலக் கவிஞர்கள் வரை பலரும் சிலேடையில் அவ்வப்போது ஈடு பட்டிருக்கின்றனர். காளமேகப் புலவர் சிலேடையை ஒரு கலையாகவே வளர்த்துக்கொண்டிருந்தார். தமிழில் யமகம், திரிபு, மடக்கு, முதலிய யாப்பு வகைகள் சிலேடையைப் பெரிதும் பயன் படுத்திக் கொண்டன தமிழில் சிலேடை வெண்பா நூல்கள் பல உள்ளன.

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் 'சிலேடை அகராதி' ஒன்றை வெளியிட்டுள்ளது. ஆனல் அதில் சிலேடை அமைந்த நூல்கள், பாடல்கள் முதலியவற்றின் குறிப்புக்கள் இல்லை. இந்நூலில் அவை தவருமல் கொடுக்கப் பெற்றுள்ளன.

11. யாப்பியல் அகராதி (Dictionary of prosody)

யாப்பிலக்கணத்தில் பயின்று வரும் சொற்கள், தொடர்கள் முதலியவற்றிற்கு விளக்கங்கள் தரும் இந்நூல் 'புதுக் கவிஞர்'களுக்கு வழிகாட்டியாக அமையும். யாப்பியல் மரபை மீறி உரை வீச்சுக்களைப் புதுக் கவிதையாகப் புனைந்து வரும் கவிஞர்களும் யாப்பியலைத் தெரிந்து வைத்துக் கொள்வது நலம்.

இந்நூலில் பலவகை யாப்புகள் எடுத்துக்காட்டுக்களுடன் விளக்கப்பட்டுள்ளன.

12. இலக்கண அகராதி (Dictionary of Grammatical terms)

தமிழின் தனிச் சிறப்புக்களுள் ஒன்று இலக்கண வரம்பு பெற்றிருப்பதாகும். தமிழில் பல இலக்கண நூல்கள் இலக்

கியங்களாகவே போற்றப் பெறுகின்றன. தொல் காப்பியம் இறையனுர் களவியலுரை, நம்பியகப் பொருள் முதலியவை இலக்கியங்களாகவும் இலங்குகின்றன. தமிழில் உள்ள எல்லா இலக்கண நூல்களுக்கும் உரைகள் உள்ளன. அந்த உரைகள் ஆக்கத் திறனாய்வுகளாகவும், உரை நடை இலக் கியங்களாகவும் மிளிர்கின்றன.

தமிழில் வெளி வந்துள்ள எல்லா இலக்கண நூல்களிலி ருந்தும் சொற்களும் உரையாசிரியர்கள் அவற்றுக்குத் தந்த பொருள் விளக்கங்களும் தொகுக்கப் பெற்றுள்ளன. ஒரே சொல்லிற்கு வெவ்வேறு உரையாசிரியர்கள் தரும் விளக்கங் கள் இதில் இடம் பெற்றுள்ளன.

தமிழறிவை வளர்த்துக் கொள்ள விரும்புவார் அனைவருக் கும் இலக்கண அறிவு இன்றியமையாது வேண்டப்படுகிறது. இக்காலத்தில் பட்ட வகுப்புக்களில் பயிலும் கல்லூரி மாண வர்கள் கூடத் தங்கள் கட்டுரைகளில் பல இலக்கணப் பிழை களைப் போக்கிக் கொள்ள வகையறியாமல் உள்ளனர். மொழியறிவு வளர்வதற்கு அடிப்படையாக, அடித்தளமாக உள்ள இலக்கண அறிவைப் பள்ளி, கல்லூரி மாணவர்கள் ஆழமாகப் பெறுவது தமிழுக்கு ஆக்கந் தரும். ஆதலின் எல்லா மாணவர்களுக்கும் உற்ற துணையாக இவ்வகராதி நன்மை தரவல்லது.

13 இருபெயரொட்டுச் சொல்லகராதி (Dictionary of duals denoting the same object)

தமிழ்மொழி எப்போதும் பொருள் தெளிவையே போற்றி வந்துள்ளது என்பதற்கு இவ்வகராதி சிறந்த தொரு சான்றாகத் திகழ்கிறது. சங்ககாலம் முதல் இக்காலம் வரை இந்தப் பண்பு மாறாமல் வந்துள்ளது. வழக்கிழந்த சொல் அல்லது கடினமான சொல்லைப் பயன்படுத்தும் புலவர்கள் அல்லது பொருள் தெரியாத வடசொற்களைப் பயன்படுத்து வோர் அச்சொற்களோடு சேர்த்தே அவற்றின் பொருள்

எளிதில் விளங்கத் தக்க வேறொரு சொல்லையும் சேர்த்து வழங்கி வந்துள்ளனர். இக்காலத்தில் பேச்சு வழக்கில் கேட்டு வாசல் (Gate—வாசல்), நடுசென்டர் (நடு-Centre) முதலிய இருபெயரொட்டுச் சொற்களில் ஆங்கிலச் சொற்களுடன் அவற்றின் பொருளை விளக்கும் தமிழ்ச் சொற்களும் இடம் பெற்றுள்ளன.

பிற மொழிச் சொற்களுடன் பொருளை விளக்கும் தமிழ்ச் சொற்களும் சேர்ந்து வருகின்ற பழக்கத்தினால் ஆங்கிலம் பயிலும் மாணவர்களிடையே பல இரு பெயரொட்டுச் சொற்றொடர்கள் பேச்சு வழக்கில் வழங்கி வருகின்றன. எடுத்துக் காட்டாக ஒரு சொற்றொடர்: இட்டது பட்டானால் வர்ட்டென்ன சே சொல் (It அது But ஆனால் What என்ன Say சொல்).

பழங்காலத்திலிருந்தே புலவர்கள் வடசொற்களோடு சேர்த்துப் பொருள் விளங்கச் செய்யும் தமிழ்ச் சொற்களையும் வழங்கி வந்துள்ளனர். வேலைக்கடல், அடவிகாடு முதலிய எண்ணிலாத இருபெயரொட்டுச் சொற்களைத். திருநாவுக்கரசர் பெருமான் தம் தேவாரப் பாடல்களில் வழங்கியுள்ளார் தாலப்பனை போன்ற எண்ணிலாத இருபெயரொட்டுச் சொற்களைக் கம்பர் பயன் படுத்தியுள்ளார்.

ஏனக்களிறு, தடிக்கம்பு போன்ற சொற்களில் (வையாபுரிப் பள்ளுவில் வழங்கப் பெற்றுள்ளவை) இரு சொற்களும் தமிழ்ச் சொற்களாகவே இருப்பினும் அவ்விரண்டில் ஒரு சொல் (களிறு, கம்பு போன்ற சொற்கள்) சிறப்புப் பொருளில் வழங்கப் பெறுவதை அறியலாம்.

ஒரு மொழியின் அமைப்பு அம் மொழியைப் பேசும் மக்களின் மனத்தை வெளிப் படுத்திக் காட்டும் என்பர் மொழியியலார். தாம் பயன் படுத்தும் சொற்கள் மற்றவர்க்குத் தெளிவாகப் புரிய வேண்டும் என்ற மனப்பான்மை பாவலர்களுக்கு மட்டுமின்றிப் பாமரர்கட்கும் இருக்கின்ற உண்மையைஇந்த அகராதி தெள்ளிதின் காட்டுகின்றது.

14. **விகுதி அகராதி** (Dictionary of suffixes)

பெயர்ச்சொற்களுக்கும் வினைச் சொற்களுக்கும் ஈற்றிலே அமைந்துள்ள விகுதிகள் காலம், பொருள், இடம், எண் முதலிய கருத்துக்களை உணர்த்த வல்லன; சொற்களின் பொருள்களை மாற்ற வல்லன. இலக்கணத்தில் இவை 'இடைச் சொற்கள்' என்று பெயர் பெறும்

தமிழில் முன்னொட்டுக்கள் (prefixes) மிகுதியாக இல்லை; விகுதிகளே ஏராளமாக உள்ளன. ஒவ்வொரு விகுதியும் என்னென்ன பொருளைத் தருகின்றன என்பதை எடுத்துக் காட்டுக்களுடன் விளக்குகிறது இந்நூல். தமிழ் மொழியின் அமைப்பைப் புரிந்து கொள்ள விழைவார்க்கும், ஆழ்ந்த தமிழ் மொழியறிவைப் பெற விரும்புவார்க்கும் பயன் மிகத் தருவது இந்நூல்.

15. **பெண்ணின் பெயர்கள்** (Dictionary of one-word Synonyms for Woman)

ஆங்கிலம், பிரெஞ்சு, செருமன் முதலிய உலகப் பெரு மொழிகளில் பெண்ணைக் குறிக்கும் ஒரு பொருட் பன்மொழி ஒரு சிலவே உள்ளன ; பத்துச் சொற்களுக்கு மேல் இல்லை யென்றே கூறி விடலாம். ஆனால் தமிழில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட சொற்கள் ஒரு பெண்ணைக் குறிப்பிட வழங்கப் பெறுகின்றன.

தமிழ்ப்பெண்கள் கொடுத்து வைத்தவர்கள்!

அச்சிடுவதற்கு முன்பே இந்நூலைக் கையெழுத்துப் படியில் கண்ட 'செக்' நாட்டுத் தமிழறிஞர் திரு கமில் சுவலபில் அவர்களும், அமெரிக்கக் கவிஞர் திரு பால்எங்கில் (Paul Engle) அவர்களும் இந்நூலை வியந்து பாராட்டினர். இந்நூலுக்குக் கிடைக்கும் பாராட்டுத் தமிழுக்குக் கிடைக்கும் பாராட்டுத் தான் என்பதில் ஐயமில்லை.

16 பெண்ணுருவகம் (Dictionary of Metaphors for 'Woman')

பெண்களை உருவகப்படுத்திக் கவிஞர்கள் வருணித்த தொடர்கள் படிப்பதற்கு இன்பந் தருகின்றன. இவ்வகராதியில் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட உருவகத் தொடர்கள் உள்ளன.

17. திராவிட மொழிகளின் ஒப்பகராதி (Comparative vocabulary of four Dravidian Languages: Tamil, Telugu, Kannada and Malayalam)

திராவிட மொழிகளுக்கு மூலமாயிருப்பது தமிழ் மொழியே என்று திராவிட மொழிகளை ஒப்பிட்டு ஆய்ந்த அறிஞர்கள் நிறுவியுள்ளனர். தமிழ் மொழி பிற திராவிட மொழிகளின் சொற்களையும் பாதுகாத்து வைத்துள்ளது. தமிழ்ச் சொற்களே பிற திராவிட மொழிகளில் ஓரளவு உருவு திரிந்து வழங்கப் பெறுகின்றன. தமிழர்கள் பிற முதன்மைத் திராவிட மொழிகளான தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகளை எளிதில் கற்றுக் கொள்வதற்காகவே இந்த ஒப்பியல் அகராதி உருவாக்கப் பெற்றுள்ளது

தமிழின் சொற்கள் எவ்வாறு வடிவு மாறிப்பிறதிராவிட மொழிச் சொற்கள் ஆயின என்பது பற்றி ஆராய்பவருக்கும் இந்நூல் பெருந்துணைபுரியும். பிற திராவிட மொழிகளில் காணப் பெறும் உரப்பொலிகள், மெல்லொலிகள் ஆகியவற்றைக் குறிக்கப் புதிய எழுத்துக் குறியீடுகள்பயன்படுத்தப் பெற்றுள்ளன.

18. வடசொற்றமிழ் அகராதி (Dictionary of Sanskrit Words and Phrases used in Tamil)

தம்மிடம் வந்தவரையெல்லாம் வரவேற்று விருந்தோம்பும் பண்புமிக்க தமிழர்கள் பிறமொழியினரிடம் கூடிப்பழகும்

போது பிறமொழியினரை மகிழ்விப்பதற்காகவே அவர்கள் பேசும் மொழிகளைக் கற்றுப் பேசத் தொடங்கினர். இதனால் தமிழில் அளவில்லாத பிறமொழிச் சொற்கள் புகுந்துள்ளன. மூவாயிரம் ஆண்டுகளாகத் தமிழருடன் தொடர்பு கொண்டிருந்த வடமொழிச் சொற்கள் ஆயிரக்கணக்கில் தமிழில் புகுந்தன. அவற்றை முற்றிலும் நீக்குவதற்கு முடியும் என்றாலும் பல தமிழறிஞர்கள் வழக்காற்றில் உள்ள சில வடசொற்களைத் தவிர்ப்பதற்குத் தயங்குகின்றனர். வட சொற்கள் பயன்படுத்துவதை வெறுப்பவர்களில் சிலர் சில தமிழ்ச் சொற்களையும் வடசொற்களென மயங்குகின்றனர்.

அதனால் இவ்வகராதியின் முடிவில் வடசொற்கள் என மயங்கும் தமிழ்ச் சொற்களின் பட்டியல் தரப்பட்டுள்ளது.

பிற திராவிட மொழிகளும், இந்திய மொழிகளும் வட சொற்களின் உதவி யின்றி இயங்கவே முடியாது. ஆனால் தமிழ் ஒன்றுதான் வடசொற்களின் உதவியின்றித் தனித் தியங்கும் வல்லமை பெற்றுள்ளது. "பிற திராவிட மொழிகளைப் போலன்றித் தமிழ் ஒன்றே வட சொற்கலப்பின்றித் தனித்து வழங்கும் வல்லமை பெற்றுள்ளது; வடசொற்கலப்பில்லாத போது தான் தமிழ்நடை இன்னும் செம்மாந்து உயர்ந்து நிற்கிறது" என்றார் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணத்தை எழுதிய மேனாட்டு அறிஞர் திரு கால்டுவெல் பெருமகனார். மறைமலையடிகளாரின் தனித்தமிழ் இயக்கத்துக்கு வித்திட்டது கால்டுவெல் பெருமகனாரின் இக்கூற்றேயாகும்.

நீரோடு பால்கலப்பதுபோலத் தமிழ்ச் சொற்களுடன் மிக எளிதாகக் கலந்து சேர்ந்துவிடும் இயல்பு வாய்ந்தவை வடசொற்கள். வடசொல்லும் அவற்றின் பொருளைத்தரும் தமிழ்ச்சொல்லும் கலந்த கூட்டுச் சொற்கள் தமிழில் ஆயிரக்கணக்கில் உள்ளன. மேலும் வடசொல் கலந்த சொற்றொடர்களும் ஆயிரக்கணக்கில் உள்ளன.

பல்லாயிரம் வடசொற்கள், வடசொல் கலந்த சொற்றொடர்கள் இந்நூலில் தொகுக்கப் பெற்றுள்ளன. வடசொற்களுக்கு நேரிய தமிழ்ச்சொற்கள் தரப் பெற்றுள்ளன.

ஒரு மொழி பேசும் மக்கள் விரும்பினால் பிறமொழிச் சொற்களை ஏற்றுக்கொள்ளலாம் ; இல்லாவிடில் அவற்றைத் தவிர்த்து விடலாம். மொழித்தூய்மையை விரும்புவோர் பிற சொற்களைக் களைந்து விடுவர். ஆனால் பிறருக்குப் புரிய வேண்டுமென்பதற்காகவே வழக்கில் உள்ள வடசொற்கள் சிலவற்றைக் களையாது வழங்குபவரும் உள்ளனர்.

பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் தமிழ்க்கட்டுரைகள் எழுதும் மாணவர்கள் வடசொற்களை நீக்கிவிட்டு எழுத வேண்டும் என்பது கட்டாயமாகும். அதனால் இவ்வகராதி மாணவர்களுக்கும், வடசொற்களைத் தவிர்க்க விரும்புபவர்க்கும் பயன்படுவதொன்றாகும்.

19 வட்டார வழக்கு அகராதி (Dictionary of Dialect words)

தமிழ் நாட்டிலுள்ள வெவ்வேறு மாவட்டங்களில் அல்லது நிலப் பிரிவுகளில் மட்டும் வழங்கப்படும் சொற்கள் தொகுக்கப் பெற்றுள்ளன. ஒவ்வொரு சொல்லும் எந்தெந்த மாவட்டம் அல்லது ஊரில் சிறப்பாக வழங்கப் பெறுகின்றன என்ற குறிப்பும் கொடுக்கப் பெற்றுள்ளது. மேலும் . கரை கடந்த மாநிலமான ஈழத்துப் பகுதிகளில் சிறப்பாக வழங்கப் பெறும் சொற்களும் சேர்க்கப் பெற்றுள்ளன.

ஒரு மாவட்டத்தில் பேசப் பெறும் சொற்களின் பொருள் களை மற்றமாவட்டங்களில் உள்ளவர்கள் தெளிவாகத் தெரிந்து கொள்வதால் சிக்கல்கள் பல தீர்க்கப் படுகின்றன. மாவட்டங்களிடையே ஒருமைப்பாட்டுணர்ச்சியைத் தோற்றுவிக்கும் இந்நூல் வட்டாரக் கிளைமொழிகளைப் பற்றி ஆய்வு புரிபவர்க்கும் பயன் படுவதொன்றாகும்.

20 **பேச்சுவழக்குச் சொல்லகராதி** (Dictionary of Colloquial Tamil)

இக்கால மொழியியலார் பேச்சுவழக்குச் சொற்களுக்கே முதன்மை தருகின்றனர். எழுத்து மொழியை இரண்டாந்தரமாக மதிக்கின்றனர். மொழியியலறிஞரான இந்நூலாசிரியர் பேச்சு வழக்கில் பயிலும் சொற்களையும் தொகுத்துள்ளார். எழுத்து வடிவச் சொற்களின் உருவுதிரிந்த கொச்சைச் சொற்களும் மரூஉச் சொற்களும் தமிழ்த்தூய்மை பேணுவார்க்கு எரிச்சலை ஊட்டும். ஆயினும் உள்ளதை உள்ளவாறு படம் பிடிக்கும் அறிவியலறிஞர்களை ஒப்ப மக்கள் நாவில் நடமாடும் பல்வகைப் பேச்சுவடிவங்களை இந்நூலாசிரியர் குறித்துவைத்துள்ளார் அவற்றுள் பல இலக்கியத்தில் இடம் பெறத் தக்கவையாகக் கருதப்படலாம். கொச்சை வடிவங்களுக்கு நேரான சரியான வடிவங்கள் கொடுக்கப் பெற்றுள்ளதால் நல்ல தமிழ் பேசுபவர்களுக்கும் எழுதுபவர்களுக்கும் இந்நூல் வழிகாட்டியாக அமையும்

21 **இருபதாம் நூற்றுண்டுத் தமிழ்ச்சொல் அகராதி**
(Dictionary of Tamil words that came into use in the 20 th Century)

ஒரு மொழியில் காலத்தேவைகளுக்கு ஏற்பப் புதிய சொற்கள் தோன்றிக் கொண்டிருப்பதும், பழைய சொற்கள் வழக்கிழப்பதும், வழக்கிழந்த சொற்கள் புதுப் பொருள் பெற்று உயிர் பெறுவதும் இயல்பாக நடைபெறும் செயல்களாகும். இந்த இருபதாம் நூற்றுண்டில் என்னென்ன சொற்கள் புதிதாகத் தோன்றின. அவை தோன்றுவதற்கான காரணியங்கள் எவை, என்னென்ன பழைய சொற்கள் புதுப் பொருள் பெற்று உயிர் பெற்றன, வழக்குச் சொற்களில் எவை தம் பொருளை இழந்தன, ஏன் இழந்தன, காலமும் சூழ்நிலையும், மக்களின் எண்ணப் போக்குகளும் எவ்வாறு தமிழ் மொழிச் சொற்களில் மாற்றத்தை ஏற்படுத்திக் கொண்டு வந்துள்ளன என்பனவற்றையெல்லாம் பண்டாரகர் பட்டத்

திற்காக விரிவாக ஆய்ந்துள்ள ஆசிரியரின் ஆராய்ச்சியின் பயனாக இந்நூல் உருவாகியுள்ளது.

காலப்போக்கில சிறிது சிறிதாக மாறிவரும் கன்னித் தமிழ் இந்நூற்றாண்டில் என்னென்ன சொற்பொருள் மாற்றங் கள் பெற்றது என்றறிவதன் மூலம் தமிழின் இக்காலப் போக்கை உணர்ந்து கொள்ள விழைவார்க்கு இஃது உறுதுணை யாகப் பயன்படும்

22 **தமிழில் வழங்கும் பிறமொழிச் சொல்லகராதி** (Etymological Dictionary of Foreign words in Tamil)

'அஞ்சல் என்ற சொல்லும் அடையா நெடுங்கதவும், உடைய தமிழகத்தில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே பவுத்தம். சமணம், கிறித்துவம், இசுலாம் முதலிய சமயங்களும், அவற்றைப் பரப்ப வந்தோர் பேசிய மொழிகளும் உட்புகுந்தன. இவ்வாறு சமசுக்கிருதம், பாலி, அரபி. போர்த்துக்கீசியம், பிரெஞ்சு, ஆங்கிலம், இந்தி, பிற திராவிட இந்திய மொழிகள் முதலிய பல்வேறு மொழிகள் தமிழ்நாட்டினுள் புகுந்தன. இவற்றுள் சமசுக்கிருதச் சொற்கள் வட சொற்றமிழ் அகராதியில் விரிவாகத் தனி நூலாகத் தொகுக்கப் பெற்றுள்ளமையின், இந்நூலில் சமசுக்கிருதம் ஒழிந்த பிற மொழிகளின் சொற்களும் அவ்வம் மொழிகளில் அவை பெற்றுள்ள மூல வடிவங்களும் தொகுக்கப் பெற்றுள்ளன. அதுபோலவே பிறமொழிகளில் வழங்கும் தமிழ்ச் சொற்களின் பட்டியல் ஒன்றும் இவ்வகராதி யின் இறுதியில் இணைக்கப் பெற்றுள்ளன, எந்தெந்தத் தமிழ்ச் சொற்கள் எவ்வெம் மொழிகளில் இடம் பெற்றுள்ளன என்ற செய்தியை இப்பட்டியலிலிருந்து எளிதில் அறியலாம்.

தமிழ் ஏன் பிறமொழிச் சொற்களைக் கடன் வாங்கியது. ஏன் இந்தச் சொற்களை மட்டும் கடன் வாங்கியது, ஏன் இந்தத் தமிழ்ச் சொற்களைப் பிறமொழிகள் கடன் வாங்கின என்று ஆராய்பவருக்கு இந்நூல் அடிப்படையாய் அமையும்.

மேலும் பிறசொற்களைத் தவிர்த்துத் தூய தமிழ்ச் சொற்களையே பேசவும், எழுதவும் வேண்டும் என்ற கொள்கை உடையார்க்கும் இஃது ஒரு வழிகாட்டியாய் அமையும்.

23. இலக்கியப் பழமொழி அகராதி
(Dictionary of Proverbs found in Literary Works)

பழமொழிகளைப் பற்றித் தொல்காப்பியர் கூறியுள்ளார். சங்ககாலம் முதற் கொண்டு எல்லாவகையான இலக்கியங்களிலும் பழமொழிகள் காணப்படுகின்றன. திருக்குறளிலும் பல பழமொழிகள் உள்ளன. பிற்காலத்தில் பல திருக்குறட் பாக்களே பழமொழிகளாய் மாறிவிட்டன. பழமொழி நானூறு என்ற கடைச்சங்ககால நூலில் நானூறு பழமொழிகள் கூறப்பட்டுள்ளன. பிற்காலத்தில் தண்டலையார் சதகம், செயங்கொண்டார் சதகம் போன்ற சிற்றிலக்கியங்களிலும், கம்பராமாயணம் போன்ற பெருங் காப்பியங்களிலும், தேவார திருவாசகங்களிலும், திவ்யப் பிரபந்தங்களிலும் இன்னும் ஆயிரக்கணக்கான நூல்களிலும் காணப்பெறும் இலக்கியப் பழமொழி வடிவங்கள் தொகுத்துக் கொடுக்கப் பெற்றுள்ளன. அவை இக்காலத்தில் வழங்கப் பெறும் உருவங்களும் ஆங்காங்கே குறிக்கப் பெற்றுள்ளன.

எதுகை மோனைக்காகச் சிறு சிறு மாற்றங்கள் எய்தியுள்ள இலக்கியப் பழமொழிகள் எவ்வாறு பிற்காலத்தில் பேச்சு வழக்கில் உருமாற்றம் பெற்றன என்று ஆராய்வதன் மூலம் காலப்போக்கில் மொழியின் மாற்றங்களை ஆராய விரும்புவோர்க்கும், இலக்கியப் பழமொழிகளை அப்படியே மேற்கோளாக எடுத்துக் கூற விழைபவர்க்கும், வழக்கில் உள்ள பழமொழிகளுடன்புதிய இலக்கியப் பழமொழிகளையும் படித்து அறிவுச் செல்வத்தையும் அனுபவ அறிவையும் வளர்த்துக் கொள்ள விரும்புவார்க்கும் இந்நூல் ஏற்றதொரு துணையாக இயங்கும்.

ஓர் இனமக்களின், பொதுமக்களின் அறிவுச் செல்வங்களாக இருப்பவை பழமொழிகளாதலின் புலவர்கள் போற்றி

உரைத்த பழமொழிகளைப் பொன்னே போலப் போற்ற விரும்புபவர் இந்நூலையும் போற்றிவைத்துக் கொள்வர்.

24. வசைமொழி அகராதி (Dictionary of Abusive Terms)

வசை பாடுவதற்கென்றே பிறந்தார் புலவர் காளமேகம். குமுகாத்திய தீங்கு கண்ட போதெல்லாம் குமுறிய பாவலரின் உள்ளங்கள் சுடுதீயினும் கொடிய சுடுசொற்களால் தீங்கு புரியும் மக்களுக்கு அறிவு கொளுத்துவதற்கு முற்பட்டன நயந்து கூறினுல் சில அறிவுரைகளை ஏற்றுக் கொள்ளாதவர் இடித்துக் கூறினுல் அல்லது அச்சுறுத்திக் கூறினுல் இசைவது உலகியல்பாக உள்ளது. அதனுல் திருவள்ளுவர் முதலிய அறநூலாசிரியர்கள் அறத்தை வலியுறுத்தும் போதும், தீமைகளைக் கண்டிக்கும் போதும் கடுமையான வெசவு மொழிகளைப் பயன்படுத்தியுள்ளனர் கவிஞர்கள் சொல்லினுல் சுடுவது, தீங்கு என்ற புண்ணை ஆற்றுவதற்காகத் தான். அதனுல் வசைமொழிகள் நாவினுல் சுட்ட வடுக்களாகக், கேட்பவர் நெஞ்சைத் துளைப்பவையாக உள்ளன.

எப்போதும இனியசொற்களையே பேசுக என்று வள்ளுவர் ஆணையிட்டார் என்று கருத முடியாது. ஏனெனில் வள்ளுவரே ‘இடிக்குந் துணையாரை’ என்றும், ‘மிகுதிக்கண் மேற்சென்று இடித்தற் பொருட்டு’ என்றும், ‘செவிகைப்பச் சொற் பொறுக்கும் பண்பு’ என்றும் சுட்டிக் காட்டியதால் ஒரோ வழிச் சுடுமொழிகளையும், வசைமொழிகளையும் வழங்குதலும், அவற்றை நன்மை கருதிப் பொறுத்துக் கொள்ளுதலும் உலகியல்புகள் என்று வள்ளுவர் கருதுவதாகக் கொள்ளலாம்

வசைமொழிகள் உள்ளங்கவர்ந்து எழுந்து ஓங்கும் உணர்ச்சிகளின் பிழம்புகளாக இருத்தலின் அவற்றைப் பயன் படுத்துவதைத் தவிர்த்தல் நலம். தமிழைக் கற்றுக்கொள்ளும் பிறமொழியினர் இவ்வகராதியைக் கற்பதன் மூலம் விரும்பத் தகாத சொற்களைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

சில பொதுவான சொற்கள் கூடப் பயன்படுத்துவோரின் உணர்ச்சிப் பெருக்கால் மாறும் குரல் ஒலி மூலம் வசைமொழிகளாக மாறி விடுவதுண்டு. ஆனால் இந்த அகராதியில் வசவுப் பொருள் பொருந்திய சொற்களே இடம் பெற்றுள்ளன.

பேச்சு வழக்கில் உள்ள வசைமொழிகளையன்றி இலக்கியங்களில் காணப் பெறும் வசைமொழிகளும் சேர்க்கப் பெற்றுள்ளன.

25. குழூஉக்குறி அகராதி (Dictionary of Slang)

இலக்கண உரையாசிரியர்கள் குழூஉக் குறி பற்றிச் சுருக்கமாகவே குறிப்பிட்டிருக்கின்றனர். Slang என்ற சொல்லில் குழூஉக் குறி மட்டுமின்றி இழிசினர் வழக்கு, கொச்சை வழக்கு முதலியனவும் அடங்கும். பொதுவாக இலக்கியத்தரம் குறைந்த சொற்களே இந்த அகராதிக்குள் அடங்கும்.

மாணவர்கள் இத்தகைய குழூக்குறிச் சொற்களை உருவாக்குவதில் வல்லவர்கள். பிறருக்குப் புனைபெயர் வைப்பதிலும் அவர்கள் வல்லவர்கள். குழூஉக்குறிச் சொற்கள் கற்பனைநயம் பொருந்தியதாக இருக்கும். ஆனால் நிலைபேறுடைய சொற்களாக எழுத்தாளரால் கையாளப் பெறுவதற்கு உரியன ஒரு சிலவேயாகும்

புதுச் சொல்லாக்கங்கள் மிகுதியாகக் காணப்படுவது இந்தத் துறையில்தான். ஆனால் காலப்போக்கில் அவை எளிதில் மாற்றம் பெறுகின்றன அல்லது மறைந்து விடுகின்றன.

நாகரிக வாழ்க்கையில் புதியன புகும்போது புதுச்சொற்கள் உண்டாக்கப் படுகின்றன. பாமரமக்களும் சொல்லாக்கம் செய்வதில் தலைப்படுகின்றனர். மொழி என்பது எல்லோர்க்கும் உரிய பொதுச் சொத்துத்தானே! ஆனால் குழூஉச் சொற்கள் எல்லாவற்றையும் அறிஞர் உலகம்

ஏற்பதில்லை. எனினும் இந்த அகராதிச் சொற்கள் பாமர மக்களின் உள்ளத்தைப் படம் பிடித்துக் காட்டுவதாய் அமைவதாலும், பொதுமக்களின் உள்ளத்து உணர்ச்சியை வெளிப்படுத்துவதாலும், படிப்பதற்குச் சுவை பயப்பதாலும், தமிழிலும் இத்தகைய அகராதி உருவாக்கப் பெற்றுள்ளது.

26. ஆண்மைச் செல்வம் (Dictionary of Descriptive phrases for 'Man')

பெண்களை வருணிக்கின்ற அளவிற்கு ஆண்களை வருணிப்பதில் புலவர்கள் ஈடுபாடு கொள்வதில்லை. பெண்பாற் புலவர்கள் கூட ஆண்களை வருணிப்பதில் கவனஞ் செலுத்தவில்லை. பெண்கள் அழகு வடிவம் எனில் ஆண்கள் ஆண்மையின் வடிவம் அன்றோ? அதனால் 'தன்னேரிலாத் தலைவனைக்' காப்பியங்கள் வருணிக்கின்றன.

காப்பியத் தலைவர்களின் வருணனைத் தொடர்கள் ஆண்மைச் செல்வம் என்ற தலைப்பில் தொகுக்கப் பெற்றுள்ளன. ஆண்மையாளரையும் சிறந்த தலைவர்களையும் வருணிக்கத் தொடங்குவார்க்கு இந்நூல் வழிகாட்டியாய் அமையும்.

27. பரத்தையர் அகராதி (Dictionary of Harlots)

தமக்கென வாழாப் பிறர்க்குரியாளரான பொதும் பெண்டிர்கள் சங்க காலம் முதல் எல்லாக் காலங்களிலும் சமுதாயத்தில் வாழ்ந்து வருகின்றனர். சங்க காலத்தில் காதற்பரத்தையர், சேரிப்பரத்தையர், இற்பரத்தையர் என்று பலவகைப்பட்ட பரத்தையர் இருந்தனர். அண்மைக் காலம் வரை பரத்தையரின் உரிமைகளைக் குமுகாயம் மறுக்கவில்லை. இப்போது சட்டம் பரத்தையரை விருப்பப்படி நடமாட விடவில்லை. எனினும் இலைமறை காய்மறையாகப் பரத்தையர் ஆங்காங்கு இல்லாமற் போகவில்லை.

குழுகாயத்தைப் படம் பிடித்துக் காட்டுவதே பாவலர்களின் முதன்மையான பணி. அதனுல்தான் பரத்தையர்கள் இலக்கியத்தில் மிகுதியாக இடம் பெற்றுள்ளனர்.

முற்காலங்களில் பரத்தையர்கள் பல கலைகளிலும் வல்லவராயிருந்தனர். மாதவி பரத்தையர் குலத்தில் பிறந்தவள். ஆயினும் குலமகள் போல ஒருவனேடு வாழ்வதையே தன் குறிக்கோளாகக் கொண்டிருந்தாள்.

ஆயிரத்துக்கு மேற்பட்ட சொற்களும் தொடர்களும் பரத்தையரைக் குறிக்கத் தமிழில் உள்ளன எனில் தமிழர் தம் வாழ்வில் அவர்கள் பெற்றிருந்த பங்கு எத்துணைத்து என்பதனை அறியலாம்.

அழகும் காமவிருப்பமுங் கொண்ட பரத்தையரைப் பற்றிய பல தொடர்கள் படிப்பவர்க்கு இன்பூட்டுவதாய் அமைந்துள்ளன. வயது வந்தவர்கள் மட்டுமே இந்நூலைப் படிப்பதற்கு உரியவர்கள்.

III. திருக்குறள் பற்றிய ஆய்வு நூல்கள்

திரு. மு. ச. சிவம் அவர்கள் இளமை முதற்கொண்டே திருக்குறளில் அளவற்ற ஈடுபாடு கொண்டிருந்தார். திருக்குறளை அவர் வாழ்க்கை வழிகாட்டியாகக் கொண்டுள்ளார். உயர்நிலைப் பள்ளிப்படிப்பு முடிந்ததும் மேற்படிப்புக்காகக் கல்லூரிக்குச் செல்லமுடியாத வறுமையில் இருந்தாலும் மனந்தளராதிருந்தார். அவருடைய உள்ளத்துக்கு உறுதுணை தந்தது ஒரு குறள். இக்குறளைச் சுவரின் ஒரு பகுதியில் எழுதி வைத்துக் கொண்டு அதனை நாடோறும் படித்துச் சிந்தித்து ஆறுதல் அடைந்து வந்தார். நம்பிக்கை வீண் போகவில்லை. கல்லூரிப் படிப்புக்குச் செல்லும் வாய்ப்புக் கிட்டியது. அந்தக் குறள் தான் இது:

ஞாலங் கருதினுங் கைகூடும் காலங்
கருதி இடத்தாற் செயின்.

இன்னும் எத்துணையோ முறை வாழ்க்கைச் சிக்கல்களுக்கு வழிகாட்டியுள்ளது என்றும் கூறுகிறார்.

மாணவப் பருவத்தில் திருக்குறளில் பல ஆராய்ச்சிப் பரிசுகள் பெற்ற இவர் கல்லூரிப் படிப்பு முடிந்த பிறகும் தொடர்ந்து திருக்குறள் ஆராய்ச்சிகளில் ஈடுபட்டார். 'அனைத்துலகத் திருக்குறட் கழகம்' என்ற ஓர் அமைப்பைத் தொடங்கிப் புகழ்பெறுமாறு ஈரோடு திரு. வேலா இராசமாணிக்கம் அவர்களை வேண்டினார். வேலா அச்சகத்திலேயே 'திருவள்ளுவர் நூலகம்' ஒன்றை ஏற்படுத்தித் திருக்குறள் பற்றிய நூல்களையெல்லாம் தொகுத்துக் கொடுத்தார். "இதழ் நடத்தினால் ஊதியம் கிடைக்குமா? இழப்பு நேருமா" என்று அவர் தயங்கிய போதெல்லாம் 'குறளியம்' நடத்துவதால் பொருள் இழப்பு வராது; அவ்வாறு ஒரு சிறிது பொருள் இழப்பு ஏற்படினும் புகழ்ச் செல்வத்தை மிகுதியாக ஈட்டிக் கொள்ளலாம் என்று அவருக்கு ஆர்வமும் உற்சாகமும் ஊட்டி மிகச்சிறந்த முறையில் முதல் இதழ் வருவதற்குத் தம்மாலான முழு ஒத்துழைப்பையும் நல்கினார். ஐக்கிய நாடுகள் அவை மூலமாக உலக மக்கள் அனைவரும் திருக்குறளை உலகப் பொது நூலாக ஏற்றுக் கொள்ளுமாறு செய்ய வேண்டும் என்பதும் தேசிய நூலாக மட்டுமின்றித் (National Classic) திருக்குறள் உலக நூலாகவும் (World Classic) போற்றப்படுவதற்கான முயற்சியில் ஈடுபட வேண்டும் என்பதுமே இவருடைய குறிக்கோள்கள்.

தமிழகத்தின் மூன்று பல்கலைக்கழகங்களும் வெவ்வேறு கோணங்களில் திருக்குறளை ஆய்ந்து ஆய்வு நூல்களை வெளியிட்டுக் கொண்டு வருகின்றன. அதனால் இவர் அகராதி நோக்கில் தனியொருவராக இருபது ஆய்வு நூல்களைத் தொகுத்துள்ளார். இத்துணை ஆண்டுகளாக மூன்று பல்கலைக் கழகங்களும் சேர்ந்து மொத்தம் எத்தனை நூல்கள் தொகுத்து வெளியிட்டிருக்கிறார்கள் என்பதை நோக்குவார்க்கு இவருடைய திருக்குறள் ஆர்வமும் திருக்குறள் ஆராய்ச்சிப் பணியும் நெற்றெனப் புலப்படாமற் போகாது. தொடர்ந்து

திருக்குறளை ஆய்ந்து இன்னும் பல நூல்களை இயற்றவும் திட்டமிட்டுள்ளாராம்.

1. **வள்ளுவர் வினவிய வினாக்கள்.** (The questions posed y Tiruvalluvar)

சிந்தனையைத் தூண்டுவதற்கு வினாக்கள் பயன்படுகின்றன. வள்ளுவர் பல இடங்களில் வினாக்களைப் பயன்படுத்தியுள்ளார். அறத்துப்பாலிலும் பொருட்பாலிலும் காணப் பெறும் வினாக்கள் அமைந்த குறட்பாக்கள் யாவும் அகரவரிசையில் தொகுக்கப் பெற்றுத் தலைப்புக்களும் விளக்கமும் தந்து வெளியிடப் பெற்றுள்ளன.

ஆசிரியரின் கனவிலே உருவான "அனைத்துலகத் திருக்குறட் கழகம்' சார்பில் திரு வேலா இராசமாணிக்கம் அவர்களால் முதற் பதிப்பு வெளியிடப் பெற்றது. இப்போது இரண்டாம் பதிப்பு மீரா நிலையத்தின் வெளியீடாக இச்சிறு நூல் மலர்ந்துள்ளது.

2. **வாழ்வாங்கு வாழ வள்ளுவர் வழங்கும் அறிவுரைகள்** (Tiruvalluvar's guidelines for the best and happiest life in this World)

எல்லோரும் வையத்துள் வாழ்வாங்கு வாழ வேண்டும் என்பதே வள்ளுவப் பெருந்தகை அவர்களின் குறிக்கோள். அதற்கான வழிகளை அவர் திருக்குறளில் வகுத்துச் சென்றுள்ளார். அவற்றைத் தொகுத்துக் கூறுவது இந்நூல்.

திருவள்ளுவர் மறைமுகமான வாய்பாடுகளில் கூறியவற்றையும் நேர்முகமான அறிவுரைகளாக மாற்றிச் சில "தந்திர உத்திகளை'க் கையாண்டு இந்நூலை உருவாக்கியுள்ளார். திருவள்ளுவரின் உள்ளக்கிடக்கையை அறிந்து அறிவுரை வடிவில் அவருடைய கருத்துக்களைப் புதிய முறையில் தொகுத்துத் தந்துள்ளார்.

அறத்துப்பால் பொருட்பால்களில் காணப் பெறும் அறிவுரைகளாக ஐந்நூறுக்குமேல் தொகுத்துள்ளார். வாழ்க்கையில் சிக்கல் ஏற்படும் போதெல்லாம் இந்நூலைப் படித்துப் பார்த்தால் கட்டாயம் எந்தச் சிக்கலுக்கும் தீர்வு காண முடியும் என்பது இவர்தம் உறுதியான நம்பிக்கை. உலகத்தின் எல்லாவகையான மக்களுக்கும் பொதுவான அறிவுரைகளைப பெரும்பாலும் வள்ளுவருடைய சொற்களிலேயே அமைத்து இந்நூலை உருவாக்கியுள்ளார்.

மறைந்த நல்லறிஞர் டாக்டர். மு. வ. அவர்கள் திருக்குறளை விளக்கி எழுதிய தம் நூலுக்குத் 'திருக்குறள் அல்லது வாழ்க்கை விளக்கம்' என்றே தலைப்பிட்டுள்ளார். அதுபோலத் திருக்குறளை வாழ்க்கை வழிகாட்டியாகக் கொள்ள விரும்பும் எல்லாருக்கும் இந்த நூல் உற்றுழி உதவும் உறுதுணையாக இருக்கும் என்பது எம்நம்பிக்கை.

திருக்குறட் கருத்துக்கள் யாவும் இளமையிலேயே உள்ளத்தில் பதிய வேண்டியது இன்றியமையாதது. ஆதலால் பெரியவர்கள் இந்நூலைத் தங்கள் வாழ்க்கைக்குப் பயன்படுத்துவதோடு தங்கள் குழந்தைகளும் படித்துக் குறளின் கருத்துக்களை மனத்தில் தங்கவைத்துக் கொள்ளுமாறு செய்தல் நல்லது

திருவள்ளுவரின் திருவுள்ளத்தை வடித்து தரும் இந்நூல் தமிழறிந்த ஒவ்வொருவர் கையிலும் தவழ வேண்டும் என்பது என் விருப்பம் வள்ளுவர் வழியில் வாழ்க்கைச் சிக்கல்களைத் தீர்த்துக் கொண்டவர்கள் தங்கள் அனுபவங்களைத் திரு மு. ச. சிவம் அவர்களுக்கு எழுதினால் அடுத்த பதிப்பில் அவற்றை அவர் சேர்த்து வெளியிடுவார். இந்நூல் அச்சிடப் பெற்றுள்ளது

3. வள்ளுவரின் கட்டளைகள் (Tiruvalluvar' Commandments)

இன்னின்ன அறங்களைச் செய்க என்றும், இன்னின்ன செயல்களைச் செய்யற்க என்றும் வள்ளுவர் வழி வகுத்துத்

தந்துள்ளார். அவை என்னென்ன என்பதை அகரவரிசையில் தொகுத்து விளக்கத்துடன் தருவது இந்நூல். திருக்குறள் கருத்துக்களை இவ்வாறு வெவ்வேறு தலைப்புக்களில் வடித்து எளிமையாக எல்லாரிடத்தும் பரவச் செய்ய வேண்டும் என்பதே இவர் தம் விருப்பம்.

பைபிளில் பத்துக் கட்டளைகளைப் படித்தவர்கள் வள்ளுவரின் கட்டளைகள் என்னென்ன என்றும் அறிந்து கொண்டு அவற்றை வாழ்க்கையில் பின்பற்றுவது நலம் பயக்கும். இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது.

4. திருக்குறள் நொடி வினா-விடை (Quiz-questions in Tirukkural)

திருக்குறள் முழுவதையும் பொருளில் நாட்டஞ் செலுத்தாமல் அப்படியே மனப்பாடஞ் செய்பவர்கள் பலர் உளர். ஆனால் பொருளைப் பற்றிச் சிந்தித்து மனப்பாடம் செய்து கருத்துக்களை மனத்தில் இருத்திக் கொண்டு வாழ்க்கைக்குப் பயன்படுத்திக் கொள்வதே திருக்குறளைக் கற்கும் நெறியாகும்.

கேள்வி எழும்போது தான் சிந்தனை பிறக்கிறது. சிந்தித்துப் படிக்கும்போது தான் திருக்குறள் கருத்து மனத்தில் நிலை பெற்று நிற்கும். இவ்வாறு திருக்குறள் முழுவதையும் சிந்தித்து மனப்பாடஞ் செய்வதற்குத் துணையாக முடிந்த வரை திருக்குறட் சொற்களை வைத்துக் கொண்டே வினாக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அகர வரிசையில் அவ்வினாக்கள் அமைக்கப்பட்டு விடையாக அமையும் குறட்பாக்களும் உடனுக்குடன் கொடுக்கப் பெற்றுள்ளன.

அறத்துப்பால் பொருட்பால் பற்றிய வினா விடைகள் முதற்பகுதியாக வெளியிடப் பெற்றுள்ளன. காமத்துப்பால் பகுதி இரண்டாம் பகுதியாக வெளியிடப் பெறும்.

5. திருக்குறள் வினா விடைக் களஞ்சியம் (Question–Bank of Tirukkural)

திருக்குறள் மூலத்தைச் சிந்தனை மூலம் மனப்பாடம் செய்வதற்குப் பயன்படுமாறு "திருக்குறள் நொடி வினா-விடை" அமைந்தது. ஆனால் திருக்குறள் கூறும் கருத்துக்களையெல்லாம். உரையாசிரியர்கள் கூறும் சிறப்புக் கருத்துக்களையெல்லாம் சிந்தித்து அறிந்து கொள்வதற்கு ஆயிரக் கணக்கான கேள்விகளும் அவற்றிற்குரிய விடைகளுமாக அமைந்த இந்நூல் பயன்படும்.

திருக்குறளைப் பற்றி முடிந்த வரை முழுமையான அறிவு பெறுவதற்கு இந்நூல் பெரிதும் பயன்படும்.

6. **திருக்குறள் நயங்கள் (Literary Beauties in Tirukkural)**

சொல்நயம், பொருள்நயம், அணிநலன் முதலியன அமைந்த குறட்பாக்கள் மட்டும் தேர்த்தெடுக்கப் பெற்று அவற்றிற்குப் பொருள், அவற்றிலுள்ள வெவ்வேறு நயங்கள் முதலியன கூறப்பட்டுள்ளன. திருக்குறளைப்பற்றி இது வரை வெளி வந்த நூல்களில் அந்நூலாசிரியர்கள் சுட்டிக்காட்டிய நயங்கள், திருக்குறள் உரையாசிரியர் காட்டிய நயங்கள், இலக்கண உரையாசிரியர்களும், மேற்கோளாக எடுத்தாண்ட புலவர்களும் காட்டிய நயங்கள் முதலியன எல்லாம் தொகுத்து உரைக்கப் பட்டுள்ளன. நவில்தோறும் நயம் நல்கும் திருக்குறளின் கண் காணப்படும் இலக்கிய நயங்கள் எல்லாவற்றையும் உணர்ந்து கொள்வதற்கு இந்நூல் பயன்படும்.

7. **திருக்குறள் பொருளடைவு (Tirukkural Thesaurus)**

திருக்குறளின் ஒவ்வொரு சொல்லையும் திருக்குறள் உரையாசிரியர்களும், இலக்கண உரையாசிரியர்களும், திருக்குறளை எடுத்தாண்ட புலவர்களும் என்னென்ன பொருள்களில் கையாண்டுள்ளனர் என்று விளக்கமாகக் கூறும் பொருளடைவு நூல் இது. பல்லாண்டு காலம் அரும்பாடுபட்டுத் தொகுக்கப் பெற்ற நூல். திருக்குறளின் ஒவ்வொரு சொல்லுக்கும் காலந்தோறும் வெவ்வேறு பொருள்கள்

கள் ஏற்பட்டிருப்பதை அறிந்தால் 'நவில்தொறும் நூல் நயம் பயக்கும்' திருக்குறள் காலத்துக்குக் காலம் வெவ்வேறு பொருள்களைத் தந்து மக்களுடைய வாழ்க்கைப் போக்குக்குத் துணையாய்த் தொடர்ந்து இருந்து வந்ததை அறியலாம்

திருக்குறளைப் பிறமொழியில் மொழி பெயர்த்தவர்கள் என்னென்ன பொருளில் திருக்குறட் சொற்களைக் கையாண்டு உள்ளனரோ அந்தப் பொருள்களும் சேர்க்கப் பெற்றுள்ளன

கால வெள்ளத்தைக் கடந்து நிற்கும் பேராற்றல் வாய்ந்தது திருக்குறள் என்பது இந்நூலைக் கற்போருக்குத் தெளிவாகும். பொருளியல் (Semantics) ஆராய்ச்சியில் தலைப் படுவோருக்கு இந்நூல் பெருவிருந்தாக அமையும்.

8 **திருக்குறள் சொற்பொருட் களஞ்சியம்** (Concordance to Tirukkural)

திருக்குறளின் ஒவ்வொரு சொல்லும் எந்தெந்தப் பொருள்களில் எந்தெந்தக் குறட்பாக்களில் கையாளப் பெற்றுள்ளன என்பதனை அறிந்து கொள்ள இந்நூல் பயன்படும்.

திருக்குறளில் ஒவ்வொரு சொல்லுக்குமுரிய பொருள் களும் அப்பொருள்களின் கீழே குறட்பாக்களும் கொடுக்கப் பெற்றுள்ளன. திருக்குறளில் சொற்பொருள் ஆராய்ச்சி செய்வார்க்குப் பெறவருந்துணையாய்த் திகழ்வது இந்நூல்.

9. **திருக்குறள் கலைக்களஞ்சியம்** (Tirukkural Encyclopaedia)

திருக்குறள் 133 அதிகாரங்களைப் பெற்றிருந்தாலும் 133 பொருள்களைப் பற்றி மட்டும் பேசவில்லை. இன்னும் எத்தனை யோ தலைப்புக்கள் பேசப் பெற்றுள்ளன. திருக்குறளை எழுத்தெண்ணி ஆய்ந்து திருக்குறளில் காணப்பெறும் நூற் றுக் கணக்கான தலைப்புகளின் கீழ் ஆய்வுக்கட்டுரைகள்

எழுதப் பெற்றுள்ளன. திருக்குறள் பற்றி இதுவரை வெளி வந்துள்ள நூற்றுக்கணக்கான நூல்களின் துணை கொண்டு இக்கலைக்களஞ்சியம் மேனாட்டாரின் நூலாராய்ச்சிக் கலையின் அடிப்படையில் உருவாக்கப் பெற்றுள்ளது.

10 திருக்குறளின் அழகுகள் (Beauties of Tirukkural)

திருக்குறளின் பல்வேறு அழகுகள்- சொல்லழகு, பொருளழகு. அமைப்பழகு, நடையழகு முதலியவை பொருத்தமான தலைப்புக்களின் கீழ் எடுத்துக் காட்டப் பட்டுள்ளன. திருக்குறளின் இலக்கியப் பெருமையை எடுத்துக் காட்டுவது இந்நூல். திருக்குறளினால் இலக்கிய இன்பம் பெறுவார்க்குத் தேனாக இனிக்க வல்லது இந்நூல். இஃது அண்மையில் வெளியிடப் பெற்றுள்ளது.

11. திருக்குறள் நடை நலம் (Stylistic Studies on Tirukkural)

தமிழ்ச் செய்யுள் வகைகளுள் வெண்பாப் பாடுவது மிகவும் நிறைந்த புலமை வாய்ந்தவர்க்கே முடிவதொன்று. அதனால்தான் சிறந்த வெண்பாக்கள் பாடும் புலவரை 'வெண்பாப் புலி' என்று குறிப்பிடுவர். வெண்பாவில் பாதியளவுள்ள குறள் வெண்பாவில் பாடுவது அதிலும் கடினமானது. குறள் வெண்பா யாப்பை எத்தனையோ புலவர்கள் பயன்படுத்தியுள்ளனர். அந்தக் குறள் வெண்பாக்கள் எல்லாம் செறிவு இன்மையின் வறிதாகின. திருவள்ளுவர் ஒருவரே குறள் வெண்பா யாப்பில் சிறந்ததொரு நூலை இயற்றி வெற்றி கண்டவர். தமிழ் மொழியின் புலமைக்கு எல்லை கண்டவராய் இருந்தமையாற்றான். இவ்வாறு அரும்பெருங் கருத்துக்களைச் செறித்து அழகிய வெண்பாக்களில் அவர் அமைக்க முடிந்தது.

கபிலரின் நடையைப் பற்றி ஆய்வு செய்து எம். லிட். பட்டம் பெற்ற மு. சண்முகம் பிள்ளை அவர்கள் வள்ளுவரின் நடை நலங்களையெல்லாம் ஆய்வுசெய்து இந்நூலை இயற்றியுள்ளார்.

திருவள்ளுவர் கையாண்ட பல வகை உத்திகளும் எடுத்துக் காட்டுக்களுடன் விளக்கப் பெற்றுள்ளன.

12. **திருக்குறளின் உருவக் காட்சிகள்** (Imageries in Tirukkural)

1955 ஆம் ஆண்டு திருச்சி திருக்குறள் சிந்தனைக்குழு நடாத்திய பொதுப் போட்டியில் முதல் பரிசு பெற்ற (தங்கப் பதக்கம் பெற்ற) ஆராய்ச்சிக் கட்டுரை.

திருவள்ளுவரின் திருவுள்ளத்தை அறிந்துகொள்ள உருவக் காட்சிகள் பெரிதுந் துணைபுரிகின்றன. இந்த உருவக் காட்சிகள் பிற சங்க நூல்களுடன் ஒப்பிட்டுக் காட்டப்-பெற்றுள்ளன.

13. **திருக்குறளில் எண்பான் சுவைகள்** (Literary enjoy ment of Tirukkural)

தொல்காப்பியர் எண்வகை மெய்ப்பாடுகளைப்பற்றிக் கூறியுள்ளார். இலக்கியச் சுவையைப் பெறுவதற்கு இம்மெய்ப்பாடுகளைப் பற்றிய அறிவு இன்றியமையாதது.

திருக்குறளில் எண்வகை மெய்ப்பாடுகள் எங்கெங்கே காணப்படுகின்றன என்பதை எடுத்துக் கூறுவது இந்நூல்.

14 **திருக்குறள் வழித் தமிழ் இலக்கணம்** (Tamil grammer explained through Tirukkural)

இலக்கியப் புலமையோடு இலக்கணப் புலமையும் நிறைந்த வள்ளுவர் தமிழ் இலக்கணத்தின் பெரும்பாலான அடிப்படைக் கருத்துக்களையெல்லாம் கூறிப் போந்துள்ளார்.

திருக்குறளிலிருந்தே எடுத்துக் காட்டுகள் தந்து இளைஞர்களும் பொதுமக்களும் குறள் வழியாக இலக்கண அறிவைப் பெற்றுக் கொள்ளப் பெருந்துணையாய் இருப்பது இந்நூல்.

15. **தமிழ் இலக்கியங்களில் திருக்குறள் கருத்துக்கள்** (Tirukkural Quotations from Tamil Works)

கோவை திரு. தி. சு. அவிநாசிலிங்கம் செட்டியார் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கத் திரு கி. வா. செகந்நாதன் அவர்கள் பதிப்பித்த திருக்குறள் ஆராய்ச்சிப் பதிப்பில் கி. பி. 12ஆம் நூற்றுண்டு வரையில் உள்ள இலக்கியங்களில் காணப்படும் குறட்கருத்துப் பகுதிகளே மேற்கோளாக எடுத்துக் காட்டப் பெற்றுள்ளன. பல்லாயிரம் நூல்களைப்படித்துப் 12 ஆம் நூற்றுண்டுக்குப்பின்னர் எழுந்த நூல்களில் உள்ள திருக்குறட் கருத்துக்களும் இந்நூலில் முறைப்படுத்திக் காட்டப் பெற்றுள்ளன.

தமிழிலேயே மிகுதியான புலவர்கள் மேற்கோளாக எடுத்தாண்ட நூல் திருக்குறளாதலின் இவ்வகராதி மிகப் பெரியதொன்ருக மலர்ந்துள்ளது.

16 உலகப் பேரறிஞர்களும் வள்ளுவரும் (Tiruvalluvar among the greatest men in the world)

கிரேக்கம், இலத்தீன், பிரெஞ்சு, ஆங்கிலம், செருமன், முதலிய உலகப் பெரு மொழிகளில் அறிஞர் பெருமக்கள் கூறிய கருத்துக்களில் பல திருக்குறளிலும் காணப்படுகின் றன. Great men think alike.

உலகப் பேரறிஞர்கள் கூறிய கருத்துக்கள் திருக்குறள் கருத்துக்களோடு ஒரு புடை ஒப்புமை பெற்றிருப்பதை அறிவோர்க்கு ஒப்பிடுகின்ற இன்பமும் சிந்தனை ஊற்றும் அளப்பில்லாதவை; உலகத்தில் உள்ள பிறநாட்டவரெல் லாம் பழங்காலத்துச் சிந்தனையாளர்கள் என்ருல் பிளேட்டோ, அரிஸ்டாட்டில் முதலியவர்களையே நினைவு கூர்கின்றனர்: வள்ளுவரை மறந்து விடுகின்றனர்.

இனியேனும் உலகச் சிந்தனையாளர்கள் வரிசையில் முதலிடம் பெறுவதற்குரியவர் திருவள்ளுவர் என்பதை உலக நாட்டினர் உணர்வார்களாக அந்த உணர்வை உலகம் முழுவதிலும் பரப்புவது தமிழர்களாகிய நமது கடமை. அதற்கு இந்த நூல் பெரிதும் பயன்படும்.

பைபிளைப் போலவே உலகத்தின் எல்லா மொழிகளி லும் திருக்குறள் மொழி பெயர்க்கப்படத் திருக்குறளுக்குப் பாதிரிமார்கள் தோன்றுவார்களாக! ஆங்கிலத்தில் உள்ள இந்நூலைக் கண்ணுறும் பிற மொழி மக்கள் திருக்குறளைத் தங்கள் மொழிகளிலும் மொழி பெயர்த்து வைத்துக் கொள்ள வேண்டும் என்ற ஊக்குணர்ச்சியைப் பெறுவர்.

17. திருக்குறள்-ஆங்கில அகராதி (Tirukkural-English Dictionary)

திருக்குறளுக்கு இதுவரை ஆங்கிலத்தில் தோன்றிய மொழி பெயர்ப்புக்களிலிருந்து இந்நூல் தொகுக்கப் பெற் றுள்ளது. ஒவ்வொரு சொல்லுக்கும் எந்தெந்த ஆங்கில மொழி பெயர்ப்பாளர் என்னென்ன பொருளைத் தந்துள் ளனர் என்பதனை அவர்களுடைய பெயர்களைச் சுட்டி விரி வாகத் தொகுக்கப் பெற்ற அரிய அகராதி. பல்கலைக் கழகம் பல ஆண்டுகள் ஆய்ந்து தொகுக்க வேண்டிய இப்பணியை இவர் தனித்து நின்றே தொகுத்துள்ளார்.

18 வள்ளுவர் காட்டும் மாந்தர் Human specis exemplified by Tiruvalluvar)

மாந்தர் இனத்தின் பல்வேறு மக்களை அறிவு நிலை, உணர்வு நிலை, குமுகாய நிலைகளில் தரம் பிரித்து அவர் களுடைய பண்புகளை மிக நுட்பமாகக் கூறியுள்ளார் வள்ளுவர். சேக்சுபியர் தாம் 'the most comprehensive soul' பெற்றவராக உலக அறிஞர்களால் போற்றப் பெறு கின்றார் சேக்சுபியர் தம் நாடகங்களில் இனம் பிரித்துக் காட்டிய மாந்தர்களைக் காட்டிலும் மிகுதியான மாந்தர் வகைகளை வள்ளுவப் பெருந்தகை இனம் பிரித்துக் காட்டி யிருப்பது வியப்புக்கும் அறிவு விருந்துக்கும் உரிய செய்தி யாகும். திருவள்ளுவரின் பேரறிவுத் திறம் இந்நூல் மூல மாகவும் வெளிப்பட்டுத் தோன்றுகிறது.

19. திருக்குறளும் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களும் (Tirukkural and Eighteen Works of Sangam Age)

திருக்குறள் பதினெண்கீழ்க் கணக்கு நூல்களுள் ஒன்ருக வைத்து மதிக்கப்பட்டு வந்தது பொருந்துமா என்று ஆராய்கிறது இந்த ஆய்வு நூல். திருவள்ளுவரின் காலத்தை விருப்பு வெறுப்பின்றி நிறுவுவதற்கும் இந்நூல் ஓரளவு துணைபுரியும்.

20. திருக்குறளும் பகவத் கீதையும் (Tirukkural and Bhagavad Gita)

அறவியல் நூல்களுள் திருக்குறள் தலை சிறந்தது. ஆன்மீக நூல்களுள் பகவத் கீதை தலைசிறந்தது. இவ்விரண்டையும் ஒப்பிட்டுப் பலநூல்கள் தோன்றியுள்ளன இரு நூல்களையும் ஆழ்ந்து கற்ற இவர் இந்த ஒப்பீட்டினைப் புதிய வகையில் செய்துள்ளார்.

IV கம்பன் பற்றிய ஆய்வு நூல்கள்

1. இராமன் அருட்செல்வம் (Dictionary of Epithets and Names of Sri Rama in Kamba Ramayanam)

வால்மீகியின் இராமாயணத்தில் இராமனைக் குறித்து வழங்கும் பெயர்களும் அடைமொழிகளும் மிகக் குறைவாகவே உள்ளன. இராமனைப் பரம்பொருளாகக் கருதிய கம்பர் தமிழிலேயே மிக உயர்ந்த சொற்களில் இராமனைப் புகழ்ந்து வருணிக்கிருர். கம்பராமாயணத்தில் இராமனைக் குறிக்கும் பெயர்களும் அடைமொழிகளும் (ஏறக்குறைய இரண்டாயிரம்) எந்தெந்தக் காண்டத்தில் எந்தெந்தப் பாடல்களில் வருகின்றன என்ற குறிப்புகளுடன் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

இது போன்றதொரு நூலைத் தொகுக்க வேண்டுமென்று ஏற்கனவே பல ஆண்டுகளாக எண்ணிக்கொண்டிருந்ததாகக்

கம்பன் அடிப்பொடி திரு. சா. கணேசன் அவர்களும், கள்ளிப்பட்டி திரு. க. கு. கோதண்டராமன் அவர்களும் கூறினர். இந்நூலைக் கண்டு அளப்பில் உவகை எய்தினர். தூத்துக்குடி வ. உ. சி. கல்லூரி முதல்வர் உயர்திரு. பேராசிரியர் அ. சீனிவாசராகவன் அவர்கள் இந்நூலைக் கண்டு அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையேயில்லை. இந்நூலைத் தொகுத்த பேராசிரியரை உவந்து வந்து கவிதைகளால் புகழாரம் சூட்டியுள்ளார்.

சிறப்பு மிக்க தலைவர்களை வருணிப்பதற்குக் கம்பர் பயன்படுத்திய வார்த்தைகளையே பயன்படுத்தலாம். தமிழ்க் கடலைக் கரை கண்ட கம்பரது உள்ள பொய்கையிலே பூத்த வாடா நறுமலர்களாக இந்தத் தொடர்களைக் கருதலாம். இராமனின் பக்தர்கள் படித்துப் படித்து இன்புறத்தக்க நூல். இந்நூல் கம்பன் சமாதியில் (நாட்டரசன் கோட்டையில்) கம்பன் திருநாள் விழாவில் அரங்கேற்றப் பெற்றது.

2 **கம்பர் காட்டும் பெண்ணோவியம்** (முதல்பகுதி) **சீதை**
(Dictionary of Epithets and Names of Sri Sita in Kamba Ramayanam.)

கம்பர் சீதையைக் குறிப்பிடும் போதும் மிகவும் ஆராய்ந்து தேர்ந்த அழகு மிக்க அடைமொழித் தொடர்களைப் பயன்படுத்தியுள்ளார் 'தவஞ்செய்த தவமாந் தையல்' 'அழகெலாம் ஒருங்கே கண்டால் யாவரே ஆற்ற வல்லார்!' 'அணிப்றித்து அழகு செய்யும் அணங்கு' முதலான ஒப்பில்லாத சொற்றொடர்களால் சீதையை உயர்த்துக் கூறும் கம்பர் சீதையைக் குறிக்கப் பயன்படுத்திய சொற்களும், சொற்றொடர்களும் தெவிட்டாத இன்ப மூட்டுவனவாயுள்ளன.

இந்நூல் அச்சிடப்பெற்றுள்ளது.

3. **கம்பர் காட்டும் பெண்ணேவியம்:** (இரண்டாம் பகுதி) **பெண்கள்** (Dictionary of Epithets and synonyms for 'Woma'n in Kamba Ramayanam)

பெண்களே வருணிப்பதில் சாதாரணப் புலவர்கள் கூட இன்பம் காணுகின்றனர்; முற்றும் துறந்த முனிவர்களான திருத்தக்க தேவர், சிவப்பிரகாச சுவாமிகள், குமர குருபரர் போன்றவர்களும் பெண்களே இனிய தொடர்களில் வருணித்துக் கூறியுள்ளனர். பெருங் காப்பியப் புலவரான கம்பர் பெண்களே வருணிப்பதில் அளவற்ற இன்பம் கொண்டுள்ளார். அறிஞர் அண்ணு அவர்கள் தம் 'கம்பரசத்தில்' ஒரு சில எடுத்துக் காட்டுக்களேயே காட்டியுள்ளார்.

சிதையைக் குறிக்க ஆயிரந் தொடர்களே வழங்கிய கம்பர் பொதுவாகப் பெண்களேக் குறிக்க மற்றுமோர் ஆயிரந் தொடர்களேப் பயன்படுத்துகின்ருர்.

பல ஆண்டுகளுக்கு முன்பே தொகுக்கப் பெற்ற இந்நூல் இன்னும் அச்சிடப் பெறவில்லே. காரணம் கம்ப ராமாயண அன்பர்கள் கூட நூல்களே வாங்கி ஊக்கங் கொடுக்க விரும்பாதது தான்.

காரைக்குடியில் ஆண்டுதோறும் சிறப்பாக நடைபெற்று வரும் கம்பன் திருவிழாவுக்குத் தொடர்ந்து பல ஆண்டுகள் சென்று கம்பன் கவியமுதை மாந்திய இவர் ஒவ்வோர் ஆண்டும் கம்பனேப் பற்றி ஒரு நூல் வெளியிட வேண்டும் என்று விரும்பிஞர். ஆனுல் 'கற்றலின் கேட்டலே நன்று' என்ற வள்ளுவர் வாய்மொழியைப் பொன்னே போலப் போற்றுகின்றனர் கம்பன் திருநாளுக்கு வருகின்ற அன்பர்கள் அதனுல் ஊக்கம் குன்றினுலும் இவர் கம்பனேப் பற்றிய ஆய்வுகளேத் தொடர்ந்து நடத்திச் கொண்டே வருகின்ருர்; பல நூல்களே இயற்றி வைத்துள்ளார்.

4. **கம்பன் கலைக்களஞ்சியம்** (Encyclopaedia of Kamba Ramayanam)

கம்ப ராமாயணம் பற்றிப் பல் வேறு கோணங்களில் ஆய்வு நடத்தி எழுதப் பெற்ற கட்டுரைகள் இதில் இடம் பெற்றுள்ளன கம்பராமாயணத்துக்கு இணை யான காப்பியம் தமிழில் பிறிதில்லை. சேக்சுபியரின் முப்பத் தாறு நாடகங்கள் தரும் இலக்கிய இன்பம் அனைத்தும் கம்ப ராமாயணம் ஒன்றிலேயே பெறமுடியும் ஆசிரியர்-திராவி டர் பண்பாட்டுச் சிக்கலினால் கம்பர் தரும். இலக்கியஇன்பங் களை இழக்கக் கூடாது கம்பனைச் சுவைக்கக் கொடுத்து வைத்தவர்கள் தமிழராகப் பிறந்ததன் பயனைப் பெற்றவர் களாவர். கம்பன் புகழ் பரப்பிக் கன்னித் தமிழ் வளர்க்கும் கம்பன் அடிப்பொடி திரு. சா. கணேசன் அவர்களின் இலக்கியத்தொண்டு ஏட்டிற்கு அடங்காத இணையற்ற தொண்டு.

5. **கம்பனில் அழகுகள்** (Beauties of Kamba Ramayanam)

கம்பராமாயணத்தின் அழகெலாம் ஒருங்கே காண விரும்புவார்க்காகவே இந்நூல் தொகுக்கப் பெற்றது. கம்ப ராமாயணத்தில் எத்தனை அழகு! எத்தனை இன்பம்! எத்தனை நயம்! சேக்சுபியரின் **சூலியசு சீசர்** நாடகத்தில் உள்ள வரியில் ஒரு வார்த்தையை மாற்றி 'Here was a poet; whan comes such another?' என்று வியந்து பாராட்டுவதைத் தவிர வேறு நாம் என்ன செய்வது!

6 **கம்பரும் சேக்சுபியரும்** (Kamban and Shakespeare)

சேக்சுபியர் நாடகங்களைப் பற்றி ஆங்கிலத்தில் ஆயிரக் கணக்கான திறனாய்வு நூல்கள் உள்ளன. கம்பராமாயணம் பற்றி நூற்றுக்கணக்கான திறனாய்வு நூல்களும் கட்டுரை களும் உள்ளன. கம்பராமாயணத்திலும் சேக்சுபியர் நாட கங்களிலும் தம் உள்ளத்தைப் பறி கொடுத்த சிவம் அவர்கள் இவருடைய கலைத்திறமைகள், ஒத்த கருத்துக்கள், மொழிக்

குச் செய்த ஆக்கங்கள் பற்றியெல்லாம் பல கட்டுரைகளில் ஒப்பீட்டாய்வு நிகழ்த்தியுள்ளார்

V பாரதி பற்றிய ஆய்வு நூல்கள்

1 பாரதியார் பாடல்களும் பாரதியார் தந்த விளக்கங்களும் (Parellels in poetry and prose works of Bharathiyar)

பாரதியாரின் பாடல்களையும், உரைநடை நூல்களையும் பன்முறை பயின்று பாரதியார் தம் பாடல்களுக்குத் தாமே விளக்கவுரை எழுதியது போன்ற பகுதிகளைத் தொகுத்துள் ள்ளார். கவிதை நடைக்கும் உரைநடையின் நடைக்கும் எத்துணை வேறுபாடுகள் உள்ளன! பாரதியாரின் ஆழ்ந்த கவியுள்ளம் இவர் தம் உரைநடையில் தெள்ளத் தெளிவாக

விளங்குவதை இந்நூல வாயில்ாக அறிந்து கொள்ளலாம்.

2 பாரதி கலைக்களஞ்சியம் (Encyclopaedia of Bharathi's works)

பாரதியாரின் நூற்றுண்டு விழா இவ்வாண்டு நடைபெற உள்ளது. பாரதியாரின் பாடல்கள், உரைநடை நூல்கள் திறனுய்வு நூல்கள் இவற்றை ஆழ்ந்து கற்றுப் பல்வேறு தலைப்புக்களில் கட்டுரைகளைப் படைத்துள்ளார்

மிகச் சிறந்த கவிஞர் அல்லது நூலாசிரியரின் படைப் புக்களை வைத்துக் கலைக்களஞ்சியங்கள் வெளியிடுவது மேனுட் டறிஞர்களின் மரபு இந்நூலாசிரியர் கம்பன் கலைக் களஞ்சி யம், திருக்குறள் கலைக்களஞ்சியம் ஆகியவற்றையும் தொகுத் துள்ளார்.

பாரதியாரின் நூற்றுண்டு விழா ஓராண்டு நடைபெற உள்ளது. விழாக்காலம் முடிவதற்குள் இந்நூல் அச்சிட்டு முடிக்கப் பெறல் வேண்டும் என்பது இவர் தம் விருப்பம்.

3. **பாரதி, பாரதி தாசன் தரும் நகைச்சுவை**
(Humour in the Works of Bharathi and Bharathidasan)

தமிழ்ப்பற்று, குமுகாயப்பற்று, சமுதாயச் சீர்திருத்தம் நகைச்சுவை முதலியவற்றில் பாரதியாருக்கும் பாரதிதாசனுருக்கு மிடையே எத்துணையோ ஒற்றுமைகள் உள்ளன. இருவரும் கிண்டல் கலந்த நகைச்சுவைகளைப் படைத்துள்ளனர். அறியாமை மிக்க பாமரமக்களின் மூடக் கொள்கைகளை எள்ளி நகையாடும்போதும் இருவரிடத்தும் நகைச்சுவை நிழலாடுகிறது.

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற இருபெருங் கவிஞர்களும் வழங்கும்நகைச்சுவை விருந்தினை அனைவரும் அருந்தி மகிழலாம்.

VI தெய்வப் பெயர்த் தொகுதிகள்

1. **கலைமகள் அருட் செல்வம்** (Dictionary of Epithets and Names of Saraswati)

கல்விக்கு இறைவியான கலைமகளின் பெயர்களும் தொடர்களும் ஓராயிரம் கொடுக்கப்பட்டுள்ளன இந்நூலில்

காஞ்சி காமகோடி பீடம் தவத்திரு ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் அவர்களின் ஆசியுரையும், திருமதி சௌந்தரா கைலாசம் அவர்களின் அணிந்துரையும் கூடியுள்ள இந்நூல் அச்சிடப் பெற்றுள்ளது.

2. **திருமகள் அருட்செல்வம்** Dictionary of Epithets and Names of Lakshmi)

திருமகளின் பெயர்கள் தொடர்கள் இரண்டாயிரத்து ஐந்நூறு இதன்கண் உள்ளன. உயர் மா மன்ற நீதிபதி மாண்புமிகு ப. ச கைலாசம் அவர்கள் இந்நூலுக்கு அணிந்துரை வழங்கியுள்ளார்கள். இந்நூல் அச்சிடப் பெற்றுள்ளது.

3. **விநாயகர் அருட்செல்வம்** (Dictionary of Epithets and Names of Vinayaka)

விநாயகப் பெருமானைக் குறிக்கும் பெயர்கள், அடைமொழிகள் ஐயாயிரம் கொடுக்கப் பெற்றுள்ளன. கம்பன் அடிப்பொடி சா. கணேசன் அவர்கள் இந்நூலுக்கு விரிவானதொரு அணிந்துரையை வழங்கியுள்ளார்கள்.

இந்நூல் காரைக்குடிக்கு அருகில் உள்ள பிள்ளையார் பட்டியில் பிள்ளையார் திரு முன்பு வெளியீட்டுவிழா வைத்து வெளியிடப் பெற்றது. மு. ச. சிவம் அவர்கள் மீது அளவில்லாத அன்பு கொண்டுள்ள கம்பன் அடிப்பொடி அவர்கள் இந்த நூல் வெளியீட்டு விழாவை மிகச்சிறப்பாக நடத்தியருளினார்கள்.

4. **முருகன் அருட்செல்வம்** (Dictionary of Epithets and Names of Muruga)

தமிழர் தம் அழகுதெய்வமான முருகப் பெருமானைக் குறிக்கும் பன்னீராயிரம் பெயர்கள் தொடர்கள் அடங்கிய இந்நூலைப் பழனித் தேவத்தானம் வெளியிட மறுத்து விட்டது. அரசு பொருள் உதவியுங் கூட, முருகன் அடியார்களுள் யாராவது செல்வர் ஒருவர் மனம் வைத்தால் அல்லது பல இலட்ச உருபாச் செலவில் கோழாத்திருப்பணி செய்து வரும். திருச்செந்தூர்த் தேவத்தானம் விரும்பினால் அல்லது மீண்டும் அறநிலையத்துறை ஆணையர் அவர்கள் உள்ளங் கொண்டால் முருகனின் திருப்பெயர்கள் மக்கள் நாவில் அன்புப் பெருக்குடன் நடமாட வழியேற்படும்.

5. **சிவபிரான் அருட்செல்வம்** (Dictioarry of Epithets and Names of Lord Siva)

உலகில் எந்தக் கடவுளருக்கும் கிடைக்காத அளவற்ற பெயர்களும் தொடர்களும் தமிழில் சிவபெருமானுக்குரிய

யனவாக வழங்குகின்றன. முப்பதாயிரத்துக்கு மேற்பட்ட பெயர்களும் தொடர்களும் தொகுக்கப் பெற்றுள்ளன.

தமிழின் தனிச்சிறப்புக்களுள் இந்த அகராதியும் ஒன்று என்று கூறலாம்.

அமெரிக்காவில் பென்சில் வேனியாப் பல்கலைக்கழகத்தில் சமயத்துறைத் தலைவராக இருந்த திரு Henry Smith என்பவர் இத்தகு அருட் செல்வங்களைப் பாராட்டி வரவேற்றுள்ளார்".

6 **தேவி அருட் செல்வம்** (Dictionary of Epithets and Names of Goddess Uma)

உமா தேவியைக் குறிக்கும் ஆறுயிரம் பெயர்களும் தொடர்களும் இந்நூலில் உள்ளன. பல ஆண்டுகளாகத் தொகுத்து வைக்கப்பெற்றுள்ள இந்நூல் இன்னும் வெளியிட பெறும் பேற்றைப் பெறவில்லை.

7. **திருமால் அருட்செல்வம்** (Dictionary of epitnets and names of Vishnu)

திருமாலின் திருப்பெயர்களும் அடைமொழிகளும் இருபதாயிரத்திற்கு மேல் இந்நூலில் தொகுக்கப் பெற்றுள்ளன.

8. **கண்ணன் அருட்செல்வம்** (Dictionary of Epitnets and Names of Lord Krishna)

'கண்ணன்' என்ற பெயர் பக்தர்களின் உள்ளத்தை உருக்கவல்லது. பக்தியும், காதலும், அன்பும் கண்ணன் பெயரைக்கேட்ட அளவில் பெருகும் என்பர் கண்ணனின் அடியார்கள் ஐந்து அல்லது ஆறுவது வயதில் மு. ச. சிவம் அவர்கள் "கண்ணன் வரக் காணேனடி கவலை மெத்தக் கொண்டேனடி" என்ற பாடலின் அடிகளில் உள்ளத்தைப் பறிகொடுத்தாராம். இளமையிலேயே அவர் உள்ளங் கவர்ந்த

கள்வன் கண்ணன் ஆவான். உலகம் முழுவதிலும் பரவியுள்ள கண்ணன் இயக்கம் (Krishna Consciousness) பக்தியையும் உணர்ச்சிப் பெருக்கையும் வளர்த்து வருகிறது

கண்ணனைக் குறிக்கும் பல்லாயிரம் பெயர்களும் தொடர்களும் அடியார்களுக்குத் தேன்போல இனிக்கவல்லன

9 **கடவுட் செல்வம்** (Dictionary of Epitnets and Names of God)

திருவள்ளுவர் கடவுள் வாழ்த்தில் எந்தச் சமயத்தைச் சார்ந்த கடவுளரையும் சுட்டிக் கூறுமல் பொதுவாகவே கடவுளைப் போற்றியுள்ளார். கிறிஸ்துவ சமய நூல்களும், இசுலாமிய சமய நூல்களும் கடவுளைப் பொதுவாகவே குறிப்பிடுகின்றன. சைவ, வைணவ சமய நூல்களிலும் பொதுவாகக் கடவுளைக் குறிக்கும் சொற்கள் மிகப்பல உள்ளன. இவ்வாறு பொதுவாகக் கடவுளைக் குறிக்கும் பல்லாயிரம் சொற்களும் தொடர்களும் தமிழரின் கடவுட் கொள்கையை அறிவிக்கும் வகையில் அமைந்துள்ளன. தமிழருக்குச் சிறப்புத்தரும் அகராதிகளில் இதுவும் ஒன்று.

10. **சிறுதெய்வப் பெயர்த் தொகுதி**
(Dictionary of Epitnets and Names of gods)

பிரம்மன், இந்திரன், ஐயப்பன் முதலிய பிற தெய்வங்களைக் குறிக்கும் பெயர்களும், தொடர்களும் தனித்தனியே தொகுக்கப் பெற்றுள்ளன.

இவ்வாறு நிகண்டில் முதற்கண் காணப்படும் தெய்வப் பெயர்த் தொகுதி பத்துப் பெரும் பகுதிகளாகத் தொகுக்கப் பெற்றுள்ளன.

11. **விநாயகர் ஆயிரந் திருநாமங்கள்**
(Sahasranamas of Lord Vinayaka)

கோவில்களில் தமிழில் அருச்சனைகள் செய்யப் பெறல் வேண்டும் என்ற அரசின் விருப்பத்திற்கு ஏற்ப இறைவர்

களின் ஆயிரந்திருப் பெயர்களை (சகத்திர நாமங்களை) அகர வரிசையில் தொகுத்துள்ளார் மு. ச. சிவம் அவர்கள். பல்லாயிரம் நூல்களிலிருந்து தொகுக்கப் பெற்ற தொடர்களிலிருந்து சந்த நயம், எதுகை மோனை இன்பம், பொருட் சிறப்பு வாய்ந்த ஆயிரந்திருநாமங்களை ஆய்ந்து தொகுத்து உள்ளார். இவற்றுள் விநாயகர் ஆயிரந் திருநாமங்கள் பதினைந்தாண்டுகட்கு முன்பே தொகுக்கப் பெற்றுள்ளது.

ஆனால் கோவில்களில் தமிழ் அருச்சனைமுறை இன்னும் முதன்மை பெறுமையின் இந்நூல் விற்பனையாகாமல் உள்ளது.

இந்நூலையும் இதுவரை வெளிவந்துள்ள 'அருட்செல்வம்' நூல்களையும் தேவத்தான நூலகங்கள் வாங்கிப் பயன்படுத்தலாம். என்று அறநிலையத்துறை ஆணையர் அன்புடன் பரிந்துரை செய்தும் பல தேவத்தான நூலகங்கள் இந்நூல் களை வாங்கிப் புது முயற்சிகளை ஊக்குவிக்க முன்வரவில்லை' எனினும் எல்லாக் கடவுளர்க்கும் ஆயிரந்திருநாமங்களைத் தொகுத்து வைத்துள்ளார்.

12. திருமுருகன் ஆயிரந் திருநாமங்மள்
(Sahasranames of Lord Muruga)

சில ஆண்டுகளுக்கு முன்பு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநர் திரு டாக்டர் ச வே. சுப்பரமணியம் அவர்கள் திருவனந்தபுரத்தில் உள்ள தம் நண்பர் திரு அ. சுப்பிரமணியம் என்பவரைக் கொண்டு 500 படிகள் மட்டும் அச்சிட ஏற்பாடு செய்தார். இந்நூலுக்குத் திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள் அழகிய அணிந்துரை ஒன்றை வழங்கியுள்ளார்கள்.

13. தேவியின் ஆயிரத் திருநாமங்கள்
(Sahasranames of Godders UMA)

14 திருமாலின் ஆயிரந் திருநாமங்கள்
(Sahasranames of Lord Vishnu)

15. இராமன் ஆயிரத் திருநாமங்கள்
Sahasranames of Lord Sri Rama

16 கண்ணன் ஆயிரத் திருநாமங்கள்
Sahasranames of Lord Krishna

17. சிவபிரான் ஆயிரத் திருநாமங்கள்
(Sahasranames of Lord Siva)

VII உள்ளம் உருக்கும் பாக்கள்

(Prayer Songs that mett the heart)

18. முருகன் மீது உள்ளம் உருக்கும் பாக்கள்

19. சிவபிரான் மீது உள்ளம் உருக்கும் பாக்கள்

20. திருமால் மீது உள்ளம் உருக்கும் பாக்கள்

21. தேவி மீது உள்ளம் உருக்கும் பாக்கள்

22. விநாயகர் மீது உள்ளம் உருக்கும் பாக்கள்

VIII இலக்கிய வளர்ச்சி காட்டும் ஆய்வு நூல்கள்

1. மேற்கோள் அகராதி : ஆசிரியர் வரிசையில்
(Dictionary of Quotations : authorwise)

தமிழ் இலக்கியம் முழுவதிலுமிருந்து சிந்தைக்கினிய செவிக்கினிய வாக்கியங்கள், பகுதிகள், சொற்றொடர்கள் முதலியன தொல்காப்பியர் காலம் முதல் இக்காலம் வரை உள்ள நூலாசிரியர் பெயரின் கீழ்த் தொகுக்கப் பெற்றுள்ளன இவ்வகராதி ஒவ்வொரு நூலாசிரியரும் தமிழின் வளத்துக்கும் சிந்தனை வளர்ச்சிக்கும் அளித்தகருத்துக் களஞ்சியம் தம் வாழ்நாளில் இலக்கியங்கள் எல்லாவற்றையும் படித்து

இன்புற முடியாதவர்கள் அவற்றின் சாரமாகிய இந்நூலைப் படித்துப்பயன் பெறலாம்.

மேனாட்டினரே அறிவிற் சிறந்தவர்கள் என்றும் அவர்கள் கூறியவை யாவும் அப்படியே ஏற்றுக் கொள்ளத்தக்க நிலைத்த உண்மைகள் என்றும் பலர் கருதி வந்தனர். அறிஞர்கள் எல்லா நாடுகளிலும் உள்ளனர். எல்லா மொழிகளிலும் உள்ளனர். முதலில் நம் மொழியில் நம் அறிஞர்கள் கூறியுள்ள அரும் பெருங் கருத்துக்களை அறிந்து கொண்டால் தான் பிற நாட்டு அறிஞர்கள் கூறும் கருத்துக்களை எளிதில் ஆய்ந்து நல்லனவற்றை ஏற்றுக் கொள்ளும் திறன் உண்டாகும்.

2. மேற்கோள் அகராதி : பொருள் வரிசையில் (Dictionary of Quotations : Subjectwise)

ஒவ்வொரு தலைப்பின் கீழும் வெவ்வேறு காலத்தில் வாழ்ந்த அறிஞர்கள், கவிஞர்கள், உரையாசிரியர்கள் முதலியவர்கள் வெளியிட்ட அரிய கருத்துக்கள் அகரவரிசையில் தொகுத்துத்தரப் பெற்றுள்ளன மாணவர்களுக்கும், சொற்பொழிவாளர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும் மேற்குறித்த இரணடு அகராதிகளும் வேண்டியபோது கைகொடுக்கும் நண்பர்களைப் போலப் பயன்படும்

3. சிற்றிலக்கிய அகராதி (Dictionary of minor literary Works)

தமிழில் உள்ள சிற்றிலக்கியங்களைத் தொண்ணூற்றுறு பிரபந்தங்களாக வரையறை செய்து பாட்டியல் நூல்கள் கூறுகின்றன. ஆனால் இப்போது முந்நூறுக்கும் மேற்பட்ட சிற்றிலக்கியங்கள் உள்ளன. இவை தோன்றிய வரலாறு, இவற்றின் சிறப்புக்கள், இவற்றைப் பற்றிய திறனாய்வுகள்' இவற்றின் காலம் முதலியன அகரவரிசையில் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன.

புதிய இலக்கியங்களைப் படைப் பார்க்கும் பழைய இலக்கியங்களைப் பயில்வார்க்கும் இஃது ஓர் இன்றியமையாத பார்வை நூல்.

4 அறிவுரை அகராதி (Dictionary of Do's and Do n'ts)

தமிழில் உள்ள நீதி நூல்களிலும், காப்பியங்களிலும், சிற்றிலக்கியங்களிலும் பொதிந்து கிடக்கும் அறிவுறைகள் அகரவரிசையில் தொகுத்துக் கூறப் பெற்றுள்ளன. இவ்வுலகில் நல் வாழ்வு வாழ்பவருக்கு இந்நூல் உற்ற துணைவனாக விளங்கும்.

5. நீதிமொழிக் களஞ்சியம்
(Encyclopaedia of Maxins and Wise Sayings)

தமிழ் இலக்கியங்களில் உள்ள நீதி மொழிகள் அகர வரிசையில் கொடுக்கப் பெற்றுள்ளன. அறிவுரைகளைப் போலவே நீதிமொழிகளும் உலகத்து இன்ப வாழ்வுக்கு இன்றியமையாதவை.

6. உபதேச அகராதி (Dictionary of Religions Teachings)

வெவ்வேறு சமய நூல்களிற் காணப்பெறும் பொதுவான உபதேசங்கள் யாவும் தேர்ந்தெடுக்கப் பெற்று எல்லாச் சமயத்தவர்க்கும் பயன்படும் வண்ணம் தொகுக்கப் பெற்றுள்ளன. சமயத்தலைவர்கள், சமய அறிஞர்கள், தெய்வ அருள் பெற்ற அருளாளர்களின் உபதேசங்களை அறிந்து ஆன்மீக ஒளி பெற விரும்புபவர்கள் இந்நூலை உயிர்த்துணையாகக் கொள்ளலாம்

7. உலகியல் உண்மைகள் (Facts of Life)

'He is a fool who does not learn from others' என்பது ஆங்கிலப் பழமொழி. பிறருடைய பட்டறிவுகளிலிருந்து பாடங் கற்றுக் கொண்டு நம் வாழ்க்கையைச் செவ்விதின் அமைத்துக் கொளவதே அறிவுடமை, அறிஞர்கள் தங்கள் கூர்த்த மதி நலத்தால் ஆய்ந்து கூறிய உலகியல் உண்மைகள் இந்நூலில் அகரவரிசைப் பொருள் தலைப்புக்களில் தரப் பட்டுள்ளன.

8. கற்பனைக்களஞ்சியம் (Encyclopaedia of Imagination)

கற்பனையில்லாதவர்கள் கவிஞரல்லர். கம்பர் கற்பனைக் கலை கைவரப் பெற்றவர். சிவப்பிரகாச சுவாமிகள் 'கற்பனைக் களஞ்சியம்' என்றே அழைக்கப் பெறுகிறார். இலக்கிய இன்பத்துள் கற்பனையின்பம் தனிச்சிறப்பு மிக்கது.

தமிழ் இலக்கியங்களில் காணப்பெறும் கற்பனைச் சுவை மிக்க பகுதிகள் அகரவரிசைத் தலைப்புகளில் தரப்பட்டுள்ளன.

9. இலக்கியத்தில் நகைச்சுவை
(Wit and Humour in Literature)

கவலைக்கு மாமருந்து நகைச்சுவை. சிரிக்கத் தெரியாதவன் உலகில் வாழத் 'தகுதியில்லாதவன் என்று சேக்சுபியர் கூறுகிறார். பத்திரிகையில் காணப்பெறும் நகைச்சுவைத் துணுக்குகளை விட இலக்கியங்களில் காணப்பெறும் நகைச்சுவை நிலைபேறுடையவை. நினைக்குந்தோறும் இன்பம் நிகழ்த்துபவை.

நுட்பமான இலக்கிய நகைச்சுவையைத் துய்ப்பவருக்கு ஓரளவு இலக்கியப் பயிற்சி தேவை.

10 இலக்கிய நடை (Literary Style)

தமிழ் இலக்கிய நடையின் வேறுபாடுகளையும், தனிச் சிறப்புக்களையும், பொதுப் பண்புகளையும் விளக்கிக் கூறும் ஆராய்ச்சி நூல்.

11. நடைஅகராதி : (Dictionary of Styles)

சாதாரண நடை எது நல்ல நடை எது என்று அறிந்து கொள்பவர்க்கும், சாதாரண உரைநடை எது இலக்கிய உரை நடை எது என்று அறிந்து கொள்பவர்க்கும் பயன்படக் கூடிய இந்நூலில் இருவகை நடையையும் விளக்கும்

சொற்றொடர்கள் ஒப்பீட்டாய்வுக்காக அகர வரிசையில் தரப்பெற்றுள்ளன.

12. திறனாய்வுச் சொல்லகராதி
(Dictionary of terms of Literary Criticism)

மேலைநாடுகளில் வெகுவாக முன்னேறியிருக்கும் திறனாய்வுக் கலை மெல்லத் மெல்லத் தமிழ்நாட்டில் வேரூன்றித் தழைத்து வருகிறது. மேனாட்டுத் திறனாய்வு நூல்கள் தமிழில் உள்ள திறனாய்வு நூல்கள் இவற்றிலிருந்து தொகுக்கப் பெற்ற திறனாய்வுச் சொற்களின் அகராதி இது.

திறனாய்வுக்கலையின் சாரமான கருத்துக்களைக் குறைந்த நேரத்தில் அறிந்து கொள்ள இந்நூல் உதவும்.

13. உருவக்காட்சி அகராதி (Dictionary of Imageries)

இலக்கியங்களில் காணப்படும் உவமை, உருவகம் முதலிய அணிகளில் உருவக்காட்சிகள் உள்ளன. அணிகள் இல்லாமலேயே உருவக்காட்சிகள் படைக்கப் பெறுதலும் உண்டு. கவிஞர்களின் உள்ளத்தில் மலர்ந்த காட்சிகள் சொல்லோவியமாக வெளிப்படுவதையே உருவக்காட்சி என்கிறோம். மனத்தினால் மட்டுமன்றி ஐம்பொறிகளாலும் உணரப்படும் வர்ணனைக் காட்சிகள் உருவக் காட்சிகளாகும்.

தமிழ் இலக்கியங்களில் உள்ள பல்லாயிரம் உருவக் காட்சிகள் தொகுத்து அகரவரிசையில் தரப்பட்டுள்ளன.

14. புராண அகராதி (Dictionary of Puranic Characters and themes)

தமிழில் உள்ள புராணங்களில் வரும் செய்திகள், புகழ் பெற்ற புராணப் பாத்திரங்கள், நிகழ்ச்சிகள், தத்துவங்கள் முதலியன தொகுத்துத் தரப்படுகின்றன

இக்காலத்தில் புராணங்களைப் படிப்போர் தொகை குறைவு இனிமேல் பழைய புராணங்களைத் திரும்ப

அச்சிடுவார்களா என்பது ஐயமே. ஆனல் புராணங்களின் மூலம் ஓரளவு இலக்கிய இன்பம், சில படிப்பினைகளையும், பல நீதிகளையும் உணரலாம். புராணங்களில் உள்ள சாரமான கருத்துக்கள் யாவும் இவ்வகராதியில் திரட்டித் தரப்படு கின்றன.

15. இலக்கியத்தில் உட்பொருள்கள் (Inner meaning in Literature)

கவிஞர்கள் தாங்கள் பாடும் பாடல்கள் இரண்டுஅல்லது மூன்று பொருள்கள் கூட மறைந்திருக்குமாறு பாடல்களை இயற்றியுள்ளனர். மறைந்த பொருள்களை உணர்வது புதை யல் எடுப்பது போலப் பயனும் இன்பமும் தரவல்லது. பாடல்களில் மேற்போக்காகச் சொல்லுக்குச் சொல் ஏற் படும் பொருளேயன்றி ஆழ்ந்த உட்பொருள்களும் அமைந் திருப்பதைத் தொல் காப்பியர் உள்ளுறை, இறைச்சி முதலிய சொற்களால் குறித்துள்ளார். வடமொழியினர் 'தொனிப் பொருள்' என்பர்.

நுட்பமான இலக்கிய இன்பங்கள் உட் பொருள்களில் தான் அமைந்துள்ளன. பழுத்த இலக்கியப் பயிற்சி உடை யாரே உட்பொருள்கள் அமைய எழுத முடியும். அது போலவே நிறைந்த இலக்கிய பயிற்சி உடையோரே அவற்றை உள்ளவாறு உணரமுடியும் ஆங்கிலத்தில் உட் பொருள்களை Inner meaning, Suggestion, deeper meaning, ellegors முதலிய சொற்களால் குறிப்பர்.

16 ஒருபொருட் பன்மொழி விளக்கங்கள் (Evaluation of Nuances in the meanings of Synonyms)

எந்த இருசொல்லும் எல்லா இடங்களிலும், எல்லாக் காலங்களிலும் சரிசமமான பொருளைப் பெற்றிருப்பதில்லை ஏதாவது ஓர் இடத்தில் அல்லது காலப்போக்கில் நுட்பமான பொருள் வேறுபாடுகளைப் பெற்றுவிடுகின்றன. இரு சொற்கள் முற்றிலும் எப்போதும் ஒருபொருளையே தரு

மானுல் ஒருமொழியில் ஒரு சொல்லுக்குப் பதில் இரு சொற்கள் மிகையாக இருப்பதாகக் கருதப்படும். ஆனுல் உண்மையில் முற்றிலும் ஒப்புடைய பொருளைக் குறிக்கும்சொற்களும் இடம், காலம், வழங்குபவரின் இயல்பு, கேட்போரின் இயல்பு குரல் அழுத்தம் முதலிய பல காரணங்களில் நுட்பமாகச் சிறிது மாறுபட்ட பொருளைத் தந்து விடும். ஆதலின் ஒரு பொருட் பன்மொழிகள் மேலோட்டமாக ஒரு பொருளைக் குறிக்கும் சொற்களாயினும் உண்மையில் நுட்ப வேறுபாடுகளைப் பெற்றுள்ளன என்பதைக் காட்டுவதற்காகவே இப்பொருள் விளக்க அகராதி இயற்றப்பெற்றுள்ளது இலக்கண உரையாசிரியர்கள் ஆங்காங்கே ஒருபொருட் பன்மொழிகளில் உள்ள நுட்பங்களைச் சுட்டிக்காட்டிச் சென்றுள்ளனர். தமிழ் இலக்கியப் பரப்பு முழுவதையும் ஓரளவு கண்ட பேராசிரியர் மு. ச. சிவம் அவர்கள் சொற்களின் பொருள் நுட்பங்களையெல்லாம் கூர்ந்து நோக்கி எடுத்துக் காட்டுக்களுடன் தெளிவு படுத்தியுள்ளார்.

கருத்துக்களை மிகத் தெளிவாகவும் திட்டமாகவும் தெரிவிக்க விரும்புவோர்க்கு இந்நூல் இன்றியமையாத துணை நூலாகும் மாணவர்கள் கற்றுப் பயனடைய வேண்டிய நூல்.

17. பழமொழி விளக்கங்கள் (Proverbs explained)

பழமொழிகளை எப்படிப் பயன்படுத்துவது என்பதையும் பழமொழிகளின் விரிவான பொருள்கள் இவை என்பதையும் இந்நூல் தெளிவாகக் கூறுகிறது. அறிஞர்கள் மட்டுமின்றி பாமர மக்களும் தங்கள் பட்டறிவுகளைப் பழமொழிகளாக ஆக்கித் தந்துள்ளனர். பழமொழிகள் யாவும் மாந்தர் தம் பட்டறிவின் பிரிவுகள் எனலாம் பழமொழிகளுக்குரிய விளக்கங்களை மாணவர் அறியின் தங்கள் கட்டுரைகளில் ஏற்ற இடங்களில் பழமொழிகளை மேற்கோள்களாக காட்டிக் கட்டுரைகளைச் சுவையும் பயனும் மிக்கவையாகச் செய்வர்.

18. மெய்யுணர்வு விளக்கங்கள் ((Puranic themes and symbols explained)

புராணங்களிலும் இலக்கியங்களிலும் காணப்பெறும் தத்துவங்களும், குறிப்புக்களும் தெளிவாக விளக்கப் பெறுகின்றன.

IX ஆராய்ச்சி நூல்கள்

பேராசிரியர் மு. ச. சிவம் அவர்கள் மாணவப் பருவத்திலேயே பல ஆராய்ச்சிப் பரிசுகள் பெற்றவர் என்பதை இந் நூலின் முற்பகுதியில் அறிந்தோம். ஆராய்ச்சி மனப் பான்மையைப் பட்டப்படிப்புக்கு பின்னரும் வளர்த்துக் கொண்டார், பல புதிய ஆராய்ச்சி நூல்களைப் படைத் துள்ளார்.

1. குறிஞ்சிக்கலி பாடியவர் கபிலரா?
(Is Kapilar the author of Kurinchik Kali?)

பல ஆண்டுகள் ஆய்ந்து ஒப்பிட்டுப் பார்த்து மற்ற சங்க இலக்கியங்களில் உள்ள பாடல்களைப் பாடிய கபிலர் வேறு, குறிஞ்சிக்கலி பாடிய கபிலர் வேறு என்பது 40 சான்று களுடன் நிறுவப்படுகிறது.

ஒரே புலவர் பெயரில் பல நூல்கள் இருந்ததால் அந்நூல் களின் நடைகள் மிக்க வேறுபாடு கொண்டிருப்பின், பாடிய வர்கள் வெவ்வேறான புலவர்களாயிருக்கக் கூடும் என்று ஐயுற இடம் ஏற்படும். மொழியியல், திறனாய்வு அடிப்படை யில் ஆய்வு நடத்தினால் உண்மை புலப்படாமல் போகாது. உண்மையில் ஆராய்ச்சிகள் யாவும் உண்மையை நோக்கிப் பயணம் செய்யும் வண்டிகளே.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் எம்.லிட். பட்டம் பெறுவதற்காகச் செய்யப்பெற்ற ஆராய்ச்சி இது. திறனாய்வு மனப்பான்மை வளராத புலவர்களில் சிலர் இன்னும் இரு

வரும் ஒருவரே என்று விடாப்பிடியாய்க் கூறிக் கொண்டிருக்கிறார்கள். குறிஞ்சித்திணையைப் பாடுவதில் வல்லவர் என்ற பெயர்பெற்று விட்டதால் குறிஞ்சிக் கலியையும் கபிலரே பாடியிருப்பார் என்று கட்டிவிடப் பெற்ற கதையை உண்மையான பலபேர் நம்பியிருந்தனர். இந்நூல் பலருடைய சிந்தனைக் கதவுகளைத் திறக்கவல்லது. உண்மை என்னும் இறைவன் வீற்றிருக்கும் கருவறைக்கு அழைத்துச் செல்ல வல்லது.

2. தமிழும் உலக மொழிகளும் (Tamil and the world's Chief Languages)

இருபத்துநான்காண்டுகளுக்கு முன்பு இந்தத் தலைப்பில் பேராசிரியர் சிவம் அவர்கள் அண்ணாமலைப்பல்கலைக் கழகத் தமிழ் சிறப்பு வகுப்பு மாணவர்களின் ஆய்வுக் குழுவில் இந்த தலைப்பில் ஒரு நீண்ட கட்டுரையைப் படித்தார். 18 ஆண்டுகளுக்கு முன்பு 'செந்தமிழ்ச் செல்வி'யில் இந்தத் தலைப்பில் சில கட்டுரைகள் எழுதி வெளியிட்டார். பல மொழிகளின் அறிவைப் பெற்ற இவர் உலகத்துப் பழமொழிகளைப் பற்றி வெளி வந்துள்ள நூல்களைக் கற்றுத் தமிழுக்கும் உலக மொழிகளுக்குமுள்ள உறவுகளையும் வேறுபாறுபாடுகளையும் இந்நூலில் காட்டியுள்ளார்.

உலக மொழிகளின் ஒலியமைப்பு, இலக்கணம், சொற்றொடரமைப்பு, சொல்லாட்சி, சொல்வளம், பொருள்வளம் முதலியவற்றைத் தமிழுடன் ஒப்பிட்டுக் காட்டி தமிழின் அமைப்புச் சிறப்புக்களையும், இலக்கணச் சிறப்பையும், சொல் வளங்களையும், பொருள் வளங்களையும் எல்லோரும் எளிதில் உணர்ந்து கொள்ளும் வண்ணம் எழுதியுள்ளார்.

உலக மொழியரங்கில் தமிழுக்குத் தனியிடம் இதுவரை கிடைக்காததை உணர்ந்து தனியிடம் பெற வேண்டும் என்ற நோக்கத்தைத் தமிழர்கள் உணரச் செய்யவல்லது இந்நூல். பொதுவாக உலக மொழிகளின் தன்மைகளை அறிந்து கொள்ள உதவும் உயரிய ஒப்பீட்டு நூல்.

அண்ணாமலைப் பல்கலைக் கழக மொழியியல் துறை இயக்குநர் டாக்டர் ச. அகத்தியலிங்கம் அவர்கள் உலக மொழிகள்' என்ற தலைப்பில் பல அரிய நூல்களை வெளியிட்டுள்ளார் அந்நூல்களிலிருந்தும் சிற்சில கருத்துக்களை மேற்கோள்களாக எடுத்துக் கொள்ளப் பெற்றன.

3. தமிழும் வடமொழியும் (Tamil and Sanskirit)

திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த தமிழும், இந்தோ-ஐரோப்பிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த சமசுக்கிருதம் எனப்படும் வடமொழியும் எப்படியோ பல்லாயிரம் ஆண்டுகளாக உறவாடிக் கொண்டு வந்துள்ளன. வடசொற்களை அறவே நீக்கி ஒழித்து விட வேண்டும் என்று ஒரு சாரரும் 'வடசொற்களை' ஓரளவு கவர்ந்து கொள்வதில் தவறில்லை என்று இணங்கிப் பேசும் ஒரு சாராரும் கருதுகின்றனர், இரு சாரருக்குமிடையே பல நூறாண்டுகளுக்கு முன்பிருந்தே இது பற்றி மோதல் ஏற்பட்டு வந்துள்ளது. அஃது இன்னும் தீர்ந்த பாடில்லை. தனித் தமிழ் இயக்கம் முழு வெற்றி பெறின் இதற்கு ஒரு முடிவு ஏற்படும்.

எனினும் வடமொழியின் இயல்புகள், வளம், சொற்றொடர் அமைப்பு முதலியனவற்றைத் தமிழோடு ஒப்பிட்டுக் காட்டும் இந்நூல் இரு மொழிகளின் இயல்புகளையும் சிறப்புக்களையும் அறிந்து கொள்பவர்க்கு இன்றியமையாத கைந்நூலாகும்.

3- தமிழும் திராவிட மொழிகளும் (Tamil and Dravidian Languages)

தமிழினின்று பிற திராவிட மொழிகள் பிரிந்தன என்று கூறுவோரும் உளர். மொழியியலார் இக்கருத்தை எவ்வாறு ஏற்றுக் கொள்கின்றனர் என்பது இந்நூலைப் படித்தால் புலனாகும்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மொழிகளுக்குள் தமிழ் தலைமையும், தனிச்சிறப்பும் வாய்ந்த வகைகளைவிளக்குகிறது இந்நூல்.

4. **தமிழும் இந்தியும்** (Tamil and Hindi)

வடமொழியைப் போலவே இந்தியைத் தமிழ்நாட்டின் ஒரு பிரிவினர் கடுமையாகத் தூற்றுகின்றனர், ஒரு பிரிவினர் ஆர்வத்துடன் கற்றுப் போற்றுகின்றனர். விவாதங்களுக் குரிய செய்திகளை சுட்டிக் காட்டி இரு மொழிகளையும் பல கண்ணோட்டங்களில் ஒப்பிட்டுப் பார்த்து இரண்டின் தனிச் சிறப்புக்களையும் எடுத்து இயம்புகிறது இந்நூல்.

5. **மொழியியல் உண்மைகள்** (Facts of Linguistics)

மொழியியல் ஒரு தனி அறிவியலாகவும், கலையாகவும் மிக விரைவாக வளர்ந்து வருகிறது. நம் நாட்டில் பல மொழியியற் கழகங்கள் தோன்றியதன் பயனாக மொழியிய லறிவு நாடெங்கும் பரவி வருகின்றது. ஆயினும் மொழியியல் என்பது நம் நாட்டவருக்கு முற்றிலும் புதியதன்று. பழைய இலக்கணங்களும், உரையாசிரியர்களும் கூறியுள்ள பல கருத் துக்களை மொழியியலார் ஏற்றுக் கொண்டுள்ளனர், சில கருத்துக்களை ஏற்க மறுக்கின்றனர். ஏன் என்பது இந்நூலைப் படித்தவர்களுக்குப் புரியும்.

பொதுவாக மொழியியல் உணர்த்தும் பல உண்மைகளை யறிந்தால் பல சிக்கல்கள் தீரும்.

6. **இலக்கண உரையாசிரியர்களும் மொழியியலும்** (Ling wistics and Commentators of Grammetical works)

இக்கால மொழியியல் கருத்தக்களை பழங்கால இலக்கண உரையாசிரியர்கள் எப்படி வெளிப்படுத்தினர், மொழியிய லறிவு அவர்களிடம் எவ்வாறு விளங்கியது என்பவற்றை எடுத்துக் காட்டுக்களுடன் ஆய்ந்து விளக்குவது இந்நூல்.

7 வாசகமும் கோவையும் (A Comparative Study of Tiruvaɔakam and Tirukkovaiyar)

திருவாசகமும் திருகோவையாரும் மாணிக்கவாசகர் ஒருவராலேயே இயற்றப் பெற்றன என்ற கருத்து மக்கள் உள்ளத்தில் ஆழப்பதிந்து விட்ட கருத்து. ஆனல் 'திலகத் துக்கு உருகார் ஒரு வாசகத்துக்கு உருகார்' என்ற பழமொழி அவரே இயற்றியதாகக் கூறப்படும் திருக்கோவையாருக்குப் பொருந்துமா? திருக்கோவையார் இலக்கண நூலாதலின் திருவாசகம் போல நெகிழ்ச்சி இல்லை என்பர்.

திருவாசகத்தின் நடையைத் திருக்கோவையாரின் நடையுடன் ஒப்பிட்டுக் கூறும் இந்நூல் பல உண்மைகளை வெளிப்படுத்துகிறது.

8. தமிழ்ப் பண்பாட்டின் தனிச் சிறப்புக்கள் (Special features of Tamil culture)

இலக்கியத்திலிருந்தும் நடைமுறையிலிருந்தும் வரலாற்றிலிருந்தும் தமிழ்ப் பண்பாட்டின் தனிச் சிறப்புக்களை எடுத்துக் கூறுவது இந்நூல். மிகப் பரந்த பொருளைத் தரும் 'பண்பாடு' என்ற சொல் ஒரு சிறப்புப் பொருளிலேயே இங்கு வழங்கப்படுகிறது.

தமிழர்களின் தனிச் சிறப்பை உலகிற்கு உணர்த்தும் நூல்களுள் இதுவும் ஒன்று.

9. திராவிட மொழிகளில் பண்பாடு ஒரு ஒப்பீட்டாய்வு (A Comparative sludy of culturers in Dravidian Languages)

திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணத்தை உலகம் வியக்கும் வண்ணம் எழுதினர் பேரறிஞர் கால்டுவெல் அவர்கள். திராவிட இனத்திற்கென அமைந்த பண்பாடுகள் திராவிட மொழிகளின் வாயிலாக எவ்வாறு வெளிப்படுகின்றன என்று மொழியியல் அடிப்படையில் ஆய்வது இந்நூல்.

10 இலக்கியத்தில் இன்பமகளிர்
(Harlots in Tamil Literature)

தமிழ் இலக்கியங்களில் இழையோடிக் கொண்டிருக்கும் சமுதாயச் சிக்கலுக்குரிய பரத்தையர் பற்றிய பல செய்திகள் ஒருங்கு திரட்டப்பெற்று, ஆய்ந்து, வகைப்படுத்திக் காட்டப் பெற்றுள்ளன.

வெவ்வேறு காலங்களில் பரத்தையரின் நிலை குமுகாயத்தில் எவ்வாறு இருந்தது என்பதை அறிய விழைவார்க்கு இந்நூல் உதவகூடியது. வயது வந்தவர்கள் மட்டுமே படிக்கக் கூடிய நூல்.

11 எளிதில் ஆங்கிலங் கற்பது எப்படி?
(How to learn English without tears)

நம் நாட்டில் குழந்தைகளுக்கு ஆங்கிலம் கற்றுத்தரும் 'நர்சரி' பள்ளிகள் புற்றீசலைப் போலப் பெருகி வருகின்றன. அவற்றால் முழுப்பயன் உண்டா என்று ஆய்ந்து பார்க்க வேண்டும்.

உலகமொழியான ஆங்கிலத்தைத் தாய்மொழியல்லாதார் கற்பதற்குரிய வகைகளைப் பற்றி ஆங்கிலத்தில் அளவில்லாத நூல்கள் உள்ளன. ஆங்கில மொழியின் அமைப்பு, மக்களின் பண்பாடு, வரலாறு ஆகியவற்றை அறிந்தவர்களே ஆங்கிலத்தை எளிதில் கற்றுக் கற்றகல்வியை நீடித்து நிலை பெறச் செய்து கொள்ள முடியும் என்பது போன்ற பல ஆய்வுக் கருத்துக்களை விளக்கி ஆங்கிலத்தை எளிதில் கற்கும் வழிகளை வகுத்துக் கூறுகிறது.

12 ஆங்கிலத்தின் அழகுகள் (Beauties of English)

உலகமொழியாக விளங்கும் ஆங்கிலம் அதற்குரிய பல தகுதிகளைப் பெற்றிருக்கிறது என்பதைப் பலரும் அறிவர். ஆங்கிலம் தனக்கேயுரிய பல சொல்லழகு, பொருளழகு

அமைப்பழகு முதலியவற்றைக் கொண்டிருப்பதைத் தொகுத்து இந்நூல் விளங்கச் செய்கிறது.

13. பல மொழிகளைக் கற்பதன் பயன்கள் (Benefits of learning many languages)

தாய் மொழியை மட்டும் அறிந்தவன் அறிவில் முழு மனிதன் ஆகான். மூவாயிரத்துக்கு மேற்பட்ட மொழிகள் பேசப்படும் இப் பரந்த உலகில் ஒருவன் தன் தாய் மொழியை மட்டுமே பேசுவதாயின் அவன் மற்றவர்களிடம் தொடர்பு கொள்ள முடியாது பல பயன்களை இழக்கின்றான்.

உலகின் ஒவ்வொரு மொழிக்கும் ஒவ்வொரு சிறப்பு உண்டு என்று மொழியியல் கூறுகிறது. ஒவ்வொரு மொழியைக் கற்கும் போதும் கற்பவரின் உள்ளத்தில் புதியதோர் உலகம் உதயமாகிறது. ஒவ்வொரு மொழியும் ஒவ்வோர் தனியுலகத்தைத் தன்னுள் அடக்கிக் கொள்கிறது பல மொழிகளைக் கற்பவன் பல பிறவிகளில் எய்தும் பயன்களை ஒரே பிறவியில் பெறுகிறான் பல மொழிகளையுங் கற்க வேண்டும் என்ற கருத்தையே வள்ளுவர் மறைமுகமாக,

> 'யாதானும் நாடாமல் ஊராமால் என்னொருவன்
> சாந்துணையுங் கல்லாத வாறு'

என்று குறிப்பிடுகிறார்.

பல மொழிகளைக் கற்பதால் ஏற்படும் பல பயன்களையும் இந்நூல் எடுத்துக் காட்டுக்களுடன் விளக்குகிறது. அதே நேரத்தில் பிற மொழிகளைக் கல்லாதவர்க்கு ஏற்படும் இழப்புக்களும் சேர்த்துக் கூறப்படுகின்றன.

14. தமிழில் பொருளியல் ஆய்வு (Tamil Semantics)

'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' என்றார் தொல்காப்பியர். ஆனால் ஒரு மொழியில் சொற்களுக்குப்

பொருள்கள் ஏற்படுவதும், மாறுவதும், வழக்கு வீழ்வதும், மீண்டும் புத்துயிர் பெறுவதும் விந்தையான நிகழ்ச்சிகள். மாந்தர்கள் பிறந்து, வளர்ந்து இறப்பது போலவே ஒரு மொழியில் பல சொற்கள் பிறந்து வளர்ந்து மறைந்து விடுகின்றன. பொருளியல் கூறுகள் பற்றிப் பல சுவை யான கட்டுரைகளைப் படைத்துள்ளார் பேராசிரியர் அவர்கள்.

X பிற உரைநடை நூல்கள்

அகராதிகளைத் தொகுப்பதையே தம் வாழ்நாட் பணியெனக் கொண்டுஉழைத்து வரும் பேராசிரியர் சிவம் அவர்கள் தம் ஆராய்ச்சியின் சாரமான கருத்துக்களை உரை நடை நூல்கள் வாயிலாக வெளியிட்டு வருகிறார்.

1. விநாயகர் அருட் பெருமை
(The Grace and Greatness of Lord Vinayaka)

விநாயகரைப் பற்றிய தொடர்களைத் கொடுத்து 'விநாயகர் அருட் செல்வம்' வெளியிட்ட மு. ச. சிவம் அவர் கள் விநாயகப் பெருமானின் தத்துவப் பெருமைகளையும், அருட் பெருமைகளையும் அன்பர்கள் உணர்ந்தவாறு எடுத்துக் காட்டியுள்ளார். விநாயகரைப் பற்றிப் பாடிய பலருடைய உள்ளத்தில் தோன்றிய கருத்துக்களின் பதிவாக இந்நூல் இலங்குகிறது. இவ்வாறே முருகன் அருட்பெருமை, தேவி அருட்பெருமை, சிவபிரான் அருட் பெருமை, திருமால் அருட்பெருமை முதலிய நூல்களையும் இயற்றியுள்ளார். அகராதி வடிவத்தில் காணப்பெறும் கருத்துக்கள் வெவ்வேறு தலைப்புகளில் உரைநடையில் இந்நூல்களாக வடிவம் பெற்றுள்ளன.

2. பெண்வருணனைகள் (Descriptions of Woman's Beauty

மனிதன் வாழ்நாள் முழுவதும் அழகான பெண்களின் கவர்ச்சி வலையில் ஆட்பட்டு விடுகிறான். அழகான பெண்

களைப் பற்றிக் கவிஞர்கள் தங்களுக்கே உரிய கற்பனைச் சுவை பட வருணனைகள் செய்திருப்பது படிப்போரின் ஐம்புலன் களுக்கும் விருந்தாக அமைந்துள்ளது. ஏனெனில் 'ஐம்புலன் களும் ஒண்டொடி கண்ணே உள'. கவிஞர்களின் கற்பனை மகளிர் நான்முகன் படைத்த உண்மையான மகளிரை விட அழகில் சிறந்தவர்கள்; அழியா அழகுடையவர்கள்.

வீண் பெருமைக்காக அல்லது ஏற்ற நிலைக்காக அல்லது பேடிமையால் பெண்ணை வெறுக்கின்றவர்கள் கூடப் பெண் இன்பத்தை வெறுப்பதில்லை. கவிஞர்களின் பெண் வருண னைகள் ஐம்பொறிகளாலும் பெண் இன்பம் பெற விழை வார்க்கு அளவில்லாத இலக்கிய இன்பம் நல்க வல்லன. ''கள்ளுக்கு இல்; காமத்துக்குண்டு'' என்று திருக்குறள் கூறு வது போலப் பெண் வருணனைகளைப் படித்தாலும் இன்பம், கேட்டாலும் இன்பம் நினைத்தாலும் இன்பம்!

3. **மறைமலையடிகளாரின் மாட்சிகள்** (The greatness of Maraimalai Adigalar)

மறைமலையடிகளாரின் நாட் குறிப்புக்களையெல்லாம் படித்த மு. ச. சிவம் அவர்கள் அடிகளாரின் மாண்புகளை யெல்லாம் நெஞ்சைத்தை தொட்டறிவது போல் அறிந்து தலைப்புக்களில் அடிகளாரின் அரிய பண்புகளையும் பற்பல ஆற்றல்களையும் வியந்துரைக்கின்றார்.

XI மொழி பெயர்ப்பு நூல்கள்

ஆங்கிலத்திலும் தமிழிலும் இணையான அறிவு வாய்ந்த சிவம் அவர்கள் மொழிபெயர்ப்புக் கலையிலும் திறம் பெற்று விளங்குகிறார் ஈரோட்டில் பெரியார் நூற்றாண்டு விழாத் தொடக்கத்தில் இரு அறிஞர்களின் பேச்சுக்களை நல்ல தமிழில் மொழி பெயர்த்தது போலவே அதற்கு ஓராண்டு முன்பு பவானி குமாரபாளையம் என்ற இரு ஊர்களையும் இணைக்கும் புதிய காவிரிப் பாலத்தைத் திறந்து வைத்துப்

பேசிய நடுவண் அமைச்சர் மாண்புமிகு தில்லான் அவர்களின் பேச்சையும் மொழி பெயர்த்துப் பலருடைய பாராட்டுதலுக்கும் உரியவரானார்.

மேற்கண்ட இவருடைய நான்கு மொழிபெயர்ப்பு நூல்களும் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியிடுகளாகப் பல ஆண்டுகளுக்கு முன்பே வெளியிடப் பெற்றவை.

1. மருந்துவர் மகள் (Walter Scott's "Surgeon's Daughter")

உலகப் புகழ் பெற்ற வரலாற்றுப் புதின ஆசிரியரான வால்டர் ஸ்காட் அவர்கள் ஐதர் அலி, திப்பு சுல்தான் முதலியவர்களுடைய வரலாற்றை ஓரளவு தொடர்பு படுத்தி இந்தியாவைப் பற்றிய குறிப்புக்கள் மிகுதியாக வரச் செய்த புதினத்தை நல்ல தமிழில் மொழி பெயர்த்தார். சிவம் அவர்களின் மொழி பெயர்ப்புக் கலையின் கன்னி முயற்சியான இந்நூல் கழகப் புலவர் திரு. பண்டித வித்வான் சங்குப் புலவர் அவர்களால் படித்துப் பார்த்து 'நல்ல தமிழ் நடை' என்று சான்று கொடுக்கப் பெற்றபின் வெளியிடப் பெற்றது.

2. எண்திசையும் சுற்றிவர எண்பதுநாள்

Jules verne's "Around the world in Eighty Days"

ஒரிரு நாட்களில் உலகத்தைச் சுற்றிவரும் வாய்ப்புக் கிடைத்துள்ளது இக்காலத்தவருக்கு. ஆனால் சென்ற நூற்றாண்டில் வானூர்தி வாய்ப்பு இல்லாத காலத்தில் ஒரு பிரஞ்சுகாரன் எண்பது நாட்களில் உலகத்தைச் சுற்றி வருவதாகப் பந்தயம் கட்டிப் புறப்பட்டு வழியில் எண்ணற்ற தடைகளை மீறிக் கடைசியில் புல்லரிக்கச் செய்யும் விறுவிறுப்பான முறையில் வெற்றி எய்துகிறான். இந்தப் புதினம் ஏற்கனவே திரைப்படமாக எடுக்கப் பெற்று உலகினருக்கு அறிமுகமானது

3. சைலசு மார்னா (Georg Eliot's 'Silas Marner')

குழந்தைப் பேறில்லாத, கஞ்சத்தனம் மிக்க ஒரு நெசவாளி ஒரு சிறு குழந்தையினால் எவ்வாறு மனமாற்றம்

அடைந்தான் என்பதை விளக்கும் இனிய கதையமைப்புக் கொண்ட ஆங்கில மூல நூல் குழந்தைகளுக்கும் புரியுமாறு எளிய தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது.

4. எதிர்காலக் கனவுகள் (Charles Dicken's Great Expectations)

நகைச்சுவை ததும்ப எழுதவல்ல சார்லசு டிக்கன்சு என்ற உலகப் புகழ் பெற்ற புதின ஆசிரியரின் சுவைமிக்க புதினத்தைச் சுவை குறையாதவாறு நல்ல தமிழில் மொழியாக்கஞ் செய்துள்ளார்.

XII தமிழ் ஆங்கில அகர வரிசைகள்

தமிழ் அகராதிகளைப் பல்லாண்டுகளாகத் தொகுத்துச் சலித்துப் பயன் ஒன்றும் பெறுமல் களைத்துப் போன சிவம் அவர்கள் தம் கவனத்தை ஆங்கில மொழியின் பக்கம் திருப்பி வியத்தகு இரு மொழி அகராதிகள் பலவற்றைத் தொகுத்துச் சாதனை புரிந்துள்ளார். இந்நூல்கள் யாவும் அச்சிடப் பெற்றுப் பரவும போது சிவம் அவர்களின் அரிய உழைப்பின் பயனை அடைந்தே தீருவார் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

1. வழங்கும் தமிழ்-ஆங்கில அகராதி (Dictionary of Current Tamil Tamil-English)

வழக்கில் பயின்று வரும் தமிழ்ச் சொற்களின் தொகுப்பான இந்நூலில் ஒவ்வொரு தமிழ்ச் சொல்லிற்கும் சரியான ஆங்கிலச் சொல் கொடுக்கப்பட்டுள்ளது.

புதிதாகத் தமிழ் கற்க விரும்பும் வெளிநாட்டினர்க்கும், வாழும் தமிழ் சொற்களுக்குச் சரியான ஆங்கிலச் சொற்களை அறிந்து கொள்ள விரும்பும் மாணவர்களுக்கும் இந்நூல் அருந்துணையாக விளங்கும்.

2. எதிர்ப்பத அகராதி (தமிழ்-ஆங்கிலம்) (Dictionary of Antonyms) (Tamil-English)

தமிழில் தனியாக எதிர்ப்பத அகராதியை வெளியிட்டுள்ள இவர் தமிழ்ச் சொற்களுக்கேற்ற ஆங்கிலச் சொற்களுடன் இவ்வகராதியை உருவாக்கியுள்ளார்.

3. தொடர் அகராதி (தமிழ் – ஆங்கிலம்)
(Dictionary of Phrases : Tamil - English)

தமிழில் வழங்கும் சாதாரணத் தொடர்களுள் ஐந்து இலட்சம் தொடர்கள்தொகுக்கப் பெற்று அவற்றிற்குச் சரியான ஆங்கிலச் சொற்கள் கொடுக்கப்பட்டுள்ளன. தமிழின் சொல்வளத்தைக் காட்டும் அகராதிகளுள் இதுவும் ஒன்று

4 உயர்தரத் தமிழ் ஆங்கில அகரவரிசை
(Advanced Tamil - English Dictionary)

ஒவ்வொரு தமிழ்ச் சொல்லுக்கும் பல ஆங்கிலச் சொற்கள் பொருளாய் அமைந்திருக்கும் தமிழ்ச் சொற்கள் பல ஆயிரம் கொண்டது இந்நூல். சொல்வளமிக்க ஆங்கிலத்திற்குத் துணையானது தமிழ் என்பதனை இதன் மூலமாகவும் அறியலாம்.

5 தமிழ் ஆங்கிலக் கருத்துச் செல்வங்கள்
(Parallels in Tamil - English)

தமிழில் மேற்கோளாகப் பயன்படுத்தப் பெறும் பல்லாயிரம் வாக்கியங்கள், பகுதிகளுக்கு இணையான கருத்துக்களுடைய வாக்கியங்கள் பகுதிகள் முதலியவற்றை அரும்பாடுபட்டுத் தொகுத்துள்ளார் பேராசிரியர் சிவம் அவர்கள்.

6. மரபுத் தொடர் அகராதி (ஆங்கிலம் - தமிழ்)
(Dictionary of Idioms : English - Tamil)

மரபுத் தொடர்களைப் பிறமொழிகளில் சொல்லுக்குச் சொல் மொழிபெயர்த்தால் பயன் ஒன்றும் இல்லை. தமிழில்

வழங்கும் மரபுச் சொற்களுக்கு இணையான ஆங்கில மரபுச் சொற்கள் பொருளாகத் தரப்பட்டுள்ளன.

7. **மொழியியல், இலக்கணச் சொல்லகராதி** (தமிழ்-ஆங்கிலம்) (Linguistic and Grammatical terms: (Tamil-English)

இலக்கணங்களிலும், மொழியியல் நூல்களும் பயின்று வரும் தமிழ்ச் சொற்களுக்கு ஏற்ற ஆங்கிலச் சொற்கள் இதன்கண் கொடுக்கப்பட்டுள்ளன

XIII ஆங்கிலம்–தமிழ் அகரவரிசைகள்

தமிழில் படித்த நூல்களைக் காட்டிலும் மிகுதியான ஆங்கில நூல்களைப் படித்துப் பின்வரும் ஆங்கிலத்-தமிழ் அகராதிகளை உருவாக்கியுள்ளார். இவற்றுள் சில ஆங்கிலத்தைத் தாய்மொழியாகக் கொண்டவர்களுடைய சிந்தனையில் எளிதில் தோன்ற இயலாதவை. காரணம், தாய்மொழியை எவரும் எளிதாகப் பேசிவிடுவதால் அம்மொழிச் சொற்களின் இயல்புகளைப் பற்றியெல்லாம் நின்று நிதானித்துச் சிந்திப்பதில்லை. பிறமொழியினர் ஒவ்வொரு எழுத்தையும், ஒலியையும், சொல்லையும், பொருளையும் பற்றிச் சிந்தித்தே கற்க வேண்டியுள்ளது.

1 (Dictionary of Nominal Phrases : (English - Tamil)
(பெயர்ச் சொற்றொடர் அகராதி : ஆங்கிலம் - தமிழ்)

பல ஆண்டுகளாக மனம் ஒன்றித் தொடர்ந்து ஆயிரக்கணக்கான ஆங்கில நூல்களைப் படித்துக் குறிப்பெடுத்து ஏறத்தாழப் பத்து இலட்சம் சாதாரணத் தொடர்களை ஆங்கிலத்தில் தொகுத்துள்ளார். இவருடைய சாதனைகளுள் இவ்வகராதியும் ஒன்று.

பெரும்பாலும் எல்ல ஆங்கிலத் தொடர்களுக்கும் தமிழில் தொடர்கள் இருப்பதறிந்து மகிழ்ந்த பேராசிரியர்

அவர்கள் தமிழ்உலகளாவி வளர்ந்த ஆங்கிலத்தைப்போலவே சொல்வளமிக்க மொழி என்பதனை இதன் மூலம் உலகு உணர்ந்து கொள்ளும் என்கிறார். இவ்வகராதியை வெளியிடப் பல இலட்ச உருபாக்கள் செலவாகுமாதலின் தமிழுக்கும் பெருமை தரும் இந்நூலை வெளியிட அரசு முன்வர வேண்டும் என்று வேண்டிக் கொள்கிறேன்.

2 (Dictionary of verbal phrases English - Tamil)
வினைச்சொற்றொடர் அகராதி (ஆங்கிலம் – தமிழ்)

முன்னதைப் போன்றே பெருமை தரத்தக்க இவ்வகராதியில் இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்ட வினைத்தொடர் ஆங்கிலத்திலும் அவற்றிற்குச் சரியான சொற்கள் தமிழிலும் தொகுக்கப் பெற்றுள்ளன.

பொதுவாகவே எல்லா அகராதிகளும் காலந்தோறும் வளர்ந்து வரக்கூடியவை. மேற்குறிப்பிட்டுள்ள இரு அகராதிகளும் நாள்தோறும் வளர்ந்து வருகின்றன.

3. Dictionary of Hyphened Compounds (English-Tamil)
இடைக் கோடிட்ட கூட்டுச் சொற்கள் (ஆங்கிலம்-தமிழ்)

சொற்களுக்கிடையே கோடுகள் இடும் பழக்கம் தமிழில் இல்லை. அதனால் தான் ஆங்கிலம் பயிலும் தமிழ் மாணவர்கள் கோடு இட வேண்டிய இடங்களில் இட மறந்து விடுகின்றனர், இடக் கூடாத இடங்களில் இட்டு விடுகின்றனர். இதனால் பொருள்மாறுபாடுகள் ஏற்படுவதை அவர்கள் கூர்ந்து நோக்குவதில்லை. கூட்டாகக்கோடில்லாமல் எழுதினால் ஒருபொருளும், இடைக் கோடிட்டு எழுதினால் வேறொரு பொருளும் தோன்றுகின்றன.

Walking Stick - நடை உதவு தடி
Walking Stick நடக்கும் தடி

அதாவது கோடிட்ட தடி நடப்பதில்லே, கோடிடாத தடி நடக்கத் தொடங்கிவிடுகிறது! ஆங்கிலம் பயிலும் தமிழ் மாணவர்கள் இந்த நுட்ப வேறுபாடறியாமல் தடுமாறுவதால் இந்த அகராதி தனியே தொகுக்கப் பெற்றுள்ளது. ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட கோடிட்ட சொற்கள் தொகுக்கப் பெற்றுள்ளன

4 Dictionary of Idioms (English - Tamil)
மரபுத் தொடர் அகராதி (ஆங்கிலம் - தமிழ்)

ஆங்கிலத்திலுள்ள பல்லாயிரம் மரபுத் தொடர்களுக்குச் சரியான தமிழ்ச் சொற்கள் அல்லது தொடர்கள் தரப் பெற்றுள்ளன.

5. Dictionary of Antonyms (English - Tamil)
எதிர்ப்பத அகராதி (ஆங்கிலம் - தமிழ்)

ஆங்கிலத்தில் உள்ள பத்தாயிரம் சொற்களுக்கு எதிர்ச் சொற்களும், இவற்றிற்கு பொருளான தமிழ்ச் சொற்களும் கொடுக்கப் பெற்றுள்ளன

6 Parallel Quotations (English - Tamil)
இணை மேற்கோள் அகராதி (ஆங்கிலம் - தமிழ்)

ஆங்கிலத்தில் மேற்கோளாகக் காட்டப்பெறும் அரிய கருத்தமைந்த, அழகிய தொடர்கள், வாக்கியங்கள், பகுதிகள் ஆகியவற்றிற்கு நேரான தமிழ்த் தொடர்கள் வாக்கியங்கள் பகுதிகள் கொடுக்கப் பெற்றுள்ளன

ஆங்கிலம் அறிந்தவனே அறிஞன், ஆங்கில மக்களே அறிவிற் குறைந்தவர்கள் என்ற தப்பெண்ணத்தை மாற்றி ஆங்கிலத்தில் உள்ள அறிய கருத்துக்களுக் கேற்ற நல்ல தமிழ் மேற்கோள்களும் உள்ளன என்பதை அனைவரும் அறியச் செய்ய இந்நூல் பயன்படும் இணைப்பகுதிகளை ஒப்பிட்டுப் படிக்கும்போது இணையற்ற இலக்கிய இன்பம் ஏற்படும்.

7 Dictionary of preposittonal idioms (English - Tamil)
பெயர் முன்னிலை மரபுத்தொடர் அகராதி (ஆங்கிலம் - தமிழ்)

சரியான பெயர் முன்னிலைச் சொற்களைப் பயன் படுத்தத் தெரிந்தவரும், பெயர் முன்னிலைச் சொற்களில் அமைந்த நூற்றுக்கனக்கான மரபுத் தொடர்களைப் புரிந்து கொண்டு பயன்படுத்தத் தெரிந்தவருமே ஆங்கிலத்தில் நல்ல புலமை வாய்ந்தவராகக் கருதப் பெறுவர். அதனால் ஆங்கிலம் பயிலும் மாணவர்களுக்கு இன்றியமையாத அகராதிகளுள் இதுவும் ஒன்று.

8 Dictionary of Linguistic and grammatical terms English – Tamil
மொழியியல் இலக்கணச் சொல்லகராதி (ஆங்கிலம் – தமிழ்)

வளர்ந்து வரு i மொழியியல் துறையிலும் , இலக்கணத்தி லும் ஆங்கிலத்தில் பயின்று வரும் பல்லாயிரஞ் சொற்களுக்கு நேரான தமிழ்ச் சொற்களுடன் கூடியது இந்நூல். ஆழ்ந்த மொழிப்பயிற்சி பெற விரும்புவார்க்கு இது மிக இன்றியமை யாதது.

9 Classified English - Tamil Dictionary
பல் பொருள் ஆங்கிலத்தமிழ் அகரவரிசை

1962 ஆம் ஆண்டு இவ்வகராதியைச் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் வெளியிட்டது மக்கட்பெயர்கள் தொழில்கள், வீடுகட்டும் பொருள்கள் முதலிய பற்பல தலைப்புகளின் கீழ் ஆங்கிலத்திலும் தமிழிலும் கலைச் சொற்கள் தொகுக்கப் பெற்றன.

XIV ஆங்கிலத்தில் ஆக்கியுள்ள நூல்கள்

1. A Short Account of Sangam Literature
(சங்க இலக்கியம் பற்றிய சிறு அறிமுகம்)

இச்சிறு நூல் 1961 இல் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினரால் வெளியிடப் பெற்றது. ஆங்கிலத்தில்

பேராசிரியர் எழுதிய முதல் சிறு நூல். ஆங்கிலத்தில் நூல்கள் கட்டுரைகள், எழுதுவதற்குப் பேருக்கம் அளித்து வந்த சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக ஆட்சியாளர் உயர்திரு வ. சுப்பையாபிள்ளை அவர்களை நன்றியுடன் நினைந்து போற்றுகிறார் பேராசிரியர் அவர்கள்.

2. Opera of Silappadikaram
(சிலப்பதிகாரம் - நாட்டிய நாடகம்)

1962 ஆம் ஆண்டில் இச்சிறு நூல் வெளியிடப்பெற்றது.

3 Dictionary of Alliterative and Rhythmic Phrases

தமிழில் அடுக்கு மொழியைத் தொகுத்து வெளியிட்ட பேராசிரியர் அவர்கள் ஆங்கிலத்திலும் ஏறத்தாழ ஐயாயிரம் அடுக்கு மொழிகளைத் தொகுத்துள்ளார். இவ்வகராதி வெளியிடப் பெற்றால் பேராசிரியரின் புகழும் பெருமையும் ஆங்கிலம் வழங்கும் நாடுகளில் எல்லாம் பரவும் என்பதில் ஐயமில்லை.

4 Dictonary of Beautiful Expressions

தமிழில் அழகுத் தொடர் அகராதியைத் தொகுப்பதற்கு ஊக்குணர்ச்சி தந்தது. அவரே முதலில் ஆங்கிலத்தில் தொகுத்த அந்த அகராதி தான் என்கிறார் பேராசிரியரி அவர்கள்.

5 Dictionary of Sentence - Introducers

ஆங்கிலத்தில் There, It முதலிய சொற்களைக் கொண்டு தொடங்கும் வாக்கியங்களை Impersonal Sentences என்பர். ஆங்கிலத்தில் எப்படி வாக்கியத்தைத் தொடங்கலாம் என்று சிந்தித்துக் கொண்டிருப்பவருக்கு வழிகாட்டியாய் அமைவது இந்நூல் இதுவும் அகர வரிசையில் தொகுக்கப்பெற்றுள்ளது.

ஆங்கிலத்திலும் தமிழிலும் இன்னும் இவை போன்ற அகராதிகள் பலவற்றைத் தொகுக்கும் திட்டங்கள் உள்ளன என்கிறார். தமிழில் அகராதிக்கலை தழைக்கவந்த பேராசிரியர் அவர்கள்!

XV ஆராய்ச்சி கட்டுரைகள்

பேராசிரியர் மு.ச. சிவம் அவர்கள் இருபைத்தந்து ஆராய்ச்சிக் கட்டுரைகள் ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதி வெளியிட்டிருக்கிறார். செந்தமிழ்ச் செல்வி, குமரகுருபன் குறளியம் போன்ற இதழ்களிலும் பல மலர்களிலும் கட்டுரைகள் வெளிவந்துள்ளன. பல ஆராய்ச்சி மாநாடுகளில் ஆங்கிலத்தில் கட்டுரைகளை எழுதிப்படித்துள்ளார். பக்கங்கள் விரிவடையும் எனக் கருதி இவர்தம் கட்டுரைத் தலைப்புக்கள் ஈண்டுத் தரப்பட்டவில்லை.

சுருங்கக் கூறின் நாளும் வளரும் அகராதிகள் பலவற்றை இயற்றி அன்னைத் தமிழுக்கு அணி செய்யத் தம் வாழ்நாளை ஈடுபடுத்திக் கொண்ட பேராசிரியர் சிவம் அவர்களைத் தமிழக அரசு தக்க ஊக்கம் கொடுத்தும் உதவியளித்தும் போற்றினால் தமிழின் பெருமை விரைவில் உலகெங்கும் பரவும் என்பது திண்ணம்.

*

பேராசிரியர் மு. ச. சிவம் அவர்களுக்கு அறிஞர்களின் பாராட்டுரைகள்.

தமிழக அரசின் 'சட்டச் சொற்களஞ்சியத்'; தலைவர் உயர்திரு. **மா. சண்முகசுப்பிரமணியம்** அவர்கள் :

பட்டத்தைப்பெற்றவுடன் படிப்பனைத்தும் முடிந்ததென்று, இட்டப்படி வாழும் ஏனையோர் போலின்றி, கன்னித்தமிழ் மொழியைக் கவனத்துடன் ஆய்ந்து, அன்னையாம் அவளுக்கு ஆர்வமுடன் பணிசெய்யும் அன்பர் திரு. சதாசிவத்தின் அரிய முயற்சியைநாம் ஆதரித்துப்பாராட்டல் அனைவரின்கடனாகும். (3—9—64)

● ● ●

பன்மொழிப் புலவர் உயர்திரு.
கா. அப்பாத்துரைப்பிள்ளையவர்கள் :

இள ஆசிரிய அன்பர் மு சதாசிவம் தம் கல்வியையும் கலைஅறிவுப் பரப்பையும் தமிழ் வளர்ச்சிப் பணிக்கு ஈடுபடுத்தி உழைத்து வரும் ஓர் ஆர்வத்தொண்டர். பலவகை அகர வரிசைகளிலும் சொல் தொகுப்பேடுகளிலும் இவை போன்ற மொழிவள முயற்சிகளிலும் அவர் ஈடுபாடும் திறமையுங் கண்டு நான் கழி மகிழ்வு கொள்கிறேன். (22—6—65)

● ● ●

பன்மொழிப் புலவர், பல்கலைச் செல்வர் உயர்திரு. **தெ பொ மீனாட்சிசுந்தரனார்** : (முன்னாள் துணைவேந்தர், மதுரைப் பல்கலைக் கழகம்)

திரு. மு. சதாசிவம் அவர்கள் நம்முடைய அகராதிகளில் புதைந்து கிடக்கும் பல செய்திகளைப் பல தலைப்புக்களில் பாகுபடுத்தி அவற்றின் உண்மையை நாம் பல கோணங்களிலிருந்து அறியும்படி செய்யும் தொண்டில் ஈடுபட்டு வருகிறார். (1—1—66)

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு
ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகள் :

ஸ்ரீ மு. சதாசிவம் எம். ஏ. பல ஆண்டுகளாகத் தமிழில் உள்ள தெய்வ சம்பந்தமான பிரபந்தங்களையும், புராணங்களையும் இலக்கியங்களையும் படித்து, அவற்றிலிருந்து தெய்வங்களின் பெயர்கள், திருக்கல்யாண குணங்கள், அருட்செயல்கள் முதலியவற்றைத் தொகுத்து அகர வரிசைப் படுத்திக்கொடுத்திருப்பது மிகவும் போற்றுதற்குரியது.

மனிதர்களுக்கு அருள் செய்யும் தெய்வங்களின் பெருமைகளையெல்லாம் நன்ருகத் தெரிந்து கொள்வதற்கு உதவும் நூல்களை யெல்லாம் மிகவும் சிரமப்பட்டுத் தொகுத்துத் தந்த ஸ்ரீ மு சதாசிவம் ஸ்ரீ த்ரிபுரஸுந்தரி ஸமேத, ஸ்ரீ சந்த்ர மௌளீச்வர க்ருபையால் மேன்மேலும் மேன்மையடைவாராக. (26—5—66)

● ● ●

காரைக்குடி கம்பன் அறநிலைத் தலைவர்,
கம்பன் அடிப்பொடி சா. கணேசன் அவர்கள் :

அகராதித்துறையில் பணிபுரிய முன் வருபவர்கட்கு நல்ல தமிழறிவும், பன்னூற் பயிற்சியும், எந்நூலையும் புறக்கணிக்காத உளப்பாங்கும், சலிப்பற்ற ஊக்கமுடைமையும் நிரம்ப வேண்டும். இத்தகைய குணநலன்கள் இவர்களிடம் நிரம்பியிருக்கின்றன. இவர்கட்கு இத்துறையில் ஈடுபாடு ஏற்பட்டது தமிழ் மக்களின் நற்பேறு என்றே கருதுகிறேன்.

பல்வேறு நூல்களையும் துருவி ஆங்காங்கே விநாயகனை உணர்த்தும் சொற்றொடர்களை எல்லாம் தொகுத்து அகர வரிசைப்படுத்தி, எந்நூலிலிருந்து எடுக்கப்பட்டது என்ற குறிப்புடன், அழகுறத் தொகுத்து வெளியிடுகிருர், திரு மு. சதாசிவம் அவர்கள். இங்ஙனமே இன்னும் பல நூல்கள் இத்துறையில் ஆசிரியரால் வெளிவர இருக்கின்றன என்பதை யறிய என்னைப்போலவே அன்பர்கள் யாவரும் அகமகிழ்வர்

தமிழ்த்தாயின் திருவடிகளில் நிறைந்து கிடக்கும் பன்னிற நறுமலர்கள் தோறும் சென்று, தீஞ்சுவைத் தேன் துளிகளைத் திரட்டிக் கொணர்ந்து, நமக்கெல்லாம் விருந்தருந்தும் தமிழ்த் தேனீயாகத் திகழும் திரு. மு சதாசிவம் அவர்கட்கு எல்லா நலன்களையும் அருள வேண்டுமென்று விநாயகப் பெருமானை வேண்டி வாழ்த்துவோமாக! (1966)

● ● ●

''கல்விக் கடல்'' உயர்திரு. **எஸ். கே. இராமராசன் (கம்பராமன்)** அவர்கள் :

ஆங்கிலத்திற் சான்றோர்கள் வரைநூல் தம்மை
அருந்தமிழிற் படரவிட்டோன் ; கீதை போன்ற
ஓங்கியதத் துவச்சுடரில் மூழ்கி மூழ்கி
ஒப்பற்ற பேரின்பம் பெறுவோன் ; தெய்வப்
பாங்குடைய திருக்குறளின் சாரம் கண்டு
பைந்தமிழின் இதயத்தை யறிவோன் ; என்றும்
தீங்கணுகா அடக்கமெனும் குகையின் கண்ணே
சிவக் கனவில் குளிர்பேர்க்கி உவகை ஆர்வோன்.

● ● ●

சென்னை உயர் நீதி மன்ற நீதிபதி உயர்திரு.
ப. ச. கைலாசம் அவர்கள்

தமிழ் இலக்கியத்திலிருந்து திருமகளைக் குறிக்கும் தொடர்களையெல்லாம் தொகுத்து அகரவரிசைப் படுத்திக் கொடுத்திருக்கும் திரு. மு சதாசிவம் அவர்களின் முயற்சி அனைவரும் பாராட்டுதற்குரிய தொண்டாகும். இன்னும்இது போன்ற நூல்கள் பலவற்றைத் தொகுத்துத் தமிழ் அன்பர்களுக்குத் தர இருக்கும் திரு மு. சதாசிவத்தைப் பெரிதும் பாராட்டுகிறேன். (27—5—66)

பைந்தமிழ்ப்பாவை திருமதி. **சௌந்தராகைலாசம்** அவர்கள் :

'கலைமகள் அருட் செல்வம்' என்ற நூலை அரும்பாடு பட்டு உருவாக்கியுள்ள திரு. மு. சதாசிவம் அவர்களை எப்படிப் பாராட்டுவது என்றே புரியவில்லை. திரு. சதாசிவம் அவர்கள் இதுபோன்ற இன்னும் பல நூல்களை உருவாக்கவும் கல்விச் செல்வத்தோடு பொருட் செல்வத்தையும் அருட் செல்வத்தையும் நீண்ட ஆயுளையும் நீடித்த புகழையும் பெறவும் அருள் புரிய வேண்டும் கலைத்தேவி என்பதுதான் இப்போது என்வேண்டுகோள் 'அவள்' திருமுன்னிலையில்! வளர்க அவர்தம் தெய்வீகத் திருப்பணி! (13—6—66)

● ● ●

வாசவிக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் உயர்திரு. **ஓ. வி. நல்லமுத்து,** எம். ஏ., அவர்கள்

திரு. மு சதாசிவம் அவர்கள் தம் நுண்மாண் நுழைபுலத் தானும் இடைவிடாத முயற்சியாலும் கம்பர் காட்டும் பெண்ணோவியத்தில் சீதையைப் பற்றிக் கம்பர் எங்கெங்கு எவ்வெவ்வாறு அடைமொழி கொடுத்துப் போற்றுகிறார் என ஆழ்கடலில் முத்தெடுத்துத்தொகுத்து மாலையாக நல்குகிறார். அவர்தம் முயற்சி தமிழகத்திலேயே புதுமுயற்சி, புதுப்பாணி.

தமக்கெனத் தனிப் பாதையினை அமைத்துக்கொண்டு இலக்கிய உலகிற்கு நற்றொண்டு ஆற்றி வரும் நண்பர் திரு. மு சதாசிவம் எம். ஏ, அவர்கள் மேன்மேலும் நல்ல ஏடு களையாத்துத் தமிழ்த்தாய்க்குச் சமர்ப்பிக்க வேண்டுகிறேன். தமிழ் கூறு நல்லுலகமும் அவர்தம் முயற்சியினையும். ஆர்வத் தினையும், தொண்டினையும் பாராட்டி ஊக்குவிக்க வேண்டும் என எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகல். (1971)

ஈரோடு வேளாளர் கல்லூரி முதல்வர் திருவாட்டி **பி. சி. பதுமாவதி,** எம். ஏ., பி டி., அவர்கள் :

திருமகளின் பெயர்களையும், கலைமகளின் பெயர்களையும் மணியாரமாக ஆக்கித் தந்தவர் பெண்ணின் பெயர்களையும் அணிமாலையாகத் தொகுத்துத் தந்துள்ளார். கவிதை புனை வார்க்கும் காவியம் வரைவார்க்கும் உறுதுணையாகும், ஒரு முனைப்பட்ட நோக்கோடு பல நூல்களை ஆய்ந்து கூறியுள்ள திறம் பாராட்டற்குரியது. இவர்தம் நல்முயற்சி மேலும் மேலும் வளர்வதாக. (17—12—71)

● ● ●

ஈரோடு கலைமகள் கல்வி நிலையத் தலைமையாசிரியை செல்வி **எம். முத்தையா,** பி. ஏ., பி. டி., அவர்கள் :

நல்ல பல நூல்களை இயற்றி நந் தமிழன்னைக்குத் தொடர்ந்து அணி செய்து வரும்ஆசிரியர் திரு. மு. சதாசிவம் அவர்கள் தமிழ் மக்களின் போற்றுதலுக்கு உரியவர். அவரைப் பாராட்டுவதில் யானும் பெரிதும் உவகையடை கின்றேன். (1—12—1971)

★ ★ ★

பேராசிரியர் அ. சீனிவாசராகவன் அவர்கள்,
தூத்துக்குடி. (தேதி 29—4—1969)

1 வாசவிப் பெயரால் வளர்கலைக் கோயில்
வளமுறத் தமிழ்விரி வுரைக்கும்
ஆசிரியச் சீர் ஆன்றவன் எம்பி
அன்புளச் சதாசிவம் காண,
ஆசையின் அளவும் அணவிடும் உவர்த்த
அளங்களின் அனற்கரை விளிம்பில்,
கூசிடும் 'நாணல்' குறையெலாம் தவிர்ந்து
குளிர்ந்த நெஞ் சொடுவிடும் ஓலை.

2 அஞ்சன வண்ணன் ஆருயிர் உய்ய
அறந்தலை நிறுத்திட இறங்கி
வெஞ்சின அரக்கர் வெருக்கொள நெருக்கி
வில்இயல் அருளிய விமலன்
விஞ்சையை விலகாச் செஞ்சொலால் தொடர்ந்து
வியன்கவிக் கம்பனைத் தொடர்ந்தாய்,
நெஞ்சிலே நாளும் அவன் 'அருட் செல்வம்'
நிறுத்திடும் கருவிநூல் நேர்ந்தாய்.

3 அங்கொரு சொல்லும் இங்கொரு சொல்லும்
அகப்பட அவற்றைவைத் தோட்டைச்
சங்கென முழங்கித் தருக்கிடும் மேடைச்
சதுரர்கள் மலியுமிந் நாளில்,
தங்கிஞய் அகன்ற காவிய அடைவில்
தனித்தனிப் பாடலாய் ஆய்ந்தாய்;
இங்கெமக் குவந்தாய் இறைவனைக் கம்பன்
ஏத்திய எழிற்ருெடர் எல்லாம்.

4 வென்றி உன் முயற்சி விமர்சனக் கலைக்கு
விளைந்தது பெருந்துணை அதனால்;
என்றனைப் போல்வார் கம்பனை அணுகி
ஆய்வதை எளிமையாய் அமைத்தாய்.
உன்றன துழைப்பை அதுதரும் விழுப்ப
உயர்வினை உணர்கிறேன், எம்பீ!
நன்று நன் றென்ன வாழ்த்துவேன் இதுபோல்
நயந்திடு பற்பல நூல்கள்.

திருப்பணிச் சக்கரவர்த்தி,
திருமுருக
கிருபானந்த வாரியார்
அவர்கள்

அருள்மொழியரசு
89 சிங்கண்ண செட்டித் தெரு,
சிந்தாதிரிப் பேட்டை,
சென்னை — 2.

வேலைவணங்குவதே வேலை

காலம் : 18—10—74.
இடம் : ஈரோடு.

திருமுருகன் திருவருளால் செந்தமிழ்ச் செல்வர் உயர்திரு மு. சதாசிவம். எம். ஏ அவர்கள் தண்டமிழ்க் கடலில் மூழ்கி அரிய பெரிய ஆணிமுத்துக்களை யெடுத்துப் பலப்பல நூல்களை எழுதியுள்ளார். இவருடைய அயர்ச்சி யில்லாத முயற்சி உயர்ச்சியுடையது. தமிழ் உலகுக்கு இவருடைய நூல்கள் கழிபேருவகை தருகின்றன.

இவருடைய அறிவின் திறத்தைக் கண்டு மகிழ்கின்றேன். இளம் பூரணன் இன்னருளால் இனிது வாழ்க !

கம்பன் அடிப்பொடி திரு. சா. கணேசன் அவர்கள்

(19—4—69)

அன்புச் சோதர,

வணக்கம் ; உங்கள் 17—4—69 கடிதம்,
எண்ணிய எண்ணிய ஆங்கு எய்துதற்கு
அடிப்படை திண்ணிய நல் – நெஞ்சே யன்றோ ?
அவனருளை முன்னிட்டுத் தன்னம்பிக்கையுடன்
தொடங்கும் எப்பணியும் செய்விதின் நிறை
வேறுமன்றோ ?

அடியேன் சிறியேன் ; எதையும் ஆற்றகில்லேன்
ஆயினும் அவன் அருள்வான் ; முடித்துத்தருவான்
என்பதில் அசையா நம்பிக்கையுடையேன்.
அந்தத் ''திமிர்'' தான் நல்லனவற்றில் ஈடுபடச்
செய்யும் தூண்டுகோலாக, செண்டாக நின்று
எளியேனை இயக்குகின்றது

நீங்கள் கருதுவதும், புரிவதும் அருமையான
வை, பயன் தருபவை எதற்கும் கவலற்க !
இறைவனை நம்பிப் பணியைத் தொடர்க !
பூக்கும் ; காய்க்கும் ; கனியும் உலகெல்லாம்
சுவைத்து, உண்டு, மகிழ்ந்து, உய்யும்.

அவ்வப்பொழுது செய்தி தருக ! ஆவன யாவும்
ஆர்வத்தொடு புரிவென்.

இராமனருட் செல்வத்தைத் தொடவும் ஓய்வின்றித் தவிக்கிறேன். விரைவில் படித்து எழுதுவென்.

''கம்பனில் உயிரினங்கள்'' என்பது என் முகவுரையுடன் கேரளப் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள ஒரு நூல் அதை நீங்கள் பார்த்திருக்கலாம். இப்பொழுது ''கம்பனில் தாவரங்கள்'' என்ற நூலை ஆக்கி வெளியிடவுள்ளார்கள். என் முகவுரைக்காகக் காத்துக் கிடக்கிறது. ஒரு திங்களுக்குள் முகவுரை தரவேண்டும். எனவே அதைத் தோய்ந்து படித்துக் கொண்டிருக்கிறேன். நல்ல பணி செய்கிறார்கள். அடியேனைக் கேட்டே சில தலைப்புகளை எடுத்துக் கொண்டுள்ளார்கள் அவற்றையும் நீங்கள் பார்ப்பது பயன் தருவதாகும்.

எப்படியோ கம்பன் பணி எங்கெங் கெல்லாமோ தொடங்கிப் பயன் கொழிக்க இறைவன் திருக்கண் சார்த்தி விட்டான். வாழ்க ! வளர்க ! மலர்க ! மணக்க ! என்று மனங்குளிர, வாய்மணக்க வாழ்த்துவோம்.

ANNAMALAI UNIVERSITY

Annamalainagar,
12th May, 1957.

Mr. M Sadasivam was a student of the Annamalai University for the last three years. He is a very intelligent and industrious young man. He has remarkable love for language study and is sure to bring credit in that line.

He is of pious disposition and is anxiously seeking the truth.

He has my good wishes for success in life.

(Sd) A. C. Chettiar
Head of the Department of Tamil
ANNAMALAI UNIVERSITY.

Mr. UNNI, M. A.,
(Madras Educational Service)
LECTURER IN ENGLISH,
Government Arts College,
COIMBATORE.

Sri M Sadasivam has been my colleague from the beginning of this Academic year I have found him to be a very gifted student of Literature. In literary matters he has discriminating tastes and fine judgement. He has a passion for knowledge and is well-read. I understand that he is liked and admired by his students for his learning and teaching ability.

Sri Sadasivam is a gentleman of admirable disposition and pleasing mannners. His character and conduct are excellent

(Sd) M. R. Unni
English Department, 7-4-1969.
Govt. Arts College
COIMBATORE.

K. ALUDAIA PILLAI, B Com., (Hons), M. E. S.,
Lecturer in Commerce,
Govt. Arts College,
COIMBATORE. 27-2-1958.

This is to certify that Mr M. Sadasivam B A., (Hons) is well known to me and he bears excellent conduct and character. He is a voracious reader with infinite capacity for hard work He is by nature gentle and polite. He has a high sense of duty.

I wish him success.

(Sd) K Aludaia Pillai.

O— O

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS
PUBLISHING SOCIETY,
1/140, Broadway,
MADRAS-1
2nd Sept. 1964

This is to certify that Sri M. Sadasivam, M. A., was in our employ for about three and a half years and that he was relieved from his duties on the 26th August 1964. During his services with us, he was found to be sincere and hard-working We wish him success in future

(Sd) S K; Sundaram,
General Manager.

Tamil Perum Pulavar

Prof S. Arumuga Mudaliyar,
M. A. B. O L, L T.,
Principal Sri Palaniyandavar College
of Oriental Culture, Palani.
Dated 9th Sep 1966

I have known M. Sadasivam, M A., Tutor in Tamil, Sri Palaniandavar Arts College, Palani for over 9 years intimately. He was a keen and intelligent student of more than average abilities and his attainments in the various branches of knowledge in the Tamil language and Literature, like comparative Grammar Dravidian, History of the Tamil language and Literature, Principles of Comparative Philology and Linguistics, (He underwent a course at the Summer School of Linguistics at the Deccan College, Poona 1958 and obtained certificate for the same), Principles of Literary criticism, History of Tamilnadu and Culture etc., are very high.

Letter from Dr. Kamil Zvelebil of Czechoslavakia.
Camp: Madras
31—12—75

May I send you my questionnaires and would you be willing to go through them and answer the questions in writing? I regard you as one of the most well-informed and reliable informants. I indeed hope that we shall go on co-operating on the translation of the கந்தபுராணம்.

The list of your books, published and unpublished, is staggeringly impressive. How do you find time and energy for all this?

I have dispatched today the library book of Kandapuranam by registered post to you

With best wishes.

Kamil Zvelebil.

உயர்திரு அ. சீனிவாசராகவன் அவர்களுடைய பாராட்டுக்குப் பேராசிரியர் மு. ச. சிவம் அவர்கள் வரைந்த நன்றிப்பா

கம்பனூர் ஆழ்ந்த கவியுளங் கண்டு
களிப்பெனுங் கடலினைக் கடந்தோய்
நம்மனோர் தாமும் நாம்பெறு மின்பம்
நயந்திடல் நன்றென நயந்தோய்
செம்பொனூர் மேனித் தேசுடன் நாவும்
செவ்விய உள்ளமும் சிறந்தோய்
தம்முனூ உன்னைப் பெற்றதோர் தகையால்
தனிப் பெருங் களிப்பினுள் திளைத்தேன்.

எம்பீ என்றெனை ஏழையை அழைத்த
இதங்கண் டேன்
நம்பீ! இராகவப் பெயருடன் பண்பையும்
நனிபெற் றோய்
தம்பீ என்றெனைச் சாற்றிய சொல்லொரு
சொல்லன் றோ
உம்பீ யாகும் பேற்றினைப் பெற்றுளம்
உவக்கின் றேன்.

பற்பல அறிஞர் தம்முழைச் சென்று
பகருமின் மதிப்புரை எனற்கே
முற்பட விழைந்தேன் முயற்சிகை விட்டேன்
முதுபெரும் புலமையிற் சான்றோய்
நிற்படு மதிப்புரை ஒன்றே சான்மென
நினைத்துனை வழுத்திநிற் கின்றேன்
எற்படு 'நாணல்' எழுதிய உரையினும்
ஏவரே இயம்பிட வல்லார்?

திக்கெலாம் புகழும் திருநெல்லைச் சீமை
சேர்த்துள புகழ்களை எல்லாம்
ஒக்கவே நீயே ஒருவனாய்ப் பெற்றாய்
உன்புகழ் விரித்துரைக் கில்லேன்
தக்கவர் போற்றும் தகைமையோய் என்றன்
சற்குரு வினுக்குமோர் குருவே
மிக்கவாழ் நாளைப் பெற்றுல குவப்ப
வெண்சிறைப் பறவையாய் வாழ்க!